மேலும், 223 மாணவர்கள் இலவச கணினி பயிற்சி பெறுவதற்கான உத்தரவுகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

**அரசு மகளிர் கல்லூரி:** பூம்புகார் நகர் 1-ஆவது பிரதான சாலையில் அரசு மகளிர் கல்லூரி அமையும் இடம், வீனஸ் நகர் ஆண்கள் விடுதிக் கட்டடம், நீரேற்று நிலையம், துணை மின் நிலையம் ஆகியன அமைக்கப்பட உள்ள இடங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்வின் போது, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டப் பேரவை உறுப்பினர் தாயகம் கவி, சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



சென்னை கொளத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகத்தில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை புதன்கிழமை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளிட்டோர்.

## இணையவழியில் ஆக.18 முதல் வகுப்புகள்: அண்ணா பல்கலை. அறிவிப்பு

**சென்னை, ஜூலை 28:** இளநிலை பொறியியல் மற்றும் முதுநிலை பொறியியல் வகுப்புகள் ஆகஸ்ட் 18-ஆம் தேதி முதல் இணைய வழியில் தொடங்கவுள்ளதாக அண்ணா பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகள் அனைத்தும் ஆகஸ்ட் 18-ஆம் தேதி முதல் இளநிலை மற்றும் முதுநிலை வகுப்புகளுக்கு இணையவழியில் கற்பித்தலைத் தொடங்கலாம் என்று அண்ணா பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. முதலாம் ஆண்டு நீங்கலாக 3, 5 மற்றும் 7-ஆவது செமஸ்டர் பொறியியல் மாணவர்களுக்கும் முதுகலை 3, 5- ஆவது செமஸ்டர் மாணவர்களுக்கும் இந்தக் கால அட்டவணை பொருந்தும்.

ஆகஸ்ட் 18-ம் தேதி இணைய வழி வகுப்புகள் தொடங்கி, நவம்பர் 30-ஆம் தேதி வரை நடைபெறும். மேலும் பருவத்தேர்வுக்கான செய்முறைத் தேர்வுகள் டிசம்பர் 2-ஆம் தேதியும், எழுத்துத் தேர்வுகள் டிச.13-ஆம் தேதியும் தொடங்கும் என்று அண்ணா பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

**அடுத்த பருவத்துக்கான வகுப்புகள்:** அரசின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, இணையவழியில் வகுப்புகள் நடத்தப்படும். அதேபோல அடுத்த பருவத்துக்கான வகுப்புகள் 2022-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் தேதி தொடங்கப்பட வேண்டும் என்றும் அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

# 7,715 மெ.டன் வண்டல் மண், ஆகாயத் தாமரைகள் அகற்றம்

**சென்னை, ஜூலை 28:** பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட நீர்வழிக் கால்வாய்களில் நவீன இயந்திரங்களைக் கொண்டு 7,715 மெட்ரிக் டன் வண்டல் மண், ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் துறையின் சார்பில் 48.80 கி.மீ. நீளமுள்ள 30 நீர்வழிக் கால்வாய்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநகராட்சியின் இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் அதிநவீன இயந்திரங்களான நீர் மற்றும் நிலத்தில் இயங்கும் ஆம்பிபியன் இயந்திரங்கள் மற்றும் ரொபோடிக் எக்ஸ்கவேட்டர் இயந்திரங்கள் ஆகியவற்றின் உதவியுடன் நீர்நிலைகளில் படர்ந்துள்ள ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

**7,715 மெட்ரிக் டன் அகற்றம்:** இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், பருவமழை காலத்துக்கு முன்னதாகவே நீர்வழிக் கால்வாய்களில் ஆகாயத்தாமரைகள், வண்டல்கள் தூர்வாரப்பட்டு தண்ணீர் தங்குதடையின்றி செல்லும் வகையில் பராமரிப்பு பணிகளும், கொசுப்புழுக்கள் வளர்வதைக் கட்டுப்படுத்த ட்ரோன் மூலம் கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 30 நீர்வழிக் கால்வாய்களில் 2 நவீன ஆம்பிபியன், 3 சிறிய ஆம்பிபியன் மற்றும் 4 ரொபோடிக் எக்ஸ்கவேட்டர் இயந்திரங்கள் கொண்டு ஜூன் மாதம் முதல் தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது. இதன்படி, புதன்கிழமை (ஜூலை 28) வரை இந்த நீர்நிலைகளில் இருந்து 7,715 மெட்ரிக் டன் வண்டல் மண், ஆகாயத் தாமரைகள் அகற்றப்பட்டுள்ளன. இந்த ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்றனர்.

# அரசு மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சை மருத்துவர்களை அதிகரிப்பது அவசியம்

**தாம்பரம், ஜூலை 28:** தமிழகத்தில் தனியார் மருத்துவமனைகளில் பணிபுரிந்து வரும் சிறப்பு மருத்துவச் சிகிச்சை மருத்துவர்களுக்கு நிகராக அரசு மருத்துவமனைகளிலும் திறமை மிகுந்த சிறப்பு மருத்துவர்களை அதிகரிக்க உரிய நடவடிக்கை எடுப்பது அவசியம் என்று மருத்துவரும், ஆயிரம் விளக்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான டாக்டர் என்.எழிலன் கூறினார்.

சென்னை ஜெம் மருத்துவமனையில் புதன்கிழமை நடைபெற்ற குழந்தைகளுக்கான இரைப்பை மற்றும் குடல்சார் நோய் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு தொடக்கவிழாவில் அவர் மேலும் பேசியது:

இதர மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழ் நாட்டில் 543 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற மருத்துவக் கட்டமைப்பைப் பெற்று நாம் பின்லாந்து நாட்டுக்கு நிகராக இருப்பது பெருமைக்குரியது. ஆனால் சூப்பர் ஸ்பெஷாலிட்டி என அழைக்கப்படும் நவீன சிறப்பு மருத்துவச் சிகிச்சை மருத்துவர்கள் எண்ணிக்கை அரசு மருத்துவமனைகளில் போதிய எண்ணிக்கையில் இல்லை. சிறப்பு மருத்துவச் சிகிச்சைக்கு தனியார் மருத்துவமனைகளைத் தான் நாடும் நிலை உள்ளது என்றார் அவர்.

ஜெம் மருத்துவமனை தலைவர் டாக்டர் சி.பழனிவேலு கூறுகையில், குழந்தைகளிடையே தவறான உணவுப் பழக்கம் காரணமாக செரிமானக் கோளாறு வருவது கவலைக்குரியது. உலகெங்கும் சராசரி 10% குழந்தைகள் குடல் மற்றும் இரைப்பை சம்பந்தமான பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊட்டச்சத்து குறைபாடு குறித்த ஆய்வு நடவடிக்கைகளுக்கு குழந்தைகளுக்கான காஸ்ட்ரோ என்டோராலஜி தேவை அவசியம் என்றார்.

மருத்துவமனை தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் எஸ்.அசோகன், இயக்குநர் டாக்டர் பி.செந்தில் நாதன் துறைத் தலைவர் டாக்டர் வினோத் குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.




ஜெம் மருத்துவமனையில் குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை பிரிவு தொடக்க விழாவில் (இடமிருந்து) மருத்துவர்கள் ஜெயேந்திரா, தென்னரசு, டாக்டர் சி.பழனிவேலு, பேராசிரியர் கிருஷ்ணராவ், டாக்டர் என்.எழிலன்.

## இங்கிலாந்து பல்கலை.யில் படிக்க வைப்பதாக ரூ.38.89 லட்சம் மோசடி: இளைஞர் கைது

**சென்னை,ஜூலை 28:** இங்கிலாந்து நாட்டில் உள்ள பல்கலைக்கழகத்தில் படிக்க வைப்பதாக ரூ.38.89 லட்சம் மோசடி செய்ததாக இளைஞர் கைது செய்யப்பட்டார்.

சென்னை சாலிகிராமம் ஆற்காடு சாலைப் பகுதியைச் சேர்ந்தவர் மா.வெங்கடேசன் (23). பி.இ. படித்த இவர், இங்கிலாந்து நாட்டில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பு படிக்க முயன்றார். இது தொடர்பாக விருகம்பாக்கத்தில் வெளிநாடுகளில் வேலை மற்றும் மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பைப் பெற்றுத் தரும் நிறுவனத்தை நடத்தும் கேளம்பாக்கத்தைச் சேர்ந்த நா.கார்த்திக் (35) என்பவரை சந்தித்தார்.

அப்போது அவர், இங்கிலாந்து நாட்டில் உள்ள அந்த பல்கலைக் கழகத்தில் படிக்க இடம் பெறுவதற்கும், கல்விக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவுகளும் சேர்த்து ரூ.38.89 லட்சம் செலவாகும் என தெரிவித்துள்ளார். அவரது பேச்சை நம்பிய வெங்கடேசன் குடும்பத்தினர், அந்தப் பணத்தை பல தவணைகளாக கார்த்திக்கிடம் வழங்கினர்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட கார்த்திக், வெங்கடேசனை படிப்பதற்கு இங்கிலாந்து அனுப்பவில்லை. இதையடுத்து வெங்கடேசன் குடும்பத்தினர், தாங்கள் கொடுத்த பணத்தை திருப்பித் தருமாறு கேட்டனர்.

ஆனால் கார்த்திக், பணத்தையும் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றினார். இதையடுத்து அவர்கள், விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் செய்தனர். ஆனால் போலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதைத் தொடர்ந்து அவர்கள், கார்த்திக் மீது நடவடிக்கை எடுக்க காவல்துறைக்கு உத்தரவிடக் கோரி சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அந்த மனுவை விசாரித்த சைதாப்பேட்டை நீதிமன்றம், பணம் மோசடி செய்த கார்த்திக் மீது வழக்குப் பதிவு செய்து, நடவடிக்கை எடுக்கக் கோரி உத்தரவிட்டது.

இந்த உத்தரவின் அடிப்படையில் விருகம்பாக்கம் போலீஸார், கார்த்திக் மீது மோசடி வழக்குப் பதிவு செய்தனர். இந்நிலையில் தலைமறைவாக இருந்த கார்த்திக்கை புதன்கிழமை கைது செய்த போலீஸார், வழக்குத் தொடர்பாக மேலும் ஒருவரை தேடி வருகின்றனர்.

# திமுக ஆட்சி மீது மக்களுக்கு வெறுப்பு வந்துவிட்டது

**கே.அண்ணாமலை**

**சென்னை, ஜூலை 28:** திமுக ஆட்சி மீது மக்களுக்கு வெறுப்பு வந்துவிட்டது என்று பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை கூறினார்.

சென்னை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: திமுக அரசுக்கு எதிராக அதிமுக நடத்தும் போராட்டம் நியாயமானது. திமுகவின் உண்மை முகத்தைக் காட்டவே போராட்டம் நடத்தப்படுகிறது. 75 நாள்களாகியும் கொடுத்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை. நீட் தேர்வை ரத்து செய்வோம், பெட்ரோல், டீசல் விலையைக் குறைப்போம் எனக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. திமுக ஆட்சியைப் பார்த்து மக்களுக்கு வெறுப்பு வந்துவிட்டது. மக்கள் பிரச்னைகள் அனைத்துக்கும் பாஜக துணை நிற்கும். மீனவர்களுக்கு எதிராக திமுக செயல்படுவதைக் கண்டித்து பாஜக மீனவர் அணி சார்பில் ஜூலை 30-இல் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

பெட்ரோல், டீசல் விலையைக் குறைப்பதற்கு மத்திய அரசு தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறது என்றார்.

## ஓவிய ஆசிரியர் கொலை: மனைவி உள்பட மூவர் கைது

**ஸ்ரீபெரும்புதூர், ஜூலை 28:** சுங்குவார்சத்திரம் அருகே ஓவிய ஆசிரியரை கொலை செய்து ஆற்றில் புதைத்ததாக, அவரது மனைவி உள்ளிட்ட மூவரை போலீஸார் கைது செய்தனர்.

சுங்குவார்சத்திரத்தை அடுத்த சிவபுரத்தைச் சேர்ந்த அன்பழகன்(53), சென்னை தனியார் பள்ளி ஓவிய ஆசிரியர். மனைவி ஷோபனா. கடந்த ஜூன் 23-ஆம் தேதி முதல் அன்பழகனைக் காணவில்லையாம். மனைவி ஷோபனா தலைமறைவாக இருந்தாராம். ஷோபனாவை விசாரித்த போது, அவரது நண்பரான சிவபுரம் தர்மராஜ், விக்னேஷ் ஆகியோருடன் சேர்ந்து அன்பழகனைக் கொலை செய்து கூவம் ஆற்றின் கரையில் புதைத்தது தெரியவந்துள்ளது. இதையடுத்து, மூவரையும் போலீஸார் கைது செய்தனர்.

# கல்லீரல் அழற்சி தடுப்பு தினம்: அரசு மருத்துவமனைகளில் கடைப்பிடிப்பு

**சென்னை, ஜூலை 28:** உலக கல்லீரல் அழற்சி தடுப்பு தினம் சென்னை அரசு மருத்துவமனைகளில் புதன்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

அதன் ஒரு பகுதியாக விழிப்புணர்வு கருத்தரங்குகளும், ஹெபடைடிஸ் பி தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்தியாவில் ஏறத்தாழ 4 கோடிக்கும் மேற்பட்டோர் நாள்பட்ட கல்லீரல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. மொத்த பாதிப்பில் 43 சதவீதம் பேர் ஹெபடைடிஸ் - பி வகை கல்லீரல் புற்றுநோயால் பாதிக்கப்படுவதாகவும், அதில் 42 சதவீதம் பேர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதும் அதிர்ச்சிக்குரிய தகவலாக உள்ளது. இதையடுத்து அதனைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக உலக கல்லீரல் அழற்சி தடுப்பு தினம் ஆண்டுதோறும் ஜூலை 28-ஆம் தேதி அனைத்து மருத்துவமனைகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நிகழாண்டில் அரசு மருத்துவமனைகளில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை, ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு கருத்தரங்குகள் நடைபெற்றன. அதனுடன் மருத்துவப் பணியாளர்களுக்கு ஹெபடைடிஸ் பி தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆர்.ஜெயந்தி, கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை இயக்குநர் டாக்டர் கலைவாணி, துணை முதல்வர் டாக்டர் சுகுணா பாய், பேராசிரியர்கள் ஷர்மிளா, அபர்ணா, தேவசேனா, மங்கள கீதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து, ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஜெயந்தி கூறியதாவது:

கல்லீரல் அழற்சி நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஆரம்பநிலையிலேயே அப்பிரச்னையைக் கண்டறிவதுதான் சிறந்த வழி. ஹெபடைடிஸ் பி வகை பாதிப்புகள் வராமல் தடுக்க தடுப்பூசிகள் பெரிதும் உதவும். எனவே, அனைவரும் அத்தடுப்பூசியை தேவை அறிந்து செலுத்திக் கொள்ள வேண்டும்.

ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கர்ப்பிணிகளுக்கு ஹெபடைடிஸ் பி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஹெச்ஐவி நோயாளிகள், டயாலிசிஸ் சிகிச்சையில் உள்ளவர்கள் உள்ளிட்டோருக்கு ஹெபடைடிஸ் பி மற்றும் சி தொற்று பரவ அதிக வாய்ப்புள்ளதால் அவர்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது.

ஹெபடைடிஸ் பி தொற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு 24 மணி நேரத்துக்குள் ஹெபடைடிஸ் பி மற்றும் ஹெபடைடிஸ் பி இம்யூனோக்ளோபின் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு ஹெபடைடிஸ் பி வகை தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

இதேபோன்று, ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையிலும் கல்லீரல் அழற்சி தினம் கடைப்பிடிக்கப்பட்டது.



சென்னை ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதன்கிழமை நடைபெற்ற கல்லீரல் அழற்சி தடுப்பு தின நிகழ்ச்சியில் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஹெபடைடிஸ் பி தடுப்பூசி செலுத்துவதை பார்வையிடும் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆர்.ஜெயந்தி.

# மகளிருக்கு 33 % இடஒதுக்கீடு

## திமுக எம்.பி. கனிமொழிக்கு சட்ட அமைச்சர் பதில்

**புது தில்லி, ஜூலை 28:** நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் சட்டம் கொண்டுவர வேண்டுமானால், அனைத்து அரசியல் கட்சிகளுக்கிடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டால் தான் சாத்தியம் என்று என்று மத்திய சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு மக்களவையில் புதன்கிழமை தெரிவித்தார்.

இதுதொடர்பாக திமுக எம்.பி. கனிமொழி கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

**கால்நடை பராமரிப்புக்கு இ-கோபாலா:** மேலும், ஸ்ரீபெரும்புதூர் மக்களவை உறுப்பினரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான, டி.ஆர்.பாலு, மக்களவையில், பால் பண்ணை, கால்நடைகள் மேம்பாட்டுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் புருஷோத்தம் ரூபாலா அளித்த பதிலில், கடந்த செப்டம்பர் 2020-இல், பிரதமர் மோடி இ-கோபாலா என்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளார்.

தேசிய கால்நடைகள் நோய்த் தடுப்பு திட்டத்தின் கீழ், இந்தியாவில் 53 கோடிக்கும் அதிகமான கால்நடைகள் இனம் கண்டறியப்பட்டுள்ளது. 16 கோடிக்கும் அதிகமான எருமை இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச கால்நடைகள் பதிவுக் குழுவின் பரிந்துரையின் பேரில், கால்நடைகளுக்கான தரவுகள் மேம்படுத்தப்பட்டு வரப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

# சிலம்ப வீரர்களுக்கும் இடஒதுக்கீட்டின்கீழ் அரசு வேலை

## ஆய்வு செய்ய முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் செயல்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டம்.

**சென்னை, ஜூலை 28:** இடஒதுக்கீட்டின் கீழ் அரசுப் பணிகள் அளிப்பதற்கான விளையாட்டுகளின் பட்டியலில் சிலம்பத்தைச் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அதிகாரிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் செயல்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்ட போது அவர் பேசியது:-

ஒவ்வொரு விளையாட்டிலும் திறமையும், ஆர்வமும் உள்ள கிராமப்புறங்களைச் சார்ந்த மாணவர்களைக் கண்டறிய வேண்டும். அவர்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவு, உறைவிடம், தேவையான விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதுடன், உயர் செயல்திறன்மிக்க பயிற்சி அளித்துப் பன்னாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கான நடவடிக்கைகளை ஆராய வேண்டும்.

சென்னையில் பிரமாண்ட விளையாட்டு நகரம் அமைத்து அனைத்து வகையான போட்டிகளுக்கும் உயர்தரப் பயிற்சி அளிக்க வேண்டும். தமிழ்நாட்டின் அரசு வேலைவாய்ப்புகளில் விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும். தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் விளையாட்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் அளித்திட ஆய்வு செய்ய வேண்டும் என்றார். இந்தக் கூட்டத்தில், அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




அசுரவதம்...

தடுப்பூசியே பக்கபலம்...

☞ கொவைட் அரக்கனை விரட்டுவதற்கு தடுப்பூசி போட்டுக்கொள்வதே தலையாய கடமை.

தகவல்:
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்.


# கரோனாவிலிருந்து குணமடைந்த பலருக்கு ரத்த நாள அடைப்பு

## ராஜீவ் காந்தி மருத்துவமனை முதல்வர்

**சென்னை, ஜூலை 28:** கரோனாவிலிருந்து குணமடைந்த பிறகு பலருக்கு ரத்தநாள அடைப்பு, நரம்பு பிரச்னைகள் ஏற்படுவதாக ராஜீவ் காந்தி மருத்துவமனையின் முதல்வர் டாக்டர் தேரணி ராஜன் தெரிவித்தார்.

கரோனாவுக்கு பிந்தைய சிகிச்சைகளுக்கு பெரும்பாலானோர் வராமல் காலந்தாழ்த்துவதே அதற்கு காரணம் என அவர் கூறினார்.

கரோனா இரண்டாவது அலையின்போது பலருக்கு எதிர்விளைவுகள் ஏற்பட்டன. குணமடைந்து வீடு திரும்பியவர்கள் சிலருக்கு கருப்பு பூஞ்சை, நுரையீரல் சார்ந்த பாதிப்பு, ரத்த நாள அடைப்பு, நரம்பு சார்ந்த பிரச்னைகள் ஏற்பட்டன.

இதையடுத்து அதுகுறித்த பாதிப்புகளுக்காக தமிழகத்தின் பல்வேறு மருத்துவமனைகளில் கரோனாவுக்கு பிந்தைய சிகிச்சை மையங்கள் தொடங்கப்பட்டன. ஆனால், அங்கு சிகிச்சைக்கு வருவோர் பாதிப்புகள் முற்றிய நிலையிலேயே வருவதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை முதல்வர் டாக்டர் தேரணிராஜன் கூறியதாவது:

கரோனாவிலிருந்து குணமடைந்தவர்கள் தொற்று உறுதி செய்யப்பட்ட நாளில் இருந்து 28 நாள்கள் கழித்து கரோனாவுக்கு பிந்தைய கண்காணிப்பு மையத்துக்கு வந்து உடல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

அந்த மையத்தில் பொதுநலம், இதய நலம், சர்க்கரை நோய், உணவுப் பிரிவு, ரத்த நாள சிறப்பு பிரிவு, மனநல பிரிவு, யோகா பிரிவு, நுரையீரல் துறை மற்றும் ஆய்வக வசதி உள்பட 15 துறைகளை ஒருங்கிணைத்து நோயாளிகளுக்கு பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தி மருத்துவமனையில் முதல் அலையின் போது கரோனாவில் இருந்து மீண்ட மொத்தம் 1,327 பேர் பரிசோதனை செய்து கொண்டு சிகிச்சை பெற்றனர். ஆனால் இரண்டாவது அலையில் கரோனாவுக்கு பிந்தைய கண்காணிப்பு மையத்துக்கு வருபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. தினசரி 5 முதல் 6 பேர் மட்டுமே வருகின்றனர். தொலைபேசியில் தொடர்பு கொண்டு பரிசோதனைக்கு அழைத்தாலும் பொதுமக்கள் பரிசோதனைக்கு வர ஆர்வம் காட்டுவதில்லை.

இதன் காரணமாக புதிதாக சர்க்கரை நோயாலும், பக்கவாதத்தாலும், ரத்த நாளங்களில் அடைப்பு போன்ற பிரச்னைகளாலும் பலர் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. அவ்வாறு கரோனாவிலிருந்து குணமடைந்த பிறகு ரத்த நாள அடைப்பால் பாதிக்கப்பட்ட 117 பேர் இங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஆரம்ப நிலையிலேயே பரிசோதனை மேற்கொண்டால் இதுபோன்ற பாதிப்புகளை தவிர்க்கலாம். இதுதொடர்பாக பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்றார் அவர்.

# குழந்தை இலக்கிய பாடங்களை மேம்படுத்த புதிய திட்டம்

## திண்டுக்கல் லியோனி

**சென்னை, ஜூலை 28:** குழந்தை இலக்கியப் படைப்பாளிகளை அணுகி வாழ்வியல் தொடர்புடைய பாடங்களை சுலபமான முறையில் கற்பிக்க 'பாடல்கள் மூலம் பாடம்' திட்டம் செயல்படுத்தப்படும் என தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி கூறினார்.

சென்னை கோட்டூர்புரத்தில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது: முதல்வர் ஸ்டாலின் பதவியேற்றவுடன் பூங்கொத்து மற்றும் சால்வைக்கு பதிலாக புத்தகங்களை கொடுங்கள் என்று கோரிக்கை விடுத்திருந்தார். அதன்படி 2 லட்சம் புத்தகங்களை பெற்று 50 நூலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பாடநூல் கழகத்துக்கு சிலப்பதிகாரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யவும், பொன்னியின் செல்வன் புத்தகத்தை மலையாள மொழியில் மொழி பெயர்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மீண்டும் பாடம் நடத்த முடிவு:** கல்வி தொலைக்காட்சியில் வாரம் ஒருமுறை இயற்பியல், வேதியியல், ஆங்கில பாடங்களை மாணவர்களுக்கு நடத்தவுள்ளேன்.

குழந்தை இலக்கியம் தொடர்புடைய பாடங்களை மேம்படுத்த அரசு ஒரு கோடி நிதி ஒதுக்கியுள்ளது. குழந்தை இலக்கியப் படைப்பாளிகளை அணுகி வாழ்வியல் தொடர்புடைய பாடங்களை சுலபமான முறையில் 'பாடல்கள் மூலம் பாடம்' என்ற வகையிலும் , செய்முறை விளக்கமாகவும் , குழந்தைகளுக்கு ஏற்றவாறு கற்பிக்கும் வகையில் உரிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். 57 சிறந்த புத்தகங்களை நாட்டுடைமை ஆக்கி, குடிமைப் பணிகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் ரூ.57 லட்சம் நிதி ஒதுக்கி புத்தகங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்ணா நூலகத்தில் ஐஏஎஸ் போன்ற குடிமை பணிகளுக்கு தயாராகும் மேலும் 300 பேர் அமரும் வகையில் இடத்தை சீர்செய்ய வேண்டும் என முதல்வர் மற்றும் கல்வித்துறையிடம் கோரப்படும் என்றார் அவர்.

# பங்காரு அடிகளாரிடம் அமைச்சர் ஆசி

**மதுராந்தகம், ஜூலை 28:** மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில், ஊரகத் தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் புதன்கிழமை ஆசி பெற்றார்.

மதுராந்தகம் நகரில் நடைபெற்ற திமுக செயல் வீரர்களின் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் தா.மோ. அன்பரசன், பின்னர் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்துக்கு வந்தார். அங்கு அவரை ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத் துணைத் தலைவர் கோ.ப. அன்பழகன் வரவேற்றார்.

இதையடுத்து, பீடத்தில் வழிபாடு செய்தபின்னர், அருட்கூடத்தில் இருந்த பங்காரு அடிகளாரை அமைச்சர் சந்தித்து ஆசி பெற்றார்.

அப்போது, காஞ்சிபுரம் திமுக தெற்கு மாவட்டச் செயலாளரும், எம்எல்ஏவுமான க.சுந்தர், ஆதிபராசக்தி ஆன்மிக மக்கள் தொண்டு இயக்க மாணவரணித் தலைவரும், வழக்குரைஞருமான அ.அகத்தியன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.


**தெற்கு ரயில்வே**
மதுரை கோட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
எண் 96215371

ஒப்பந்தப்புள்ளி எண் : ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 96215371 தேதி: 22.07.2021

மூடப்படும் தேதியும் நேரமும் : 12.08.2021 அன்று 14.30 மணி

முதுநிலை கோட்ட இயந்திரவியல் பொறியாளர் / மதுரை

Follow us on : twitter.com/GMSRailway

**வட கிழக்கு இரயில்வே**
டெண்டர் அழைப்பு அறிவிப்பு

இந்தியக் குடியரசுத் தலைவர் சார்பில் லக்னோ, கோட்ட இரயில்வே மேலாளர் (வணிகம்) தொடர்வண்டியின் சுற்று முறை VPU (Round trip VPU) பெட்டியை 05 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுப்பதற்கான ஒப்பந்தத்துக்காக, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து E-டெண்டர் வழியில் திறந்த முறை டெண்டர்களை வரவேற்கிறார். இதற்கான டேவணித்தொகை (EMD), டெண்டர் கட்டணங்கள் ஆகியவற்றை இணைய வங்கி (net banking) அல்லது இணையக் கட்டண வாயில் (payment gateway) மூலம் செலுத்தலாம். தொடர்வண்டிகளின் விவரங்கள், டெண்டர் அறிவிப்பு எண், குறைந்தபட்ச விலை, டேவணித்தொகை மற்றும் ஏல ஆவணத்தின் விலை ஆகியவை பின்வருமாறு:-

E-அறிவிப்பு எண்: **11-2021-06094/93-RTVPU**, வேலையின் பெயர்: சிப்பம் ஏற்றும் பகுதியைக் (பார்சல் வேன்) குத்தகைக்கு எடுத்தல், தொடர்வண்டி எண்: 06094/06093 Ex லக்னோ (LJN) – சென்னை (MAS), லக்னோ கோட்டத்தின் லக்னோ நிலையத்திலிருந்து புறப்படுவது, சுமை திறன்: 23 டன், காலம்: ஐந்து (05) ஆண்டுகள். தொடர்வண்டி புறப்பாடு (வாரத்துக்கு): வாரத்துக்கு 02 நாட்கள் (திங்கள், வியாழன்), குறைந்தபட்ச விலை: ஒரு நாளில் ஒரு தடவைக்கு ரூ.2,52,081/- (R), டேவணித்தொகை (EMD) (இணைய வழியில் மட்டுமே செலுத்தப்பட வேண்டியது): 4,00,000/- பார்சல் வண்டி எண்ணிக்கை மற்றும் கொள்ளளவு: 01 (ஒன்று), 23 டன். E-அறிவிப்பு எண்: **12-2021-09038/37-RTVPU**, வேலையின் பெயர்: சிப்பம் ஏற்றும் பகுதியைக் (பார்சல் வேன்) குத்தகைக்கு எடுத்தல், தொடர்வண்டி எண்: 09038/09037 Ex கோரக்பூர் (GKP) – பாந்த்ரா டெர்மினஸ் (BDTS), லக்னோ கோட்டத்தின் கோரக்பூர் நிலையத்திலிருந்து புறப்படுவது, சுமை திறன்: 24 டன், காலம்: ஐந்து (05) ஆண்டுகள். தொடர்வண்டி புறப்பாடு (வாரத்துக்கு): வாரத்துக்கு 04 நாட்கள் (திங்கள், புதன், வெள்ளி, சனி), குறைந்தபட்ச விலை: ஒரு நாளில் ஒரு தடவைக்கு ரூ.2,40,678/- (R), டேவணித்தொகை (EMD) (இணைய வழியில் மட்டுமே செலுத்தப்பட வேண்டியது): 4,00,000/- பார்சல் வண்டி எண்ணிக்கை மற்றும் கொள்ளளவு: 01 (ஒன்று), 24 டன். E-அறிவிப்பு எண்: **13-2021-02533/34-RTVPU**, வேலையின் பெயர்: சிப்பம் ஏற்றும் பகுதியைக் (பார்சல் வேன்) குத்தகைக்கு எடுத்தல், தொடர்வண்டி எண்: 02533/02534 Ex லக்னோ (LJN) – சத்திரபதி சிவாஜி டெர்மினஸ் (CSTM), லக்னோ கோட்டத்தின் லக்னோ நிலையத்திலிருந்து புறப்படுவது, சுமை திறன்: 23 டன், காலம்: ஐந்து (05) ஆண்டுகள். தொடர்வண்டி புறப்பாடு (வாரத்துக்கு):- நாள்தோறும், குறைந்தபட்ச விலை: ஒரு நாளில் ஒரு தடவைக்கு ரூ.1,95,281/- (R), டேவணித்தொகை (EMD) (இணைய வழியில் மட்டுமே செலுத்தப்பட வேண்டியது): 4,00,000/- பார்சல் வண்டி எண்ணிக்கை மற்றும் கொள்ளளவு: 01 (ஒன்று), 23 டன். டெண்டர் ஆவணங்களின் விலை* (திருப்பித் தரப்படாதது): ரூ.2000/- (இணைய வழியில் **www.ireps.gov.in** இணையத்தளத்தின் மூலம் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்), ஏலப்புள்ளி தாக்கல்: 17.08.2021 அன்று 14:00 மணி வரை, ஏலப்புள்ளி திறப்பு: 17.08.2021 அன்று 15:00 மணி வரை, டெண்டர் செல்லுபடிக் காலம்: 45 நாட்கள், ஒப்பந்தக் காலம்: 05 ஆண்டுகள், இணையத்தள முகவரி: **www.ireps.gov.in.**

கோட்ட இரயில்வே மேலாளர்/ வணிகம், லக்னோ
**CPRO/Comm-32**

பயணிகள் வசதிகள் குறித்து SMS-ல் புகார் கூற மொபைல்- 09794845955

எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்களுடன் ரயிலில் பயணிக்காதீர்கள்

https://t.me/Tamil_epaper2

வெள்ளிதோறும் தினமணியுடன்... வெள்ளி மணி

கடன் வசூல் தீர்ப்பாயம் - III
முன்னிலையில் 5ஆவது தளம், தேவா டவர்ஸ், 770-A, அண்ணா சாலை, சென்னை - 600002
O.A. எண். 41/2021

பாரத ஸ்டேட் பாங்க், வண்டலூர் கிளை, 2/248, அண்ணா தெரு, வண்டலூர், சென்னை - 600 048. IFSC: SBIN0013832 ...விண்ணப்பதாரர்
- எதிர் -
... சென்னை - 600 047. [நிரந்தரக் கணக்கு எண் (PAN) EAFPP2223F] ...பிரதிவாதி

பிரதிவாதிக்கான மாற்று வழிச் சேவை அழைப்பாணை

மேற்சொன்ன மனுதாரர் ரூ.64,53,855.90 ... 31.08.2021 அன்று முற்பகல் 11:30 மணிக்கு ...

14ஆம் நாள் ஜூலை 2021 அன்று இடப்பட்டது.

தீர்ப்பாயத்தின் முத்திரை பதிவாளர் கையொப்பம்.

கனரா வங்கி

ஏல அறிவிப்பு

இடம் : சென்னை
நாள் : 26/07/2021

அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்
திருவல்லிக்கேணி, சென்னை -5.
வேலை வாய்ப்பு விண்ணப்பம் கோரும் விளம்பர அறிவிப்பு - திருத்த அறிவிப்பு

... 08.08.2021 மாலை 05.45 மணி வரை ...

திருக்கோயில் நிர்வாகம்

**ட்ரான்ஸ்ட்ராய் (இந்தியா) லிமிடெட் (கலைப்பு நடவடிக்கையின் கீழ்)**
**திருவள்ளூரில் நிலம் விற்பனைக்கான E-ஏல பொது அறிவிப்பு**

மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வினால் 18.09.2019 நாளிட்ட ஆணையின்படி நியமிக்கப்பட்டவரான டிரான்ஸ்டிராய் (இந்தியா) லிமிட்டெட் ("TIL") நிறுவனத்தின் கலைப்பு அலுவலர் **TIL** நிறுவனத்தின் கீழ்க்காணும் நிலங்களை "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் முறையில் E-ஏலத்தின் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பை இங்கே வெளியிடுகிறார். இந்த விற்பனையானது E- Procurement Technologies Limited - Auction Tiger நிறுவனத்தின் e-ஏல இணையத்தளத்தின் மூலம் கலைப்பு அலுவலரால் நடத்தப்படும்.

| அமைவிடம் | சொத்தின் தன்மை | குறைந்தபட்ச விலை (ரூ.) | டேவணித் தொகை (ரூ.) | E-ஏல நாளும் நேரமும் |
|---|---|---|---|---|
| சர்வே எண் 160/2, காஞ்சிப்பாடி கிராமம், திருத்தணி மாவட்டம், திருத்தணி வட்டம், திருவள்ளூர், தமிழ்நாடு. | முழு உரிமையுடன் ஒட்டியுள்ள நிலங்களோடு சேர்த்து மொத்தப் பரப்பளவு 7.5225 ஏக்கர் | ரூ. 5,07,80,000 | ரூ. 50,78,000 | 13.08.2021, வெள்ளிக்கிழமை நேரம்: முற்பகல் 11:00 மணி முதல் மாலை 04:00 மணி வரை |
| சர்வே எண் 151/12, 151/9, 151/11, காஞ்சிப்பாடி கிராமம், திருத்தணி மாவட்டம், திருத்தணி வட்டம், திருவள்ளூர், தமிழ்நாடு. | | | | |
| சர்வே எண் 161/4, காஞ்சிப்பாடி கிராமம், திருத்தணி மாவட்டம், திருத்தணி வட்டம், திருவள்ளூர், தமிழ்நாடு. | | | | |

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:
1. ஏலதாரர் பதிவு, படிவங்கள், நடைமுறைக் குறிப்பு ஆகியவை டிரான்ஸ்டிராய் நிறுவனத்தின் **http://www.transstroyindia.com/corporateprofile.html** இணையத்தளத்தில் கிடைக்கும்.
2. Auction Tiger சார்பிலான ஏல ஒருங்கிணைப்பாளர்: பிரவீன் தேவர் - **9722778828**, **Praveen.thevar@auctiontiger.net.**

ஒம்/- டாக்டர் **G.V.**நரசிம்ம ராவ், கலைப்பு அலுவலர்
திவால் அலுவலர் பதிவு எண்: IBBI/IPA-003/IP-N00093/2017-18/10893
கைப்பேசி: +91 9823039766, மின்னஞ்சல்: liquidator.til@in.ey.com
நாள்: **29.07.2021**
இடம்: ஐதராபாத்

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை
இணை இயக்குநர் நலப்பணிகள்
காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம்
தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணியிடங்கள் அறிவிப்பு

Joint Director of Health Services, Kanchipuram District, Kanchipuram - 631 501.

63 மூன்ஸ் டெக்னாலஜிஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: சக்தி டவர்-1, 7-வது தளம், வளாகம்-E, 766, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை 600002.
கார்ப்பரேட் அலுவலகம்: FT டவர், CTS எண் 256 & 257, சுரேன் சாலை, சாக்கலா, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400093.
தொ.பே: + 91-22-66868010, தொ.ந: + 91-22-67250257, மின்னஞ்சல்: info@63moons.com, இணையதளம்: www.63moons.com
CIN: L29142TN1988PLC015586

கம்பெனியின் பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

(www.63moons.com) ...

இடம்: மும்பை
தேதி: ஜூலை 27, 2021
Sr. VP & கம்பெனி செயலர்

ஈசிஆக்சஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.

அசையாச் சொத்துக்கான விற்பனை அறிவிப்பு

... தொண்ணூற்று ஒன்று மட்டும்) தொகையை எதிர்கால வட்டி மற்றும் செலவினங்கள் ஆகியவற்றுடன் திரும்பப் பெறும் பொருட்டு, ஈசிஆக்சஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம்) நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈசிஆக்சஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் **15.09.2021** அன்று (நேரம்: முற்பகல் **11:00** மணி முதல் பிற்பகல் **01:00** மணி வரை) விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) பெயர்:
1) M/s.கிரீன் வேலீஸ் ஷெல்டர்ஸ் பிரைவேட் லிட்., (கடன்தார நிறுவனம்), 2) T.பிரபாகர் (ஜாமீன்தாரர்), 3) T.சரவணன் (ஜாமீன்தாரர்), 4) பிரதீபா சரவணன் (ஜாமீன்தாரர்), 5) S.அனுராதா (ஜாமீன்தாரர்), 6) M.சந்திரசேகர் (ஜாமீன்தாரர்).

சொத்து விவரம்
உரிமையாளர் பெயர்: திருமதி S.அனுராதா

சிகிச்சை மையம், தரைத்தளத்தின் கட்டுமானப் பரப்பு 615 சதுர அடி மற்றும் முதல் தளத்தின் கட்டுமானப் பரப்பு 790 சதுர அடி. இது "கிரீன்ஸ் லோட்டஸ்" எனும் குடியிருப்புத் திட்டத்துடன் இணைந்த சிகிச்சை மையம் அடங்கிய கட்டடத்தின் ஒரு பாகமாக அமைந்துள்ளது. இத்துடன் ஒரு திறந்தவெளி கார் நிறுத்துமிடம், தனி நுழைவாயில் மற்றும் நிலத்தடித் தொட்டி உட்பட. இதன் பிரிபடாப் பங்கு 565 சதுர அடி. இவற்றின் உரிமை, உடைமை, பற்று ஆகியவற்றுடன் கூடிய இன்றியமையாப் பகுதிகள் அனைத்தும் சேர்ந்த நிலத்தின் மொத்தப் பரப்பளவு 5 கிரவுண்ட் 990 சதுர அடி. அமைவிடம் - எண் 1, வடக்கு கிரசென்ட் சாலை, தியாகராய நகர், சென்னை-600017, சென்னை மாநகராட்சி எல்லைகளுக்கு உட்பட்டது. C.A எண் 716/04-05-இன்படி T.S. எண்கள் 4896/1 மற்றும் 4896/2, மண்டல எண்: 9, பிளாக் எண் 114, தி.நகர் கிராமம், மாம்பலம், கிண்டி வட்டம், சென்னை மாவட்டம். இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் தி.நகர் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. CMDA PP எண் B/SPL/404/2012 A-B.
எல்லைகள்: வடக்கு: T.S. எண்கள் 4895/4, 4895/3 மற்றும் 4895/2; தெற்கு: T.S. எண் 4896/3, 4896/4; கிழக்கு: T.S. எண் 4894/1; மேற்கு: 9.0 மீட்டர் அகலமுள்ள வடக்கு கிரசென்ட் சாலை.
இவற்றுக்கிடையே அளவு: வடக்குப் பக்கம் - 197 அடி; தெற்குப் பக்கம் - 199 அடி 6 அங்குலம்; கிழக்குப் பக்கம் - 67 அடி; மேற்குப் பக்கம் - 65 அடி 6 அங்குலம்.
இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தியாகராய நகர் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.
இதன் குறைந்தபட்ச விலை ரூ.**2,81,00,000**/- மற்றும் டேவணித்தொகை (EMD) ரூ.**28,10,000**/-. டேவணித்தொகையானது 13.09.2021 அன்று மாலை 05:00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக செலுத்தப்பட வேண்டும்.

| விற்பனை விவரங்கள் | |
|---|---|
| e-ஏல நாள் மற்றும் நேரம்: | 15.09.2021 - முற்பகல் 11.00 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் இடையில், எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடங்கள் காலநீட்டிப்புடன். |
| டேவணித்தொகை (EMD) செலுத்துவதற்கான வங்கி விவரங்கள்: | |
| பயனாளியின் பெயர் | ஈசிஆக்சஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் |
| கணக்கு எண் | 00040310005513 |
| வங்கி | HDFC வங்கி லிட். |
| முகவரி | 759 ITC சென்டர், அண்ணா சாலை, TVS எதிரில் சென்னை 600 002, தமிழ்நாடு |
| RTGS / NEFT IFSC எண் | HDFC0000004 |
| ஏல உயர்வுத் தொகை: | ரூ.1,00,000/- |
| சொத்து ஆய்வு நாள் மற்றும் நேரம் | 6 செப்டம்பர், 2021 அன்று முற்பகல் 11.00 மணிக்கும் பிற்பகல் 03.00 மணிக்கும் இடையில், தொடர்பு கொள்ள: திரு.C.விஸ்வநாத், அலைபேசி: 9380654891 |
| தெரிந்த முன்வில்லங்கம் (ஏதேனும் இருந்தால்) | ஏதுமில்லை |

ஏலமானது ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் ஒப்புதல் பெற்ற சேவை வழங்குநரால் இணைய வழியில் **https://sarfaesi.auctiontiger.net** இணையத்தளத்தில் நடத்தப்படும். E-ஏல விற்பனை தொடர்பான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறியவும் இணைய வழி e-ஏல விலைப்புள்ளிப் படிவம், அறிவிக்கை முதலானவை அடங்கிய E-ஏல ஒப்பந்தப் புள்ளி ஆவணம் பெறவும் தொடர்பு கொள்ள வேண்டியவர்: திரு.பாரதி ராஜு (கைப்பேசி: 8939000594).
ஏலத் தளம்: **https://sarfaesi.auctiontiger.net**

நாள்: 29.07.2021
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர் / முதன்மை நிதி அலுவலர், ஈசிஆக்சஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.

# திமுக அரசுக்கு எதிராக தமிழகம் முழுவதும் அதிமுக போராட்டம்

**சென்னை, ஜூலை 28:** தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றாததைக் கண்டித்து தமிழகம் முழுவதும் அதிமுக சார்பில் புதன்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திமுக அரசைக் கண்டித்து புதன்கிழமை போராட்டம் நடைபெறும் என அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் ஏற்கெனவே அறிவித்திருந்தனர்.

அதன்படி, சேலம் சூரமங்கலத்தில் உள்ள தனது இல்லத்தின் முன்பு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி போராட்டத்தில் ஈடுபட்டார். கையில் பதாகைகளை ஏந்தியவாறு திமுக அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினார்.

**505 தேர்தல் வாக்குறுதிகள் என்னாச்சு?:** ஆர்ப்பாட்டத்தின் போது செய்தியாளர்களிடம் எடப்பாடி பழனிசாமி கூறியது:

திமுக சார்பில் 505 தேர்தல் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. அவற்றில் முக்கியமான வாக்குறுதிகளைக்கூட திமுக நிறைவேற்றவில்லை.

பொய்யான வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்த திமுக, அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் எங்கள் வேண்டுகோள். திமுக ஆட்சிக்கு வந்ததும் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்றார் மு.க.ஸ்டாலின். ஆனால், தேர்வை ரத்து செய்யாமல் கண்துடைப்புக்காக நீட் தேர்வு பாதிப்பு குறித்து ஆராய குழு அமைத்துள்ளனர் என்று பழனிசாமி கூறினார்.

சேலத்தில் 50-க்கும் மேற்பட்ட இடங்களில் போராட்டம் நடைபெற்றது. ஏராளமானோர் போராட்டத்தில் பங்கேற்றனர்.

தேனி மாவட்டம் போடியில் உள்ள தனது இல்லத்துக்கு முன்னால் ஓ.பன்னீர்செல்வம் போராட்டத்தில் ஈடுபட்டார். 'ஏமாற்றாதே, ஏமாற்றாதே மாணவர்களை ஏமாற்றாதே' என்று திமுக அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை அவர் எழுப்பினார்.

**பொய் வழக்கு:** ஆர்ப்பாட்டத்தின்போது ஓ.பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் கூறியது:

தேர்தல் வாக்குறுதிகள் எதையும் திமுகவால் நிறைவேற்றமுடியவில்லை. அதை திசை திருப்புவதற்காக அதிமுக நிர்வாகிகள் மீது பொய் வழக்குகளை திமுக அரசு போட முயற்சிக்கிறது.

அதிமுகவைப் பொருத்தவரை ஒரு தனிப்பட்ட குடும்பமோ, தனி நபரோ ஆதிக்கம் செலுத்த முடியாது. அதற்கான ஜனநாயகத்தை 4 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்படுத்தியிருக்கிறோம் என்றார்.

சென்னை ராயபுரம் எஸ்.என். செட்டி தெருவில் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின்போது ஜெயக்குமார் திமுகவுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் பாடல்களைப் பாடி எதிர்ப்பு தெரிவித்தார்.

திமுக அரசு, விளம்பரத்துக்காக சட்டப்பேரவை நூற்றாண்டு விழா நடத்துவதாகவும் டி.ஜெயக்குமார் குற்றம் சாட்டினார்.

சென்னையில் மூத்த தலைவர்கள் நா.பாலகங்கா, பா.வளர்மதி, சி.பொன்னையன், கோகுல இந்திரா, உள்பட பலரும் அவரவர் இல்லங்களுக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவை குனியமுத்தூர் பேருந்து நிலையம் அருகில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமையிலும், திண்டுக்கல்லில் முன்னாள் அமைச்சர் சீனிவாசன் தலைமையிலும், திருச்சியில் முன்னாள் அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் தலைமையிலும், புதுக்கோட்டையில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் தலைமையிலும், விழுப்புரத்தில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தலைமையிலும் போராட்டம் நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் அதிமுக சார்பில் போராட்டம் நடைபெற்றது.



திமுக அரசைக் கண்டித்து சென்னையில் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் உள்ளிட்டோர்.

## பொறியியல் கலந்தாய்வு: இணையதளத்தில் கடந்த ஆண்டு கட் ஆப் மதிப்பெண்

**சென்னை, ஜூலை 28:** பொறியியல் கலந்தாய்வில் கல்லூரிகளைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்புகளை அறிய, முந்தைய ஆண்டின், 'கட் ஆப்' மதிப்பெண் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழக இணைப்பில் உள்ள 500-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளில், இரண்டு லட்சம் இடங்களுக்கு ஒற்றை சாளர முறையில் கலந்தாய்வு நடத்தப்படுகிறது.

விண்ணப்பிக்கும் மாணவர்கள், பிளஸ் 2 தேர்வில் எடுத்துள்ள மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசை பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

மாணவர்களின் கட் ஆப் மதிப்பெண்களுக்கு ஏற்ப, எந்தக் கல்லூரிகளில் இடம் கிடைக்கும் என்ற தோராயமான நிலையை தெரிந்து கொள்ளும் வகையில், கடந்த ஆண்டு கட் ஆப் மதிப்பெண் பட்டியலை, தமிழக பொறியியல் கலந்தாய்வு கமிட்டி வெளியிட்டுள்ளது.

கலந்தாய்வு கமிட்டியின் www.tneaonline.org என்ற இணையதளத்தில், கடந்த ஆண்டு கட் ஆப் மற்றும் கல்லூரி ஒதுக்கீட்டு பட்டியலை, மாணவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

## தமிழகத்துக்கு 7.97 லட்சம் தடுப்பூசிகள் வருகை

**சென்னை, ஜூலை 28:** தமிழகத்துக்கு ஒரே நாளில் 7.97 லட்சம் கரோனா தடுப்பூசிகள் வந்துள்ளன. அவற்றில் 5.81 லட்சம் கோவிஷீல்ட் தடுப்பூசிகள், 2.15 லட்சம் கோவேக்ஸின் தடுப்பூசிகள் என்பது குறிப்பிடத்தக்கது. தேவையின் அடிப்படையில் மாவட்டங்களுக்கு மக்கள் நல்வாழ்வுத் துறையினர் பிரித்து அனுப்பி வருகின்றனர்.

தமிழகத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மையங்களில் கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி போடும் பணிகளும் அண்மையில் தொடங்கப்பட்டது. இந்நிலையில், புணே சீரம் நிறுவனத்தில் இருந்து 5 லட்சத்து 81,270 லட்சம் கோவிஷீல்ட் தடுப்பூசிகளும், ஹைதராபாத் பாரத் பயோடெக் நிறுவனத்தில் இருந்து 2 லட்சத்து 15,810 கோவாக்ஸின் தடுப்பூசிகளும் தமிழகத்துக்கு விமானம் மூலம் புதன்கிழமை வந்தன.

தடுப்பூசிகளை பெற்றுக் கொண்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் குளிர்பதன வசதி கொண்ட வாகனங்கள் மூலம் தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள மாநில மருந்து சேமிப்பு கிடங்குக்கு உரிய பாதுகாப்புடன் கொண்டு சேர்த்தனர். அவை மாவட்டங்களுக்குப் பிரித்து அனுப்பப்பட்டு வருகின்றன.

## 'உடான்' திட்டத்தில் ஒசூரில் விமான நிலையம் அமைக்க தம்பிதுரை எம்.பி. வேண்டுகோள்

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஜூலை 28:** பிராந்திய அளவிலான விமான சேவைகளுக்குரிய 'உடான்' திட்டத்தின் கீழ் முக்கிய தொழில் நகரமாக இருக்கும் ஒசூரில் விரைவாக விமான நிலையம் அமைக்கக் கோரி அதிமுக உறுப்பினர் தம்பிதுரை மாநிலங்களவையில் புதன்கிழமை வேண்டுகோள் விடுத்தார்.

மாநிலங்களவையில், கேள்வி நேரத்தில் சிவில் விமானத் துறை சம்பந்தமான கேள்வி நேரத்தில், அதிமுக உறுப்பினர் தம்பிதுரை துணைக் கேள்வியை எழுப்பினார்.

அதில் ஒசூரில் தனியார் நிறுவனங்கள் விமான சேவைக்கு தயாராக உள்ளனர்.

ஆனால் உடான் திட்டத்தில் விமான நிலையம் கட்டுமானத்திற்கான குத்தகையில் அரசு முடிவு எடுக்கப்படாமல் உள்ளதை மத்திய சிவில் விமானப்போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியாவின் கவனத்துக்கு கொண்டுவந்து அவையில் பேசினார். அப்போது அமைச்சர் சிந்தியா, ஒசூர் விவகாரம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என பதிலளித்தார்.

கரோனா நோய்த்தொற்று காலக் கட்டத்தில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளில் மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்த கேள்விகளுக்கு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் புதன்கிழமை மாநிலங்களவையில் பதிலளித்தார். இதில் திறன் மேம்பாடு குறித்த கேள்வி பதிலில் அதிமுக உறுப்பினர் தம்பிதுரை பங்கெடுத்து பேசினார்.

அப்போது அவர் கூறுகையில், ஏற்கெனவே பயிற்சி பெற்று பொறியியல் பட்டம் பெற்றுள்ள ஏராளமான இளைஞர்கள் தமிழகத்தில் வேலைவாய்ப்பு கிடைக்காமல் காத்திருக்கின்றனர். படிக்காத இளைஞர்களுக்கு பயிற்சி கொடுத்து வேலை கொடுப்பதைவிட பயிற்சி பெற்றவர்களுக்கு ஏன் வேலைவாய்ப்பை அரசு வழங்கவில்லை என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், உறுப்பினரின் ஆலோசனையை அரசு கவனத்தில் கொள்ளும் என்றார்.


கடன் வசூல் தீர்ப்பாயம் எண்.III, சென்னை

DRC எண்.103/2019 — கோரிக்கை அறிவிப்பு — தேதி 23.07.2021

[illegible]

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்

கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை

[illegible]

நிர்ணயிக்கப்பட்ட விலை: ரூ. 45,00,000/-

கனரா வங்கி Canara Bank

SME பெருங்குடி கிளை
மனை எண்.130, 131, பாமா காலனி, L & T சாலை, OMR சாலை, பெருங்குடி - 600096
போன் : 9444396916/044 - 24961426
e-mail id cb2617@canarabank.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு

[illegible]

மின் ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம்: 31.08.2021 காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 27.08.2021 அன்று மாலை 4.00 மணி வரை

தேதி: 27.07.2021 இடம்: சென்னை — அதிகாரப்பூர்வ அதிகாரி, கனரா வங்கி

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

விசுவல் டிபார்ட்மென்ட், 4வது தளம், ஆற்காடு பிளாசா, பழைய எண்.38, புதிய எண்.165, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை-600024 போன் : 9941443159 / 9962005554

அசையா சொத்து இ-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

[illegible]

பொது மின் ஏலத்திற்கான தேதி / நேரம்: 23.08.2021 அன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 வரை

பொது மின் ஏலத்திற்கான தேதி / நேரம்: 08.09.2021 அன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 வரை

தேதி: 22.07.2021 இடம்: சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

# வன்னியர்களுக்கு 10.5% உள்ஒதுக்கீடு வழங்குவதால் யாருக்கும் பாதிப்பில்லை

## தமிழக அரசு

**சென்னை, ஜூலை 28:** வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள்ஒதுக்கீடு வழங்குவதால் யாரும் பாதிக்கப்படப் போவதில்லை என தமிழக அரசு தரப்பில் உயர்நீதிமன்றத்தில் விளக்கமளிக்கப்பட்டது.

இடஒதுக்கீட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் உள்ள வன்னியர் சமுதாயத்தினருக்கு 10.5 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கி அதிமுக அரசு அவசர சட்டம் இயற்றி அரசிதழிலும் வெளியிட்டது. இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்ற மதுரை கிளையிலும் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன.

அதில், சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிப்புக்கு சில மணி நேரத்துக்கு முன், அரசியல் லாபத்துக்காக வன்னியர் சமுதாயத்துக்கு மட்டும் பிரத்யேகமாக 10.5 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கி உத்தரவிட்டுள்ளது. இது சட்டவிரோதமானது. இதனால் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான பிரிவில் உள்ள பிற சமுதாயத்தினர் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ளவர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பின்தங்கும் சூழல் ஏற்படும். எனவே இந்த உள்ஒதுக்கீட்டு சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என கூறியிருந்தனர்.

இந்த நிலையில், இந்தச் சட்டம் நடப்பு கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்படும் என தமிழக அரசு அண்மையில் அறிவித்து, அரசாணை பிறப்பித்தது. இதனையடுத்து, வன்னியர் சமுதாயத்துக்கு 10.5 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளை அவசர வழக்காக விசாரணைக்கு எடுத்து, இந்த சட்டத்துக்கு தடை விதிக்க வேண்டும் என உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் புதன்கிழமை ஆஜரான வழக்குரைஞர்கள் முறையிட்டனர்.

இதனையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த 10.5 சதவீத உள்ஒதுக்கீடு தொடர்பான சட்டம் இந்த கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்பட உள்ளதா? என்பது குறித்து தமிழக அரசு விளக்கமளிக்க வேண்டும். இல்லை என்றால், இந்தச் சட்டத்துக்கு தடை விதிக்கப்படும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த வழக்கு புதன்கிழமை மாலை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது, அரசுத் தரப்பில் ஆஜரான அரசு தலைமை வழக்குரைஞர் சண்முகசுந்தரம், கடந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்ட இந்த உள்ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மொத்தம் 28 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இதுதவிர்த்து உச்ச நீதிமன்றத்தில் 4 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்த உள் ஒதுக்கீட்டுக்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டதாக விளக்கம் அளித்தார்.

அப்போது நீதிபதிகள், இந்தச் சட்டத்தை அமல்படுத்த ஏன் தடை விதிக்கக்கூடாது? என கேள்வி எழுப்பினர். அப்போது அரசு தலைமை வழக்குரைஞர், இந்த உள்ஒதுக்கீட்டால் யாரும் பாதிக்கப்படப்போவது இல்லை. இந்த சட்டத்துக்கு அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் கடந்த ஏப்ரல் மாதமே அமல்படுத்திவிட்டது. எனவே இந்த உள்ஒதுக்கீட்டுக்கு தடை விதிக்க வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்தார்.

அப்போது மனுதாரர்கள் தரப்பு வழக்குரைஞர்கள், சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளில் முதலில் தீர்வு காண வேண்டும். அதன் பின்னர் உச்சநீதிமன்றம் முடிவு செய்யும் என உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறியுள்ளனர்.

இந்த சட்டத்துக்கு தமிழக அரசு அனுமதியளித்து அரசாணை பிறப்பித்துள்ளதால் மருத்துவம், பொறியியல் என உயர் கல்வி முதல் வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான பிரிவில் உள்ள பிற சமுதாயத்தினர் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என வாதிட்டனர். இதனையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த உள்ஒதுக்கீட்டை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகள் வரும் ஆகஸ்ட் 2-ஆவது வாரத்தில் விசாரிக்கப்படும் என உத்தரவிட்டனர்.

# தமிழகத்தில் புதிதாக 1,756 பேருக்கு கரோனா

**சென்னை, ஜூலை 28:** தமிழகத்தில் புதன்கிழமை மேலும் 1,756 பேர் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில், அதிகபட்சமாக கோவையில் 179 பேருக்கும், சென்னையில் 164 பேருக்கும், ஈரோட்டில் 140 பேருக்கும், தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநிலத்தில் இதுவரை கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 லட்சத்து 53,805-ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே, நோய்த் தொற்றிலிருந்து புதன்கிழமை 2,394 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்து மாநிலத்தில் இதுவரை கரோனாவிலிருந்து விடுபட்டோரின் எண்ணிக்கை 24.98 லட்சத்தைக் கடந்துள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறை தகவல்படி மருத்துவமனைகளிலும், வீடுகளிலும் தற்போது மருத்துவக் கண்காணிப்பில் 21,521 பேர் உள்ளனர். மற்றொருபுறம், தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் 29 பேர் பலியானதை அடுத்து மாநிலம் முழுவதும் இதுவரை நோய்த் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 33,995-ஆக அதிகரித்துள்ளது.

# ஆக.1-இல் ரஷிய பல்கலைக்கழகங்கள் பங்கேற்கும் இணைய வழி கண்காட்சி

**சென்னை, ஜூலை 28:** ரஷிய பல்கலைக்கழகங்களில் கல்வி வாய்ப்பு குறித்து இந்திய மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆக.1-ஆம் தேதி, இணைய வழி கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தென்னிந்தியாவுக்கான ரஷிய துணைத் தூதர் ஒலெக் என்.அவ்தீவ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அறிவியல் மற்றும் கலாசாரப் பரிமாற்றத்துக்கான ரஷிய மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ரஷிய பல்கலைக் கழகங்களின் பொறியியல் மற்றும் மருத்துவப் பட்டப் படிப்பு வாய்ப்புகள் பற்றி இந்திய மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆக.1-ஆம் தேதி, www.rusedufair.com என்ற இணையதளத்தில் கல்விக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் ரஷிய கல்லூரிகளின் அதிகாரிகளோடு, நேரடியாகத் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும், தகவல் திரட்டவும் ரஷியா சென்று கல்வி கற்க விரும்புவோர் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும் வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இங்கு படிக்க விரும்புவோருக்கு சிஇடி, ஐஇஎல்டிஎஸ் போன்ற தகுதித் தேர்வுகள் தேவையில்லை. மருத்துவக் கல்வியைப் பொருத்தவரை நீட் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம்.

மற்ற இளநிலை முதுநிலை பட்டப் படிப்பில் சேர விரும்புவோர் தொடர்புடைய முக்கியப் பாடங்கள், பட்டப் படிப்புகளில் குறைந்தபட்சம் 50 சதவீத மதிப்பெண்ணும், எஸ்சி, எஸ்டி, ஓபிசி வகுப்பினர் 40 சதவீத மதிப்பெண்ணும் பெற்றிருக்க வேண்டும். இங்கு படிப்பைத் தொடர தமிழ் வழிக் கல்வி பயின்றவர்களும் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு குறிப்பிடப்பட்ட இணையதளம் அல்லது 92822 21221 என்ற செல்லிடப்பேசி எண்ணை அணுகலாம்.

# ரூ.10 லட்சம் பரிசை முதல்வர் நிவாரண நிதிக்கு வழங்குவேன்

## என்.சங்கரய்யா

**சென்னை, ஜூலை 28:** தகைசால் தமிழர் விருது பரிசுத் தொகை ரூ.10 லட்சத்தை முதல்வரின் கரோனா பேரிடர் நிவாரண நிதிக்கு வழங்க உள்ளேன் என்று சுதந்திரப் போராட்ட வீரரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான என்.சங்கரய்யா கறினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் என்.சங்கரய்யாவுக்கு தமிழக அரசின் சார்பில் தகைசால் தமிழர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழக அரசு புதிதாக அறிவித்துள்ள தகைசால் தமிழர் விருதினை இந்தாண்டுக்கு எனக்கு வழங்குவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

எனது சேவையைப் பாராட்டும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ள இவ்விருதினை ஏற்றுக் கொள்வதோடு, எனக்கு இந்த விருதினை அளித்திருக்கும் மு.க. ஸ்டாலினுக்கு நன்றி.

இந்த விருதுக்காக அளிக்கப்படும் ரூ. 10 லட்சம் தொகையினை கரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழக அரசு திரட்டி வரும் முதல்வரின் கரோனா பேரிடர் நிவாரண நிதிக்கு மகிழ்ச்சியோடு வழங்குகிறேன்.

**இறுதி மூச்சு வரை...:** மாணவனாக இருந்த காலந்தொட்டு இன்று வரை, தமிழக மக்களின் நலனுக்கும், இந்திய நாட்டின் விடுதலைக்கும், உழைப்பாளி மக்களின் நலன் காத்திடவும் என்னால் முடிந்தளவு பணியாற்றியுள்ளேன்.

சுரண்டலற்ற பொதுவுடைமை சமுதாயத்தை உருவாக்க நான் ஏற்றுக் கொண்ட மார்க்சிய கொள்கையின் அடிப்படையில் பயணம் செய்துள்ளேன். மார்க்சிய கொள்கை அடிப்படையில் எனது இறுதி மூச்சுவரை தொடர்ந்து பணிகளை நிறைவேற்றுவேன் என்று கூறியுள்ளார் சங்கரய்யா.

# தொடக்கப் பள்ளிகள், அங்கன்வாடிகளை திறப்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும்

## தமிழக அரசுக்கு உத்தரவு

**சென்னை,ஜூலை 28:** கிராமப்புறங்களில் உள்ள தொடக்கப்பள்ளிகள், அங்கன்வாடி மையங்களை மீண்டும் திறப்பது குறித்து அறிவியல் பூர்வமான ஆலோசனைகளைப் பெற்று ஆய்வு செய்ய வேண்டும் என தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்ட் சிவிக் ஆக்ஷன் குருப் என்ற அமைப்பு தாக்கல் செய்த மனுவில், கரோனா நோய்த்தொற்றுப் பரவலைத் தடுக்க கடந்த 2020-ஆம் ஆண்டு பொது முடக்கம் அமல்படுத்தப்பட்டது. இதன் காரணமாக பள்ளிகள் திறக்கப்படவில்லை.

இதனால் 10-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு சமைக்கப்பட்ட சத்துணவு வழங்கப்படவில்லை. மாணவர்களுக்கு தினமும் சத்துணவு கிடைக்கும் வகையில், அம்மா உணவகங்கள் அல்லது சமுதாய சமையல் கூடங்கள் மூலம் சமைக்கப்பட்ட சத்துணவை வழங்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், பள்ளிகள் மூடப்பட்டுள்ளதால், சத்துணவு கிடைக்காமல் மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ரேஷன் பொருள்களை பெற்றோர் பொருளாதார பற்றாக்குறை காரணமாக விற்றுவிடுகின்றனர்.

எனவே அங்கன்வாடி மையங்களைத் திறந்து அதன் மூலம் மாணவர்களுக்கு சத்துணவு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாதிட்டார். அப்போது அரசுத் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், இதுகுறித்து அரசின் கருத்தைக் கேட்டுத் தெரிவிப்பதாக கூறினார்.

https://t.me/Tamil_epaper2

இதனையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், கரோனா தாக்கம் தணிந்துள்ளது.

மூன்றாவது அலை தாக்கும் என்பதற்கு அறிவியல் பூர்வமான எந்தக் கணிப்பு இல்லாததால், கிராமப்புறங்களில் உள்ள தொடக்கப் பள்ளிகளை மீண்டும் திறப்பது குறித்து அறிவியல்பூர்வமான ஆலோசனைகளைப் பெற்று தமிழக அரசு ஆய்வு செய்ய வேண்டும்.

அங்கன்வாடி மையங்களை மீண்டும் திறப்பது குறித்தும் ஆலோசிக்க வேண்டும். மாணவர்களுக்கு சத்துணவு சென்றடைவதற்கான திட்டத்தை வகுக்க வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை வரும் ஆகஸ்ட் 4-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.


**SBI பாரத ஸ்டேட் வங்கி**

சென்னை மெட்ரோ மண்டலம் 1

சென்னை வடக்கு பிராந்தியம்

**தங்க நகை ஏல அறிவிப்பு**

எங்கள் வங்கியில் கீழ்க்கண்ட வாடிக்கையாளர்கள் தங்க நகைகளின் பெயரில் கடன் பெற்று இதுநாள் வரையில் திருப்பி செலுத்தவில்லை. கடன் தொகையை செலுத்துமாறு அனுப்பிய நோட்டீசுகளை பெற்றும் கடனை திருப்பி செலுத்தி தங்க நகைகளை மீட்டுக்கொள்ளவில்லை. எனவே 29.07.2021க்குள் பணத்தைக் கட்டி கணக்கை முடித்து தங்களது நகைகளை பெற்றுக் கொள்ளாவிடில் 30.07.2021 **வெள்ளிக்கிழமை** அன்று **மாலை 3.30** மணியளவில் வங்கி கிளையின் அலுவலக கட்டிடத்தில் நகைகள் பகிரங்க ஏலம் விடப்படும்.

**ஏல நிபந்தனைகள்**

1. ஏலம் கேட்க விரும்புவோர் 30.07.2021 காலை 10.00 மணிக்கு டெபாசிட் தொகையாக ரூ.20,000/- செலுத்த வேண்டும்.
2. ஏலத்தில் விடப்படும் நகைகளை 10% முன்பணம் செலுத்தியவர்கள் மட்டுமே ஏலம் விடும் நாளில் அலுவலக நேரத்தில் வந்து மேலாளர், நகை மதிப்பீட்டாளர் ஆகிய இருவர் முன்னிலையில் பார்வையிடலாம்.
3. ஏலத்தில் விடப்படும் நகைகளின் தரத்திற்கும், வில்லங்கங்களுக்கும் வங்கி எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.
4. எக்காரணமும் தெரிவிக்காமல் ஏலத்தை நிராகரிக்கவோ, தள்ளி வைக்கவோ வங்கிக்கு முழு உரிமை உண்டு.
5. கடன்தாரர்கள் யாரேனும் இறந்திருப்பாரேயானால் அவர்களது வாரீசுகளுக்கு இது பொருந்தும்.

| வ. எண் | கிளை பெயர் | கடன்தாரர் பெயர் | நகை கடன் எண் | கடன் வாங்கிய தேதி | எடை (கிராம்) | கடன் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிராட்வே | ஜானகி V | 39769728415 | 31/10/2020 | 40.4 | 136000 |
| 2 | பிராட்வே | கிரீன் ப்ரேம் குமார் D | 39738305326 | 16/10/2020 | 83.5 | 260000 |
| 3 | பிராட்வே | தமிழ்மூலன்சரி | 39633225858 | 4/9/2020 | 83.7 | 284000 |
| 4 | பிராட்வே | தமிழ்மூலன்சரி | 39633360943 | 4/9/2020 | 65.3 | 236000 |
| 5 | பிராட்வே | ராசிக் அலி A | 39802737295 | 13/11/2020 | 23.4 | 70000 |
| 6 | பிராட்வே | ராசிக் அலி A | 39802771269 | 13/11/2020 | 24.6 | 60000 |
| 7 | ஜி. ஏ. ரோடு | வினோத் B | 39763014280 | 28/10/2020 | 48.2 | 155000 |
| 8 | ஐ சி எஃப் | டேவிட்சன் K | 39530176585 | 27/7/2020 | 20.1 | 62000 |
| 9 | ஜமாலியா | சுரேஷ் V | 39868095103 | 14/12/2020 | 53.63 | 184000 |
| 10 | ஜமாலியா | சுரேஷ் V | 39868106434 | 14/12/2020 | 99.16 | 340000 |
| 11 | ஜமாலியா | R அனிதா | 39559835210 | 7/8/2020 | 44.22 | 142000 |
| 12 | ஜமாலியா | யுவராஜ் B | 39608476652 | 27/8/2020 | 65.66 | 152000 |
| 13 | ஜமாலியா | யுவராஜ் B | 39601549018 | 26/8/2020 | 46.14 | 220000 |
| 14 | மண்ணடி | பர்ஜான் அலி S M | 39669195933 | 18/9/2020 | 20.1 | 45000 |
| 15 | மிண்ட் டெர்மினஸ் | மாயகிருஷ்ணன் சுவாமிநாதன் | 39227307754 | 19/3/2020 | 24.1 | 60000 |
| 16 | மிண்ட் டெர்மினஸ் | செல்வ குமார் J | 39722520034 | 9/10/2020 | 16 | 50000 |
| 17 | மிண்ட் டெர்மினஸ் | செல்வ குமார் J | 39719188320 | 8/10/2020 | 59 | 188000 |
| 18 | மிண்ட் டெர்மினஸ் | நந்தினி M | 39570553706 | 12/8/2020 | 54.2 | 170000 |
| 19 | நியூ ஆவடிரோடு | ஜான்சிராணி K | 39695191981 | 30/9/2020 | 58.8 | 201000 |
| 20 | ராஜாஜி சாலை | கிரீன் ப்ரேம் குமார் D | 39760556951 | 27/10/2020 | 83.8 | 261000 |
| 21 | ராஜாஜி சாலை | கிரீன் ப்ரேம் குமார் D | 39751727501 | 22/10/2020 | 78.4 | 265000 |
| 22 | சிறுவள்ளூர் ரோடு சென்னை | கோபிநாத் V P | 39395134220 | 10/6/2020 | 27.6 | 80000 |
| 23 | திரு.வி.க. நகர் | பார்தசாரதி K | 39591317437 | 21/8/2020 | 260.1 | 790000 |
| 24 | திரு.வி.க. நகர் | பார்தசாரதி K | 39586847257 | 19/8/2020 | 32.7 | 100000 |
| 25 | வண்ணாரபேட்டை | S கிருபாகரன் | 39629014911 | 3/9/2020 | 138.9 | 454300 |
| 26 | வண்ணாரபேட்டை | S கிருபாகரன் | 39648794340 | 10/9/2020 | 18.7 | 59500 |
| 27 | வண்ணாரபேட்டை | சாந்தி Y D | 39792404402 | 9/11/2020 | 59.7 | 155000 |

இடம் : சென்னை
தேதி : 29.7.2021

மண்டல மேலாளர்
பாரத ஸ்டேட் வங்கி



**சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்**

CUB

கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை

நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001.

மின்னஞ்சல் : crmd@cityunionbank.in போன் : 0435-2432322, பேக்ஸ் : 0435-2431746

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல்/நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002ன் படி மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அறிவிப்பு

பகுதி - 1

பகுதி - 2

பகுதி - 3

இடம் : கும்பகோணம்
தேதி : 28-07-2021

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்



இந்தியன் வங்கி

பல்லாவரம் கிளை

**கோரிக்கை அறிவிப்பு வெளியீடு**

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு 17.07.2021 அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டது.

பெறுநர்: (1) R. ராஜு, (கடன்தாரர்), எண்.29 A, G 4, ... அம்பேத்கர் தெரு, நன்மங்கலம், சென்னை - 600 117. (2) திருமதி.R. கவிதா, (இணை-கடன்தாரர்), எண்.29 A, G 4, ... அம்பேத்கர் தெரு, நன்மங்கலம், சென்னை - 600 117. (3) P. செல்வம், (ஜாமீன்தாரர்/அடமானதாரர்), ... சென்னை - 600096.

பொருள் : இந்தியன் வங்கி, பல்லாவரம் கிளையில் உள்ள உங்கள் கடன் கணக்கு எண்.701232323 - சம்பந்தமாக.

நீங்கள் பெற்ற கடனுக்காக 12.07.2021 வரை செலுத்தவேண்டிய மொத்த நிலுவைத்தொகையான ரூ.3,23,310.37 ...

12.07.2021 அன்று வரை செலுத்த வேண்டிய மொத்த தொகையான ரூ.3,23,310.37 ...

இடம் : ... தேதி : 29.07.2021

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/முதன்மை மேலாளர், இந்தியன் வங்கி.



தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை**

திருத்தணிகை வட்டம், திருவள்ளூர் மாவட்டம் – 631 209.

ந.க.எண் : 1575/2021/அ1, நாள் : 28.07.2021

**திருக்கோயில் பணியாளர்கள் வேலைவாய்ப்பு கோரும் விளம்பர அறிவிப்பு**

**திருத்தம்**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணிகை வட்டம், திருத்தணிகை நகரம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் அலுவலக ந.க. எண். 1575/2021/அ1/ நாள் : 06.07.2021-ன்படி காலி பணியிடங்கள் நியமனம் குறித்து 08.07.2021 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்ட ... 07.08.2021 அன்று பிற்பகல் 5.45 வரை ... 06.07.2021 முதல் 12.08.2021 அன்று பிற்பகல் 5.00 மணி வரை என திருத்தம் செய்து அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

மேலும், இந்து சமய அறநிலையத்துறையின், கட்டுப்பாட்டில் உள்ள ... திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களும் உரிய அலுவலரின் அனுமதி பெற்றும் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**திருக்கோயில் நிர்வாகம்**



**பாரத ஸ்டேட் வங்கி**

(RACPC - தாம்பரம்), ... எண்.388, வேளச்சேரி மெயின் ரோடு, சேலையூர், சென்னை-600073. போன்:22794676/79

**கோரிக்கை அறிவிப்பு**

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டப் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு

... ரூ.41,00,000/- ... (கணக்கு எண்:35030096616) ...

தேதி:28.07.2021
இடம்: சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
பாரத ஸ்டேட் வங்கி, RACPC - தாம்பரம் சென்னை

தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

வியாழக்கிழமை 29-7-2021
பிலவ ஆடி 13 ஹிஜ்ரி 1442 துல்ஹஜ்ஜு 18

# பிரளயம் நிஜம்தானோ?

பருவமழை பெருமழையாக மாறும்போது அதை எதிர்கொள்ள முடியாமல் மனித இனம் திகைக்கிறது. கடந்த 10 நாள்களாக வட இந்தியாவின் மலைப் பகுதிகளிலும், மேற்கு இந்தியாவின் கடற்கரைப் பகுதிகளிலும் வானமே உருகி விழுவதுபோல பெய்யும் அடைமழையால் நிலைகுலைந்து போயிருக்கின்றன பல மாநிலங்கள். நிலச்சரிவுகளும், திடீர் வெள்ளமும் 150-க்கும் அதிகமான உயிர்களைப் பலி கொண்டிருக்கின்றன.

ஹிமாசல பிரதேசம், உத்தரகண்ட், மகாராஷ்டிரம், ஆந்திரம், தெலங்கானா, பிகார், கர்நாடகத்தின் சில பகுதிகள் என்று மழை வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் மாநிலங்கள் ஏராளம். ஆந்திர மாநிலத்தின் கோதாவரியில் ஏற்பட்டிருக்கும் வெள்ளப்பெருக்கால் போலாவரம் மண்டலத்தில் உள்ள 17 கிராமங்களுக்கான தொடர்பு முற்றிலுமாக அறுந்திருக்கிறது. கிருஷ்ணா நதியைச் சுற்றியுள்ள பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன.

ஜூலை 22-ஆம் தேதி மகாராஷ்டிர மாநிலம் சதாரா மாவட்டத்தில் உள்ள மகாபலேஷ்வர் பகுதியில் பெய்த 600 மி.மீ. மழை என்பது இதுவரை வரலாற்றில் காணப்படாத பதிவு. ரத்தினகிரி மாவட்டத்தில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவிலான மழை பொழிந்து தள்ளியிருக்கிறது. மும்பையை எடுத்துக்கொண்டால், ஆறு மணி நேரத்தில் 230 மி.மீ. மழைப் பொழிவு. அடைமழையால் மிகவும் பாதிக்கப்பட்ட ராய்கட் மாவட்டத்தில் மலைச்சரிவு ஏற்பட்டதால் 53 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். மகாராஷ்டிர மாநிலத்தில் ஏறத்தாழ ஒன்றரை லட்சம்பேர் பாதுகாப்பான பகுதிகளில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

1982-க்குப் பிறகு கோவா இப்படியொரு பருவமழை சீற்றத்தையும் வெள்ளப்பெருக்கையும் எதிர்கொண்டதில்லை. ஹிமாசல பிரதேசத்தின் கின்னார் மாவட்டத்தில் பாறைகள் பெயர்ந்து உருண்டு அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்த வாகனத்தின் மீது விழுந்ததால் ஒன்பது பயணிகள் உயிரிழந்திருக்கிறார்கள். கொள்ளை நோய்த்தொற்றின் இரண்டாவது அலை சற்று அடங்கியிருப்பதால் பொது முடக்க விதிகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணிகள் ஹிமாசல பிரதேசத்திற்கும் உத்தரகண்டுக்கும் ஆயிரக்கணக்கில் பயணிக்கத் தொடங்கியபோது சில கட்டுப்பாடுகளை அரசு விதித்திருக்க வேண்டும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது.

தலைநகரான தில்லியும் பருவமழையின் சீற்றத்திற்கு விலக்காகவில்லை. கடந்த பல மாதங்களாக இருந்த கடுமையான கோடை முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இடியுடன் கூடிய மழை எதிர்பாராத திருப்பம். ஒரே நாளில் தில்லியில் 70 மி.மீ. மழை பொழிந்தபோது நகரம் வெள்ளக்காடானது. அதில் மிக அதிகமாக பாதிக்கப்பட்டது குருகிராம்.

இந்தியாவின் வடமேற்கு பகுதி முழுவதும் பரவலாகக் காணப்படும் பலத்த மழையால் நதிகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. பல கால்வாய்களின் கரைகள் உடைந்து கடுமையான பயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது. குடிசைகளில் வாழும் அடித்தட்டு மக்களின் நிலைமை பரிதாபமானது. ஆண்டுதோறும் பருவமழையால் ஏற்படும் சேதம் சமீப காலமாக அதிகரித்து வருகிறது. இதை வழக்கமான பாதிப்பு என்று நாம் புறந்தள்ளுவது பேதைமை.

2016-இல் இந்தியா ஒரேயொரு கடுமையான புயலைத்தான் எதிர்கொண்டது. 2018-லும், 2019-லும் ஆறு புயல்கள் இந்தியாவைத் தாக்கி பெரும் பாதிப்பை ஏற்படுத்திச் சென்றன. கடந்த ஆண்டு மிக மோசமான ஐந்து புயல்களை நாம் எதிர்கொண்டோம். அடிக்கடி புயலும், மழையும், வெள்ளப்பெருக்கும் கடந்த ஐந்து ஆண்டுகளாக வழக்கமாகி வருவதை நாம் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

புயல்கள் மட்டுமல்ல, மழைப்பொழிவின் அளவும் கடுமையும் அதிகரித்து வருகிறது என்பதையும் பார்க்க முடிகிறது. 2016-ஆம் ஆண்டில் பருவமழைக் காலத்தில் 226 கடுமையான மழைப்பொழிவுகள் காணப்பட்டன என்றால், 2019-இல் 554 மிகக் கடுமையான மழைப்பொழிவுகளும், 2020-இல் 341 கடும் மழைப்பொழிவுகளும் காணப்பட்டன. குறுகிய நேரத்தில் மிக அதிக அளவிலான மழைப்பொழிவு ஏற்படுவதால் மழைநீர் வடிகால்களோ, ஓடைகளோ, நதிகளோ அதை எதிர்கொள்ள முடியாமல் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இந்த பருவமழை மாற்றம் இந்தியாவை மட்டும் பாதிக்கிறது என்று கருதிவிட வேண்டாம். இரண்டு வாரங்களுக்கு முன்பு ஜெர்மனியில் 24 மணிநேரத்தில் பெய்த 15 செ.மீ. மழைப்பொழிவால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார இழப்பு 5 பில்லியன் யூரோ என்று கூறப்படுகிறது. சீனாவின் ஷென்ஷௌவில் ஒரு நாளில் ஏற்பட்ட 21 செ.மீ.க்கும் அதிகமான மழைப்பொழிவில் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து இன்னும் மீண்டபாடில்லை. இதுபோன்ற கடுமையான மழைப்பொழிவும் வெள்ளப்பெருக்கும் வருங்காலம் குறித்த அச்சத்தை ஏற்படுத்துகின்றன.

சுற்றுச்சூழல் அமைச்சகம் வளர்ச்சிப் பணிக்காகக் காடுகளை அழிப்பதை ஆதரிக்கிறது. இமயமலையானாலும், மேற்கு தொடர்ச்சி மலையானாலும், சூழலியலையோ, சுற்றுச்சூழலையோ பொருட்படுத்தாமல் சாலைகள், பாலங்கள் என்று கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி இயற்கையைச் சீண்டும்போது, நம்மை திருப்பித் தாக்க இயற்கை கையில் எடுத்திருக்கும் ஆயுதங்கள் அடைமழையும், புயல் மழையும் போலிருக்கிறது.

பருவமழை தொடங்கி பாதிதான் முடிந்திருக்கிறது. இனிமேல்தான் புயல்களும், பெருமழையும் அதிகரிக்கும் பருவம். அடுத்த சில மாதங்களையும் நாம் கடந்தாக வேண்டும். பருவம் எப்போது, எப்படி மாறக்கூடும் என்பதைக் கணிக்க முடியாத சூழலில் முன்கூட்டியே தயார்நிலையில் இருந்தால் மட்டுமே உயிரிழப்பையும், பொருள் இழப்பையும் தவிர்க்க முடியும்.

**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை.**

*பெய்யாமல் வாழ்வைக் கெடுக்கவல்லதும் மழை; மழையில்லாமல் வளம் கெட்டு நொந்தவர்க்குத் துணையாய் அவ்வாறே காக்க வல்லதும் மழையாகும்.*

திருக்குறள் (எண்: 15) *அதிகாரம்: வான் சிறப்பு*

# வேலியே பயிரை மேய்ந்தால்...



டி.எஸ். தியாகராசன்

அரசு அலுவலர்கள், அரசின் சொத்துகளைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் இருப்பவர்கள். அரசு விதிகளை மீறி பொதுச்சொத்திற்கு சேதம் விளைவிப்பவர்களைக் கண்டுபிடித்து தண்டனை வழங்க வல்ல அதிகாரம் படைத்தவர்கள். அரசின் சொத்துகளைப் பாதுகாக்க வேண்டியவர்களே அதனை தங்கள் சுயநலத்திற்காக ஆவணங்களை திருத்தி அல்லது மாற்றி பெரும் லாபம் ஈட்டுகிறார்கள் என்ற செய்தி வெளியுலகிற்குத் தெரிய வரும்போது 'வேலியே பயிரை மேய்ந்தால்' என்ற சொலவடைதான் நினைவுக்கு வருகிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் அறம் போதிக்கும் அற்புத நூல்கள். முன்னை நாளில் தமிழர்தம் நாவில் தினமும் நடமாடிய நற்சொற்கள். அவற்றைப் புன்சொற்களாக எண்ணிக் கொண்டு இந்நாளைய அரசு அலுவலர்கள் 'ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை' என்ற மறைமொழியை மறைவாக வைத்து விட்டுக் கூச்சமோ, குற்ற உணர்ச்சியோ, பயமோ இன்றி தங்கள் பணியின், பதவியின் அடையாளத்தைக் கூட மாற்றிக் கொள்ளாது கொள்ளையிடும் போக்கை என்னவென்பது?

சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக இந்தியப் பேரரசின் தேசிய நெடுஞ்சாலைதுறை காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டம் பீமண்ணன் தாங்கல் கிராமத்தில், சர்வே எண் 310-இன் கீழ் உள்ள 43 ஏக்கர் நிலம் 73 நபர்கள் மீது இருந்ததன் பட்டாக்களை நீக்கி விட்டது அரசு. காரணம், இந்தப் பட்டாக்கள் போலியானவை என்பதே. எப்படி இந்த மோசடி நடந்தது என்பதை அறியும்போது, இது என்ன கொடுமை என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்த 43 ஏக்கர் நிலத்தின் இன்றைய சந்தை மதிப்பு ரூ.1,200 கோடி. கடந்த ஆண்டு பீமண்ணன் தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர், தமிழ்நாடு அரசின் அப்போதைய தலைமைச் செயலாளருக்கு சர்வே எண் 310 நிலத்திற்கு தனக்குப் பட்டா வேண்டும் என்று மனு கொடுக்கிறார். தலைமைச் செயலாளர் இது பற்றி உடன் விசாரித்து நடவடிக்கை எடுக்க வருவாய்த்துறைக்கு ஆணையிடுகிறார். தீவிர விசாரணையின் போது அதே சர்வே நம்பரில் உள்ள 7.5 ஏக்கர் நிலத்திற்கு ஆஷிஸ் மேத்தா என்பவர் 2000-ஆம் ஆண்டிலேயே பட்டா பெற்றிருப்பது தெரிய வருகிறது.

இந்த பட்டாவை திருவண்ணாமலை துணை செட்டில்மெண்ட் அலுவலர் மேற்படி நபருக்கு வழங்கி உள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இந்த பட்டா போலியாகத் தயாரிக்கப்பட்டு அவர்க்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆஷிஸ் மேத்தா இந்த நிலத்தை தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு விற்று ரூபாய் 30 கோடி பெற்றிருக்கிறார். இன்னொரு போலி பட்டாதாரர் ஒன்பது கோடி ரூபாய்க்கு நெடுஞ்சாலைத் துறையினரிடம் விற்றிருக்கிறார்.

கடந்த மார்ச் மாதம் நில நிர்வாக ஆணையாளர் பங்கஜ்குமார் பன்சால் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்தது மட்டுமல்லாது, தேசிய நெடுஞ்சாலைத் துறையின் தலைவர் மூலம் வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்கவும் செய்தார்.

சிபிஐ அமைப்பு, ஸ்ரீபெரும்புதூர் வட்டாட்சியர் கொடுத்த மனுவின் அடிப்படையில், இரண்டு வருவாய்த்துறை அதிகாரிகள், நில பட்டாதாரர்களாக இருப்பவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தியதில், அந்த கிராமத்தில் உள்ள 43 ஏக்கர் நிலத்திற்கும் தேசிய நெடுஞ்சாலைத் துறை ரூ.102 கோடி வழங்கியுள்ளது தெரியவந்தது.

72 பட்டாதாரர்கள் போலியான பட்டாக்களைக் காட்டி பணம் பெற்றிருக்கிறார்கள். வருவாய்த்துறை நிலங்களை பல ஆண்டுகளுக்கு ஒரு முறை 'நிலச் சீர்திருத்தம்' என்ற பெயரில் (எஸ்எல்ஆர்) அளவிட்டு வருவார்கள். இந்த நிலங்களுக்கான நில சீர்திருத்தம் 1985-இல் நடைபெற்றிருக்கிறது.

இதன் அடிப்படையில் ரூபாய் 63 கோடியை 70 நபர்களுக்கு வழங்கியுள்ளது தேசிய நெடுஞ்சாலைத் துறை. 1985-இல் நடைபெற்ற நிலச் சீர்திருத்த சட்டத்திற்கு முன்பாக, 1960 முதல் 1970 வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் எந்தவித ஆவணச் சான்றுகளும் இல்லாத நிலையில், இந்த எழுபது நபர்களுக்கு போலி பட்டா வழங்கியதை கண்டுபிடித்தனர். இதனால் தற்போது இந்த 43 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்போரும், சிறுவணிகர்களும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இதுபோல்தான் பிரதமரின் விவசாயிகள் நலத்திட்டம் ஒன்றின் வழி வேளாண்மை மக்களுக்கு அவரவர்கள் வங்கிக் கணக்கில் தொகை செலுத்தப்பட்ட போது பல ஆயிரம் போலி கணக்குகள் தொடங்கி மோசடியாக பணம் பெற்றது வெளிச்சத்திற்கு வந்தது. அதுவும் அரசு அலுவலர்கள் துணையோடு என்ற அவலச் செய்தியும் வெளியானது.

அரசு அலுவலர்களுக்குஇப்போதெல்லாம் கை நிறைய ஊதியம். உடலுழைப்பு நல்கி தினக்கூலி ஈட்டுவோர்க்கு ஒரு நாள் பணி செய்யவில்லை எனில் ஊதியம் இல்லை. உடல் தளர்வுற்ற காலத்தில் பிணி உற்ற நேரங்களில் யார் தருவார் ஊதியம்? உழைத்தால்தான் இல்லத்தில் அடுப்பெரியும். அதுவும் இந்நாளில் மது பழக்கம் இருப்பின் அதுவும் இல்லை.

ஆனால், ஒருவர் அரசுப் பணியில் சேர்ந்து விட்டால் அறுபது வயது வரை கவலையில்லாமல் மூன்று வேளையும் உண்ணலாம், உடுக்கலாம், ஓய்வெடுக்கலாம். எல்லா நாளும் வேலை நாளாகக் கருதி கருவூலக் கதவுகள் திறந்தே இருக்கும். 'உண்பது நாழி, உடுப்பது இரண்டு', 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பவை வெறும் வெற்றுச் சொற்கள் அல்ல. ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் தெளிந்த உயர் நலம் கூட்டும் மேன்மைச் சொற்கள்.

நாம் என்ன இருநூறு ஆண்டுகளாக வாழ்ந்து விடப் போகிறோம்? நாம் ஈட்டும் ஊதியம் நமது வாழ்நாள்வரை துணை செய்யாதா என்ன? ஏன் இந்த பணமோகம்? 'படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால் போவான் போவான் ஐயோவென்று போவான்' என்கிறாரே மகாகவி பாரதியார். அரசு புறம்போக்கு நிலத்திற்குப் போலி பட்டா வழங்குவதும், அதனை அரசுக்கே விற்று கோடி கோடியாய் பணம் ஈட்டுவதும் அரசு அலுவலர்களின் நெஞ்சைச் சுடவில்லையா?

**'படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால் போவான் போவான் ஐயோவென்று போவான்' என்கிறார் மகாகவி பாரதியார். அரசு புறம்போக்கு நிலத்திற்கு போலி பட்டா வழங்குவதும், அதனை அரசுக்கே விற்று முறைகேடாக கோடி கோடியாய் பணம் ஈட்டுவதும் அரசு அலுவலர்களின் நெஞ்சைச் சுடவில்லையா?**

கிழக்கிந்திய கம்பெனி வணிகம் செய்ய இந்தியா வந்தபோது, போக்கிரிப் பிள்ளையொன்று இங்கிலாந்து கப்பலில் ஏறி இந்தியா வந்தடைந்தது. கப்பலை விட்டு இறங்கிய அந்தப் போக்கிரிப் பிள்ளைதான் ராபர்ட் கிளைவ். இவர்தான் இந்திய மண்ணில் பறங்கியர் ஆட்சிக்கு வழிகோலியவர். இதனால் இவர் முதல் தடவையாக இந்தியாவிலிருந்து இங்கிலாந்து சென்றபோது ராஜமரியாதையை ஆங்கில அரசும், வணிக நிறுவனங்களும், பொதுமக்களும் நல்கினர்.

அதே ராபர்ட் கிளைவ் இரண்டாவது முறையாக இங்கிலாந்து சென்றபோது அவமரியாதையைத்தான் ஏற்க வேண்டி இருந்தது. காரணம், இவர் வங்காளத்தில் கவர்னராக இருந்தபோது முஸ்லிம் நவாபுகளிடம் லஞ்சம் பெற்றார். இவர் மீது இங்கிலாந்து அரசு விசாரணை நடத்தி இவரது ஊழலைக் கண்டுபிடித்தது. பின்னர் இவர் மன உளைச்சலால் தற்கொலை செய்துகொண்டார் என்பது வரலாறு.

கடந்த மாதம், சென்னையில் காவலர்களே நகைக் கடையில் திருடிய சம்பவம் பரபரப்பானது. பல ஆண்டுகட்கு முன்னர் வட இந்தியாவில் வங்கி ஒன்றில் ஒருவர் தனது நிலம், கட்டடம் போன்றவற்றை அடைமானமாக வைத்து பெருந்தொகையைக் கடனாகப் பெற்றார். கடன் பெற்று பல ஆண்டுகள் ஆன பின்னரும் கடன் தொகைக்கான வட்டியோ, அசலோ கட்டப்படவில்லை. வங்கி, பலமுறை அறிவிப்பு அனுப்பியும் பதில் இல்லை.

பிறகு வங்கி சட்டப்படி அவர் மீது நடவடிக்கை எடுத்து, அவரது சொத்துகளை ஏலத்திற்கு கொண்டு வர முற்பட்டது. குறிப்பிட்ட நாளில் பொதுமக்கள் முன்னிலையில் ஏலம் விடுவதற்கு முன்பு அந்த அசையா சொத்துக்களின் சந்தை மதிப்பை அறிந்து கொள்வதற்காக வங்கியின் உயரதிகாரிகள் சென்றபோது பேரதிர்ச்சி அடைந்தார்கள்.

கடன் பெற்றவர் வங்கியில் சமர்ப்பித்த சர்வே எண்ணில் அவ்வூர் ரயில்வே ஸ்டேஷனும், கட்டடமும் இருந்தன. போலியாக ஆவணங்களைத் தயாரித்து கடன் பெற்றிருப்பது தெரிய வந்தது. கடன் வாங்கியவர் தலைமறைவாகி விட்டார் என்பதையும் தெரிந்து கொண்டார்கள். இப்படிப் போலி ஆவண தயாரிப்பில் அரசு அலுவலர்கள் ஈடுபட்டிருக்கக் கூடும் என்பதில் ஐயம் இல்லை.

திரைப்படம் ஒன்றில் எனது நிலத்தில் இருந்த கிணற்றைக் காணவில்லை என்று காவல்துறையிடம் புகார் அளித்தபோது, கிணறு வெட்ட அரசிடம் நிதி பெற்று கிணறு வெட்டிய சான்றிதழைக் காட்டியது நினைவுக்கு வருகிறது.

இப்படி சட்டம் இயற்றும் பணியில் அதிகாரத்தில் இருப்பவர்களும், சட்டத்தை பரிபாலனம் செய்ய வேண்டிய அரசின் அலுவலர்களும் அன்றாடம் ஆங்காங்கு கிடைத்த வழிகளில் எல்லாம் முறைகேடுகளில் ஈடுபடுவது எதனால்? தொடக்கப் பள்ளிகளில், மேனிலைப் பள்ளிகளில், கல்லூரிகளில், ஆராய்ச்சி வகுப்புகளில் பாவ புண்ணிய வரலாறுகளோ, அறநெறியில் நின்றால் உன்னை உலகமே பாராட்டும் என்ற வகையிலான பாடங்களோ நடத்தப்படுவதில்லை.

பௌதிகம், ரசாயனம், கணிதம், வானவியல், இயற்பியல், உயிரியல் போன்ற உயர் பாடங்கள் படிப்பது மட்டும் போதாது. வாழ்க்கையில் எப்படி அரிச்சந்திரனைப் போலவும், மனுநீதிச் சோழனைப் போலவும், உண்மையை, நீதியை கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் கற்க வேண்டும்; கற்பிக்க வேண்டும். பயிருக்கு வேலிபோல் இருக்க அரசு அலுவலர்கள் பழக வேண்டும்; அரசு அவர்களைப் பழக்க வேண்டும்.

கட்டுரையாளர்:
**தலைவர்,**
**திருக்கோவலூர் பண்பாட்டுக் கழகம்.**

# மாற்றத்தை எதிர்கொள்வோம்

இரா. கதிரவன்

'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பது கார்ல்மார்க்ஸ் கூற்று. நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் ஏதோவொரு விதத்தில், எப்போதும் மாற்றத்துக்கு உள்ளாகிறது. சுற்றுச்சூழல், பொருளாதாரம், கேளிக்கை, பொறியியல், அறிவியல், மக்களின் பழக்க வழக்கங்கள் என அனைத்தும் மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றன. இவ்வாறு மாற்றங்கள் நிகழ்வது மட்டுமல்ல, அவை மின்னல் வேகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல, இவ்வாறு நம்மைச் சுற்றி நிகழ்கின்ற மாற்றங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் நம் மீது ஏதாவது ஒரு விதத்தில் படிந்து கொண்டும் உள்ளன. உலகின் ஏதேனும் ஒரு மூலையில் ஏற்படுகின்ற ஒரு நிகழ்ச்சி, உலகின் பல்வேறு பகுதிகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

கடந்த சில பத்தாண்டுகளில் நிகழ்ந்த விஞ்ஞான மாற்றங்களும், இனி நடக்க இருப்பதாக கூறப்படும் மாற்றங்களும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

உதாரணமாக, செயற்கை நுண்ணறிவு (ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ்) துறையில் ஏற்படும் மாற்றங்கள் நம்மை மலைக்க வைக்கின்றன. கணினிகள், அவற்றுக்குக் கொடுக்கப்படும் தரவுகள் அடிப்படையில் செயலாற்றின.

ஆனால், இப்போது அவை மனிதனின் பொறிகளுக்கு ஈடாகவும், அவற்றையும் தாண்டித் தரவுகளைத் தேடி எடுத்து, அவற்றை அலசி ஆராய்ந்து, அவற்றின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கும் அளவுக்கு செயற்கை நுண்ணறிவுத் துறை வளர்ச்சி அடைந்துள்ளது.

முகநூலில் அல்லது பொதுத்தளங்களில் உங்களது பதிவுகள் கண்காணிக்கப்படுகின்றன. நீங்கள் தேடும் விஷயங்களிலிருந்து, தரவுகள் சேகரிக்கப்பட்டு, உங்கள் ஆசைகள், பிடித்த உணவு, பிடித்த சினிமா, பிடித்த - பிடிக்காத அரசியல் தலைவர்கள், நீங்கள் எப்பொழுது எங்கு இருந்தீர்கள், எவருடன் தொடர்பில் இருந்தீர்கள் என்றெல்லாம் கண்காணிக்கப்படுகிறது.

உங்களுடைய நெருங்கிய தோழன் அல்லது தோழி, உங்கள் பெற்றோர் இவர்களை விட உங்களைப் பற்றிய சரியான துல்லியமான கணிப்பு, கணினிக்குள் புதைந்து கிடக்கிறது.

இது மட்டுமல்ல, செயற்கை நுண்ணறிவுத் துறை வளர்ச்சியின் காரணமாக, வெகு விரைவில் ஆளில்லாத கார்கள் வீதிகளில் உலவும். சரக்கு வாகனங்கள் ஓட்டுனரின்றி பெருவழிகளில் பயணிக்கும்.

மருத்துவத் துறையில், நாம் நம்புகின்ற கைராசியான டாக்டர், ஒரு கைதேர்ந்த இயந்திரனை நம்பி, அவனை அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்துவார். சிகிச்சை சார் முடிவுகளை மருத்துவர் தீர்மானித்த காலம் மாறி, கணினிகள் நிச்சயிக்கும் காலம் நெருங்கி விட்டது.

உயர்ந்த கட்டடங்களில் ஆளில்லாமல், இயந்திரங்கள் வண்ணம் தீட்டும்; ஆளில்லா உற்பத்தித் தொழிற்கூடங்கள் அநேகமாக இந்தியாவுக்குள்ளும் வந்துவிட்டன; நம் காரின் பயணப்பாதை எங்கோ ஒரு கணினியால் நிர்ணயிக்கப்படுகிறது; 'ட்ரோன்' எனும் இயந்திரத் தும்பிகள் என்னவெல்லாம் செய்யுமோ என்ற கலக்கம் பாதுகாப்புத் துறையிலும் ஏற்பட்டுள்ளது.

நாம் கணினியைத் திறந்ததும் நம் கண்களில் தென்படுகின்ற விளம்பரங்கள் தற்செயல் நிகழ்வுகள் அல்ல; அவை எங்கோ ஏதோ ஒரு கணினியால் மென்பொருளால் நிர்ணயிக்கப்படுகின்றன. அந்த அளவுக்கு செயற்கை நுண்ணறிவு எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்த இருக்கிறது. விரைவில் பல்வேறு துறைகளில் மாற்றங்கள் வெடிக்க உள்ளன.

இந்த மாற்றங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களுக்கு ஈடு கொடுக்க நாம் தயாராக வேண்டும்.

'போட்டி மிகுந்த இவ்வுலகில், ஒருவர் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள மிக வேகமாக மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும்; இல்லையெனில், அவர் தனது இருப்பினை இழந்து விடுவார்' என்று மேலாண்மைத் துறையில் சொல்லப்படுவதுண்டு.

எந்தப் பணியும் நிரந்தரமானது என்று சொல்ல முடியாத அளவுக்கு, பணிசார் திறனின் தேவைகள் மாறிக்கொண்டிருக்கும்; நமது அரசுகள் இவற்றை உணர்ந்துதான், திறனூட்டல் பயிற்சியினை துவக்கியுள்ளது.

பல்வேறு துறைகளிலும் நிகழும் மாற்றங்களுக்கு ஏற்ப நமது தனிமனித - சமுதாய வாழ்க்கை முறைகளை நாம் முறைப்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். குறிப்பாக, கற்றல் - இது பள்ளிக்கூடங்களில் கல்லூரிகளில் மதிப்பெண்களுக்காக கற்பது அல்ல - அறிவியல் உலகில் ஏற்படும் மாற்றங்கள் குறித்த புரிதல் அடிப்படையில் வாழ்நாள் முழுதும் தன்னை மாற்றத்துக்காகத் தயார் படுத்திக் கொள்ளும் பயிற்சி ஆகும்.

இந்த சவாலான சூழலில், நமது நேர மேலாண்மை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். நமது நேரத்தை எவ்வளவு முறையாகப் பயன்படுத்துகிறோம் என்பது முக்கியம்.

இவை அனைத்திற்கும் அடிப்படையாக, அறிவியல் சிந்தனை சார்ந்த சூழல் (சயின்டிஃபிக் டெம்பர்) உள்ள சமுதாயமாக மாற வேண்டிய கட்டாயம் உள்ளது. அச்சூழல் மட்டுமே மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு செயல் திறனை வளர்க்கும்.

இதனை ஏற்படுத்துவதில் அரசு, பள்ளிகள், கல்லூரிகள், பத்திரிகைகள், தனிமனிதர்கள் என அனைத்துத் தரப்புக்கும் பொறுப்பு உள்ளது. குறிப்பாக, தற்போது தனி மனிதன் வாழ்வில் பெரும் ஆதிக்கம் செலுத்தி வரும் ஊடகங்களின் பொறுப்பு மிக மிக முக்கியமான ஒன்றாகும்.

ஊடகங்களின் வாயிலாக மக்களின் கவனத்திற்கு எத்தகைய முக்கிய விஷயங்கள் கொண்டு செல்லப்படுகின்றன என்பது மிக முக்கியமானதாகும். இந்தப் பின்னணியில், நம்மைச் சுற்றி நிகழும் அசுர வேக மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க, நாம் கவனக்குவிப்புடன் தயாராவோம்.

வளர்ந்து வரும் நாடு, வரவிருக்கும் மாற்றங்களுக்கேற்ப தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியது முதல் கட்டமாகும். அதற்கு அடுத்த கட்டமாகத்தான், உலகில் மாற்றங்களை ஏற்படுத்தும் நாடாக அது மாற முடியும்.

மாற்றங்களை எதிர்கொள்வோம்; ஏற்படுத்துவோம்!

## அன்புள்ள ஆசிரியருக்கு...

edit.dinamani@gmail.com

### பொறுப்பின்மை

நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற இயலாமல் எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டது அவர்களின் பொறுப்பின்மையையே வெளிப்படுத்துகிறது ('அமளி அரசியல்!' தலையங்கம் 21-7-2021). தடுப்பூசி தட்டுப்பாட்டால் பொதுமக்கள் படும் அவதி, இணையவழி கல்வியைப் பெற முடியாத மாணவர்களின் பரிதாப நிலை, எரிபொருள்கள் சராசரி மனிதர்கள் வாங்கமுடியாத அளவுக்கு விலையேற்றம் கண்டிருப்பது இவையெல்லாம் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசிடம் கேள்வி எழுப்பியிருக்க வேண்டாமா? தாங்கள் அமளியில் ஈடுபடுவதால் பொதுமக்கள் மத்தியில் தங்களுக்கு அவப்பெயர் ஏற்படுவதைத் தவிர, வேறு எந்த விளைவும் ஏற்படப்போவதில்லை என்பதை எதிர்க்கட்சிகள் உணர வேண்டும்.

**ஆர். முகுந்தன்,** *துறையூர்.*

### மரபுக்கு முரண்

மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகள் முன்வைத்த பிரச்னைகள் குறித்த விவாதத்திற்கு அனுமதி வழங்கப்படும் என்று மாநிலங்களவைத் தலைவர் உறுதியளித்தும்கூட, எதிர்க்கட்சியினர் அதனை ஏற்காமல் அமளியில் ஈடுபட்டது தவறு. காலமான முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிப்பதைக்கூட அனுமதிக்காத எதிர்க்கட்சிகளின் போக்கு நாடாளுமன்ற மரபுகளுக்கே முரணாகும். கொள்ளைநோய், வேலையின்மை ஆகிய மக்கள் பிரச்னைகள் குறித்து விவாதிக்காமல் வெறுப்பு அரசியலை உறுப்பினர்கள் முன்னெடுப்பது அவர்களுக்கு வாக்களித்த மக்களுக்கு செய்யும் துரோகமாகும். மக்கள் பிரச்னைகளை மையமாக வைத்து ஆரோக்கியமான விவாதங்கள் நாடாளுமன்றத்தில் நடைபெற வேண்டும்.

**உ. இராஜமாணிக்கம்,** *கடலூர்.*

### வரப்பிரசாதம்

விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சியாளர் அமைவது என்பது ஒரு வரப்பிரசாதமே. பயிற்சியாளர்களுக்கு இடையே நிலவும் பனிப்போர் வெளியே தெரிவதில்லை ('வெற்றி வசப்பட என்ன செய்ய வேண்டும்?' டி.எஸ்.ஆர். வேங்கடரமணா 21-7-2021). பாலியல் தொல்லை, அதிகாரிகளின் அராஜகப்போக்கு போன்றவை குறித்து பயிற்சியாளர் கூறியுள்ள கருத்துகள் அதிர்ச்சியளிக்கின்றன. விளையாட்டுத் துறை சார்ந்த அமைச்சரும் அதிகாரிகளும் விளையாட்டுத் துறை குறித்து நன்கு அறிந்தவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

**பா. ரகுபதி,** *திருப்பூர்.*

## மக்கள் நம்பிக்கை

ஒருவருக்கு அரசியல் செல்வாக்கும் பணபலமும் இருந்தால் அவர் எப்படிப்பட்ட குற்றச்செயலில் ஈடுபட்டாலும் தண்டனையிலிருந்து தப்பித்து விடலாம் என்கிற நிலையே நம் நாட்டில் காணப்படுகிறது ('மேம்படுத்தப்பட வேண்டிய புலனாய்வுத்துறை!' பெ. கண்ணப்பன் ஐ.பி.எஸ். 22-7-2021). நீதிமன்றங்கள், வழக்குகளை விரைவில் முடித்து, குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கினால் தவறு செய்ய எண்ணுபவர்களுக்கு அச்சம் ஏற்படும்.

சாதாரண வழக்கு முதல் கொலைக்குற்ற வழக்கு வரை இது பொருந்தும். குற்றத்தின் தீவிரத்தைப் பொருத்து மேல்முறையீடு தடை செய்யப்பட வேண்டும். வழக்குகளை விசாரிப்பதில் தாமதமானாலும் மக்கள் இன்னும் நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றனர். அந்த நம்பிக்கை பொய்யாகாமல் இருக்க, வழக்குகள் விரைவில் முடிக்கப்பட்டு, தீர்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

**கோ. ராஜேஷ் கோபால்,** *அரவங்காடு.*

### எச்சரிக்கை

கொள்ளை நோய்த்தொற்றின் இரண்டாவது அலை குறைந்து வருகிறது என்றாலும் சில மாநிலங்களில் நிலைமை இன்னும் கட்டுக்குள் வரவில்லை என்பதே உண்மை ('அச்சமல்ல, ஆபத்து!' தலையங்கம் (22-7-2021). மூன்றாவது அலை வருமா, வராதா என்று கணிக்க முடியாத நிலையில், வந்தால் அதனை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும் என்று பிரதமர் கூறியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தியாவில் முதன்முதலில் கண்டறியப்பட்ட கரோனா தீநுண்மியின் டெல்டா உருமாற்றம், உலகம் முழுதும் பரவக்கூடிய ஆபத்து இருப்பதாக உலக சுகாதார அமைப்பு விடுத்திருக்கும் எச்சரிக்கையை நாம் புறக்கணிக்கக்கூடாது. வருமுன் காப்பதே அறிவுடைமை. எச்சரிக்கையுடன் இருப்போம்.

**ஆ. மரகதம்,** செங்கம்.

### தலையாய கடமை

வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட நடவடிக்கை அன்று மிகவும் முற்போக்கான நடவடிக்கையாகும். அப்போது காங்கிரஸ் கட்சியினருக்குள்ளேயே வங்கிகளை நாட்டுடைமை ஆக்குவது குறித்து இருவித கருத்துகள் இருந்தன ('அரசு வங்கியும் தனியார் வங்கியும்' 22-7-2021). தற்போதைய மத்திய அரசு தனியார்மயத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலைப்பாட்டை எடுக்கலாம். ஆனால், வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதால் நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைத்துள்ள நன்மைகளை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறைகள் இல்லாமல் இல்லை. அவை களையப்பட வேண்டியவை. குறைகளை நீக்கி வங்கிகள் சிறப்பாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டியதே மத்திய அரசின் தலையாய கடமை.

**த. யாபேத்தாசன்,** பேய்க்குளம்.

https://t.me/Tamil_epaper2

# கரோனா பாதிப்பு குறையவில்லை: மாநில அரசுகளுக்கு மத்திய அரசு எச்சரிக்கை

**புது தில்லி, ஜூலை 28:** நாட்டில் கரோனா தொற்று பாதிப்பு எண்ணிக்கை இன்னமும் அதிகமாக உள்ளதால், இந்த விவகாரத்தில் மனநிறைவு பெற்று விட்டதைப்போல் செயல்பட வேண்டாம் என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு எச்சரித்துள்ளது.

கரோனா பொது முடக்க விதிமுறைகளை ஆகஸ்ட் 31-ஆம் தேதி வரை நீட்டித்து மத்திய உள்துறைச் செயலர் அஜய் பஹல்லா மாநில அரசுகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில், 'பரிசோதனை, கண்காணிப்பு, சிகிச்சை, தடுப்பூசி, கரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஆகியவற்றை தொடர்ந்து கடைப்பிடித்து கரோனா தொற்றைத் தடுக்க வேண்டும்.

வரும் பண்டிகை நாள்களில், கூட்டம் அதிகமாக கூடும் இடங்களில் கரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். கரோனா தொற்று பாதிப்பு எண்ணிக்கை பல மாநிலங்களில் குறைந்து வருவதால் பொருளாதார மீட்பு நடவடிக்கைள் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், தளர்வுகளை மிகக் கவனமான அறிவிக்க வேண்டும். கரோனா பாதிப்பு இன்னமும் அதிகமாகதான் உள்ளது. இந்த விவகாரத்தில் மனநிறைவு பெற்று விட்டதைப் போல் செயல்பட வேண்டாம். இதில் அலட்சியமாக செயல்படும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்லூரிகளில் ஆக.9 முதல் இணையவழியில் வகுப்புகள் தொடங்கும்



**சென்னை, ஜூலை 28:** தமிழகத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர்களைத் தவிர பிற மாணவர்களுக்கான இணையவழி வகுப்புகள் ஆக.9- ஆம் தேதி தொடங்க இருப்பதாக உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சென்னையில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணவர்களைத் தவிர, இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் இணையவழியில் ஆக.9-ஆம் தேதி முதல் தொடங்கும். இணையவழி வகுப்புகளில் மாணவர்கள் பங்கேற்கக் கூடிய வகையில் சிம் கார்டுகள் வழங்கப்படும் . அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு செய்முறைத் தேர்வு, தேர்வுகளில் மதிப்பெண் கணக்கீடு செய்வது போல் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் ஒரே மாதிரியான மதிப்பீட்டு முறை கொண்டுவருவது குறித்து மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

பொறியியல் படிப்புகளான பி.இ., பி.டெக். ஆகியவற்றுக்கு தற்போது வரை 57,513 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கை வரும் நாள்களில் மேலும் அதிகரிக்கும். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1 லட்சத்து 26,748 விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இவை அந்தந்தக் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். மதிப்பெண் அடிப்படையில் மட்டுமே மாணவர் சேர்க்கை நடத்தப்படும்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் முதல் மற்றும் இரண்டாம் பருவத் தேர்வுகள் அனைத்திலும் தோல்வி அடைந்தால் தகுதி நீக்கம் செய்யப்படும் முறை நடைமுறையில் உள்ளது. இதில் மாற்றம் செய்யப்பட்டு பிற கல்லூரிகளில் உள்ளது போல் அரியர் தேர்வுகள் எழுத வாய்ப்பளிக்கப்படும் என்றார் அவர்.

# சிறு தொழில்களை மீட்டெடுக்க நிபுணர் குழு



என்.சுந்தரதேவன்

**சென்னை, ஜூலை 28:** கரோனா நோய்த் தொற்றின் எதிரொலி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மீட்டெடுக்க நிபுணர் குழுவை அமைத்து தமிழக அரசு புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மீட்டெடுப்பதற்கான திட்டங்களை வகுக்க தொழிலதிபர்கள், வங்கியாளர்கள், நிதித்துறை வல்லுநர்கள், அரசு அலுவலர்கள் அடங்கிய நிபுணர் குழு அமைக்கப்படும் என்று ஆளுநர்

உரையில் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், முன்னாள் தொழில் துறைச் செயலாளர் என்.சுந்தரத்தேவன் தலைமையில் நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**குழு உறுப்பினர்கள் யார்?:** பல்வேறு துறைகளில் பணியாற்றும் ஏழு பேர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் எம்.விஜயபாஸ்கர், இந்திய ரிசர்வ் வங்கிக் குழுவின் முன்னாள் உறுப்பினர் பிந்து ஆனந்த், இந்திய சிறுதொழில்கள் மேம்பாட்டு வங்கியின் முன்னாள் தலைவர் பாலசுப்ரமணியம், ஆம்பியர் வெகிகல்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி ஹேமலதா அண்ணாமலை, இந்திய ஏற்றுமதி கழகங்கள் கூட்டமைப்பின் மண்டலத் தலைவர் இஸ்ரார் அகமத், சிறு மற்றும் சிறிய தொழில்கள் சங்க தலைவர் அன்புராஜன், இந்திய ரிசர்வ் வங்கிக் குழுவின் முன்னாள் உறுப்பினர் ஆர். ஆனந்த் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவில் அலுவல்சாரா உறுப்பினர்களாக அரசுத் துறை உயரதிகாரிகள் இடம்பெற்றிருப்பர். நிதித் துறை செயலாளர், தொழில்துறை செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை செயலாளர், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், மாநில அளவிலான வங்கியாளர்கள் குழுவின் தலைவர் ஆகியோர் இடம்பெற்றிருப்பர்.

**பணிகள் என்ன?:** தமிழகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றிலிருந்து நிறுவனங்களை மீட்டெடுப்பதற்குத் தேவையான உடனடி, குறுகிய மற்றும் நீண்டகால நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான பரிந்துரைகளை நிபுணர் குழு வழங்கும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கடன் வசதி பெறவும், ஏற்றுமதியை மேம்படுத்தவும் தேவையான ஆலோசனைகளை அளிக்கும்.

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு, வணிகம் புரிதலை எளிதாக்குதல் மற்றும் மனித ஆற்றல் தொடர்பாக ஆராயும். மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியை உயர்த்த ஆலோசனைகளையும் அளிக்கும். இந்தக் குழு தனது அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் அரசுக்கு அளிக்கும் என்று தனது அறிவிப்பில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.




# மக்களவையில் நிறைவேறியது திவால் சட்டத் திருத்த மசோதா

**புது தில்லி, ஜூலை 26:** திவால் சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் விவாதமின்றி புதன்கிழமை நிறைவேறியது.

மக்களவையில் கடந்த திங்கள்கிழமை இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா மீது விவாதம் நடத்த வேண்டும் என்று பெருநிறுவன விவகாரங்கள் துறை இணையமைச்சர் இந்திரஜித் சிங், மக்களவையில் புதன்கிழமை கோரிக்கை விடுத்தார். ஆனால், பெகாஸஸ் உளவு விவகாரம், வேளாண் சட்டங்கள் ஆகியவற்றை முன்வைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வந்ததால், விவாதம் எதுவும் நடத்தப்படாமல், திவால் சட்டத் திருத்த மசோதா அவையில் நிறைவேற்றப்பட்டது.

கரோனா பரவலைக் கட்டுப்படுத்த அமல்படுத்தப்பட்ட பொதுமுடக்கத்தால் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் (எம்எஸ்எம்இ) கடுமையாகப் பாதிக்கப்பட்டன. அந்த நிறுவனங்களுக்கு உதவும் வகையில் திவால் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான அவசரச் சட்டத்தை மத்திய அரசு கடந்த ஏப்ரலில் இயற்றியது.

அதன்படி, எம்எஸ்எம்இ நிறுவனங்கள் மீது திவால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான குறைந்தபட்ச வரம்பு ரூ.10 லட்சத்திலிருந்து ரூ.1 கோடியாக அதிகரிக்கப்பட்டது. அந்த அவசரச் சட்டத்துக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறும் நோக்கில் திவால் சட்டத் திருத்த மசோதா மக்களவையில் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடியுடன் அமெரிக்க அமைச்சர் சந்திப்பு

**புது தில்லி, ஜூலை 28:** இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்த அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார்.

புதன்கிழமை மாலையில் பிரதமர் மோடியை ஆன்டனி பிளிங்கன் சந்தித்தார். இதுகுறித்து பிரதமர் மோடி தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'ஆன்டனி பிளிங்கன் உடனான சந்திப்பு நல்ல விதமாக அமைந்தது. இந்தியா-அமெரிக்கா இடையேயான உறவு, சர்வதேச நலனுக்கான சக்தியாகவும், ஜனநாயக பண்புகளுக்கான ஆணிவேராகவும் உள்ளது. எனவே, இரு நாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்துவதில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உறுதியுடன் இருப்பதை வரவேற்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

**ஜெய்சங்கருடன்...** முன்னதாக, வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரை பிளிங்கன் சந்தித்துப் பேசினார்.

எஸ்.ஜெய்சங்கர் உடனான சந்திப்பின்போது, ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு நிலவரம், இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள், கரோனா பரவலைத் தடுப்பதில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பது ஆகியவை குறித்து பிளிங்கன் விவாதித்தார்.



பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன்.

பின்னர் எஸ்.ஜெய்சங்கரும், ஆன்டனி பிளிங்கனும் கூட்டாகச் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தனர். அப்போது, பிளிங்கன் கூறியதாவது: இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து 21-ஆம் நூற்றாண்டுக்கு வடிவம் கொடுக்கின்றன. இதனால்தான் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த வேண்டும் என்பது அமெரிக்காவின் முக்கிய வெளியுறவுக் கொள்கையாக உள்ளது. ஆப்கானிஸ்தானில் வளர்ச்சியும் ஸ்திரத்தன்மையும் ஏற்பட இந்தியா தொடர்ந்து முக்கியப் பங்காற்றும் என்றார்.

அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கூறுகையில், 'ஆப்கானிஸ்தான், இந்திய-பசிபிக் பிராந்தியம், வளைகுடா நாடுகள் ஆகியவற்றின் பிரச்னைகள் குறித்து இருவரும் விவாதித்தோம்' என்றார்.

https://t.me/Tamil_epaper2

இந்த சந்திப்புக்கு முன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலை ஆன்டனி பிளிங்கன் சந்தித்துப் பேசினார். அப்போது, இரு தரப்பு விவகாரங்கள் குறித்தும், ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு உள்ளிட்ட பிராந்திய விவகாரங்கள் குறித்தும் இருவரும் விவாதித்தனர். இந்தியா-அமெரிக்கா இடையேயான உறவை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வது குறித்தும் இருவரும் விவாதித்தனர்.

முன்னதாக, அரசு சாரா நிகழ்ச்சி ஒன்றில் ஆன்டனி பிளிங்கன் கலந்துகொண்டு உரையாற்றினார். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'இந்தியாவும் அமெரிக்காவும் ஜனநாயக பண்புகளுக்கு மதிப்பளிக்கும் நாடுகள். இதுதான் இரு நாடுகளுக்கு இடையேயான உறவின் அடித்தளமாகவும், நாட்டின் பன்முகத்தன்மை வாய்ந்த சமூகத்தின் பிரதிபலிப்பாகவும் உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்த நிகழ்ச்சியில் பிளிங்கன் பேசுகையில், 'அரசு குறித்து கருத்து சொல்வதற்கு அனைத்து மக்களும் தகுதியானவர்கள். அவர்களின் பின்னணியை ஆராயாமல், அவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்' என்றார்.

**தலாய்லாமாவின் பிரதிநிதி சந்திப்பு:** பௌத்த துறவி தலாய் லாமாவின் மூத்த பிரதிநிதியான கோடப் டோங்சங், ஆன்டனி பிளிங்கனை சந்தித்துப் பேசினார். அப்போது, திபெத்திய இயக்கத்துக்கு அமெரிக்கா அளித்து வரும் ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

## 'கரோனா தடுப்பூசி திட்டத்துக்கு ரூ.186 கோடி'

இந்தியாவின் கரோனா தடுப்பூசி திட்டத்துக்கு அமெரிக்கா ரூ.186 கோடி நிதியுதவி அளிக்கும் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் சுட்டுரையில் புதன்கிழமை வெளியிட்ட பதிவில், 'இந்தியாவின் கரோனா தடுப்பூசி திட்டத்துக்கு உதவ பன்னாட்டு வளர்ச்சிக்கான அமெரிக்க அமைப்பு மூலம் கூடுதலாக 25 மில்லியன் டாலர்கள் (ரூ.186 கோடி) நிதியுதவியை அமெரிக்க அரசு வழங்கும்'' என்று தெரிவித்துள்ளார்.

# அடுத்த ஆண்டு 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்: ஆணையம் ஆலோசனை

**புது தில்லி, ஜூலை 28:** அடுத்த ஆண்டு 5 மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, அதற்கான முன்னேற்பாடுகள் குறித்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையம் புதன்கிழமை ஆலோசனை நடத்தியது.

கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களின் பேரவை பதவிக் காலம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வெவ்வேறு தேதிகளில் முடிவடைகிறது. உத்தர பிரதேச பேரவையின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு மே மாதம் நிறைவடைகிறது. இந்த 5 மாநில பேரவைகளுக்கான தேர்தல் ஆண்டு தொடக்கத்திலேயே நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதையொட்டி, தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து 5 மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் தலைமை தேர்தல் ஆணையர் சுஷீல் சந்திரா தில்லியில் புதன்கிழமை ஆலோசனை மேற்கொண்டார். வாக்குச்சாவடிகளில் குறைந்தபட்ச வசதிகளை உறுதிப்படுத்துவது, வாக்காளர் பதிவை எளிமைப்படுத்துவது, 80 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அஞ்சல் வாக்கு வசதி ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

# மாநிலங்களவை: அமளிக்கிடையே நிறைவேறியது சிறார் நீதிச் சட்டத் திருத்த மசோதா

**புது தில்லி, ஜூலை 28:** மாநிலங்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளிக்கு இடையே சிறார் நீதிச் சட்டத் திருத்த மசோதா புதன்கிழமை நிறைவேறியது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கடந்த 19-ஆம் தேதி தொடங்கியது. அன்றைய தினத்தில் இருந்து வேளாண் சட்டங்கள், பெகாஸஸ் உளவுக் குற்றச்சாட்டு, எரிபொருள் விலை உயர்வு உள்ளிட்ட விவகாரங்களை முன்வைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், மாநிலங்களவை அவைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு தலைமையில் புதன்கிழமை கூடியது. அப்போது, முக்கிய பிரச்னைகள் குறித்து விவாதிக்க உடனடி கேள்வி நேரம் நடத்துவதற்கு வெங்கையா நாயுடு அழைப்பு விடுத்தார். ஆனால், காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், வேளாண் சட்டங்கள், பெகாஸஸ் உளவுக் குற்றச்சாட்டு, எரிபொருள் விலை உயர்வு உள்ளிட்ட விவகாரங்களை எழுப்பி முழக்கமிட்டனர். இதனால் அவையை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைத்தார்.

12 மணிக்கு அவை கூடியபோதும் இதே நிலைமை நீடித்ததால், அவை 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. உணவு இடைவேளைக்குப் பிறகு பாஜக எம்.பி. புவனேஸ்வர் கலீதா அவையை வழிநடத்தினார். அப்போது, சிறார் நீதிச் சட்டப் பாதுகாப்பு மசோதாவை தாக்கல் செய்யுமாறு மத்திய மகளிர் மற்றும் சிறார் நலத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானிக்கு அழைப்பு விடுத்தார். அதை ஏற்றுக் கொண்டு மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ள அம்சங்களை ஸ்மிருதி இரானி விளக்கிக்கூறினார். ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வந்தனர். இதனால் அவையை 2.45 மணி வரை புவனேஸ்வர் கலீதா ஒத்திவத்தார்.

மாநிலங்களவை மீண்டும் கூடிய போது, சிறார் நீதிச் சட்டத் திருத்த மசோதா மீதான விவாதத்தில் பங்கேற்கும் உறுப்பினர்களின் பெயர்களை வாசித்தார். ஆனால், யாரும் விவாதத்துக்குத் தயாராக இல்லை. எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிலர், மசோதா மீது டிவிசன் முறையில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றனர். சிலர் அவையின் மையப் பகுதியில் திரண்டு அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியபடி இருந்தனர். இதனால், புவனேஸ்வர் கலீதா கேட்டுக்கொண்டபடி, சிறார் நீதிச் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றுவதற்கான நடைமுறைகளை ஸ்மிருதி இரானி மேற்கொண்டார். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளிக்கு இடையே மசோதா நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது. இந்த மசோதா ஏற்கெனவே மக்களவையில் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

திருத்தப்பட்ட மசோதாவில், சிறார் நலம் தொடர்பான விவகாரங்களில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட சார் ஆட்சியர் ஆகியோரின் பங்களிப்பு அதிகரிக்கச் செய்யப்பட்டுள்ளது.

# ரூ. 23,000 கோடிக்கான துணை மானிய கோரிக்கை மசோதா

## மக்களவையில் நிறைவேற்றம்

**புது தில்லி, ஜூலை 28:** மக்களவையில் அமளிக்கு இடையே ரூ. 23,675 கோடிக்கான துணை மானிய கோரிக்கை மசோதா புதன்கிழமை நிறைவேறியது. இதில், சுகாதாரத் துறைக்கு கூடுதலாக ரூ. 17,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான மசோதாவை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த 20-ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்திருந்தார். 2021-22-ஆம் ஆண்டுக்கான மொத்த கூடுதல் செலவினம் ரூ. 1.87 லட்சம் கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருந்தாலும், அதில் ரூ. 23,674.81 கோடியை மட்டும் மத்திய அரசு நிகழாண்டு நிதியாக ஒதுக்கீடு செய்து மீதமுள்ள தொகையானது சேமிப்பு மற்றும் பிற வருவாய் மூலம் பெறப்படும் என்று குறிப்பிட்டிருந்தது.

மேலும், மாநிலங்களுக்கு ஜிஎஸ்டி இழப்பீடாக ரூ. 1.59 லட்சம் கோடி வழங்கப்படும். கரோனா மற்றும் சுகாதாரத் துறை செலவினங்களுக்காக ரூ.16,463 கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் துறைக்கு அவசர தொற்று ஆராய்ச்சிக்காக ரூ.526 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்துக்கு ரூ. 2,050 கோடி கோரப்பட்டுள்ளது. இதில், ரூ.1,872 கோடி ஏர் இந்தியா நிறுவனத்தின் வங்கிக் கடன் சார்ந்ததாகும். 2019-20-ஆண்டுக்கான சர்க்கரை ஆலைகளுக்கு நிதி உதவியாக வழங்க மத்திய நுகர்வோர் மற்றும் உணவு விநியோக அமைச்சகத்துக்கு ரூ.1,100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மசோதா மக்களவையில் அமளிக்கு இடையே எந்தவித விவாதமுமின்றி புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது.

# எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு யார் தலைமை வகித்தாலும் ஏற்கத் தயார்

**புது தில்லி, ஜூலை 28:** பாஜகவுக்கு எதிராக தேசிய அளவில் அமையும் எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு யார் தலைமை வகித்தாலும் ஏற்கத் தயாராகவே இருக்கிறேன் என்று மேற்கு வங்க முதல்வரும் திரிணமூல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

2024 மக்களவைத் தேர்தலில் பாஜகவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளைத் திரட்டி வலுவான கூட்டணி அமைக்கும் நோக்கத்துடன் மம்தா பானர்ஜி தில்லிக்கு ஒருவார கால பயணம் மேற்கொண்டுள்ளார். ஏற்கெனவே காங்கிரஸை சேர்ந்த மூத்த தலைவர்கள் கமல்நாத், ஆனந்த் சர்மா உள்ளிட்டோரை மம்தா செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினார்.

இந்நிலையில், தில்லியில் புதன்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:

அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒருங்கிணைக்கும் முயற்சியைத்தான் நான் மேற்கொண்டுள்ளேன். எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு தலைவராக வேண்டுமென்று விரும்பவில்லை. மேலும், அரசியலில் எது வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்பவே அனைத்து விஷயங்களும் தீர்மானிக்கப்படுகின்றன. எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு யார் தலைமை தாங்கினாலும் அதனை ஏற்கத் தயாராகவே உள்ளேன். அதில் எனக்கு எவ்வித பிரச்னையும் இல்லை.

இது தொடர்பாக அனைவரும் சேர்ந்து விவாதிக்கும்போது உரிய முடிவு எடுக்கப்படும். என்னைத்தான் தலைவராக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப் போவதில்லை என்றார்.

பெகாஸஸ் விவகாரம் தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த மம்தா பானர்ஜி, 'இந்த உளவு விவகாரத்தால் நாட்டில் அரசின் நிலை எந்த அளவுக்கு மோசமாக உள்ளது என்பது தெளிவாகிறது. நெருக்கடி நிலை காலகட்டத்தைவிட மோசமான சூழல் இப்போது நிலவி வருகிறது. மத்திய அரசு தொடர்ந்து பொறுப்பற்ற வகையில் செயல்பட்டு வருகிறது.

மம்தா பானர்ஜி



காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை புதன்கிழமை சந்தித்த மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி.

தங்களுக்கு வேண்டாதவர்கள், அரசியல்ரீதியாக எதிர்த்து நிற்பவர்கள் மீது அமலாக்கத் துறை, வருமானவரித் துறை உள்ளிட்டவற்றை அரசு ஏவி விடுகிறது. மத்திய அரசு தொடர்ந்து பொறுப்பற்ற வகையில் செயல்படுகிறது. ஜனநாயகத்தில் அரசு பொறுப்புணர்வுடன் கடமையாற்ற வேண்டியது முதன்மையானது' என்று கூறினார்.

மேற்கு வங்க முதல்வராக மூன்றாவது முறையாக அண்மையில் மம்தா பானர்ஜி பதவியேற்றார். அதன்பிறகு அவர் மேற்கொண்டுள்ள முதல் தில்லி பயணம் இதுவாகும். மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜகவின் கடுமையான சவாலை எதிர்கொண்டு வெற்றி பெற்றுள்ள அவர், தேசிய அளவில் பாஜகவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் தில்லிக்கு வந்துள்ளதால் அவரது இந்தப் பயணம் கூடுதல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## சோனியா, கேஜரிவாலுடன் சந்திப்பு

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தில்லி முதல்வர் கேஜரிவால் ஆகியோருடன் மம்தா பானர்ஜி தனித்தனியாக சந்தித்துப் பேசினார்.

தில்லியில் உள்ள சோனியாவின் இல்லத்துக்குச் சென்ற மம்தா, சுமார் 45 நிமிஷங்கள் ஆலோசித்தார். அப்போது காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தியும் உடனிருந்தார்.

பிறகு செய்தியாளர்களிடம் பேசிய மம்தா, 'சிறந்த, ஆக்கபூர்மான சந்திப்பாக அமைந்தது. நாட்டில் உள்ள அரசியல் சூழல், எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைய வேண்டிய அவசியம் உள்ளிட்டவை குறித்து சோனியா, ராகுல் காந்தியிடம் பேசினேன். அவர்களிடம் இருந்து நல்ல முடிவு விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். பெகாஸஸ் உளவு விவகாரம் தொடர்பாகவும் அவர்களிடம் பேசினேன்.

பாஜகவை வீழ்த்த எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து செயல்பட வேண்டும்' என்றார்.

இதன் பின்பு தில்லி முதல்வர் கேஜரிவாலையும் மம்தா சந்தித்துப் பேசினார். பேரவைத் தேர்தலில் மம்தா பானர்ஜி வெற்றி பெற்ற பிறகு நடைபெற்ற இந்த முதல் சந்திப்பில் பல்வேறு அரசியல் விவகாரங்கள் விவாதிக்கப்பட்டன என்று கேஜரிவால் தனது சுட்டுரைப் பதிவில் தெரிவித்துள்ளார்.

# மக்களவையில் எதிர்க்கட்சிகள் கடும் அமளி: காகிதங்களைக் கிழித்து வீசியதால் பரபரப்பு

**புது தில்லி, ஜூலை 28:** பெகாஸஸ் உளவு விவகாரம் மற்றும் விவசாயிகளின் போராட்டத்தை முன் வைத்து மக்களவையில் எதிர்க் கட்சி எம்.பி.க்கள் புதன்கிழமை கடும் அமளியில் ஈடுபட்டனர். அட்டைகள் மற்றும் காகிதங்களைக் கிழித்து அவைத் தலைவரின் இருக்கை மற்றும் ஆளும்கட்சி வரிசை மீது வீசி கோஷங்களை எழுப்பினர்.

இதன் காரணமாக மக்களவை நடவடிக்கைகள் பலமுறை ஒத்தி வைக்கப்பட்டன.

எதிர்க்கட்சிகளின் இந்தச் செயலைக் கண்டித்துள்ள பாஜக,'நாடாளுமன்றத்தின் மாண்பை எதிர்க் கட்சிகள் சீர்குலைத்துவிட்டன' என்று குற்றம்சாட்டியுள்ளது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கடந்த 19-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. பெகாஸஸ் உளவு விவகாரம், விவசாயிகளின் தொடர் போராட்டம் உள்ளிட்ட பிரச்னைகளை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் எழுப்பி வருகின்றன. இதன் காரணமாக, கடந்த வாரம் முழுவதும் நாடாளுமன்றம் முடங்கியது.



மக்களவையில் புதன்கிழமை அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள்.

பெகாஸஸ் உளவு விவகாரத்தில் மத்திய அரசு பதிலளிக்க வேண்டும், வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளன.

மக்களவை புதன்கிழமை காலை 11 மணிக்கு வழக்கம்போல் கூடியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்தப் பிரச்னைகளை முன் வைத்து மீண்டும் அமளியை தொடங்கினர். காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் உள்பட எதிர்க் கட்சி உறுப்பினர்களும் கோஷங்களை எழுப்பியபடி அமளியில் ஈடுபட்டனர். வாசகங்கள் எழுதப் பட்ட அட்டைகளையும் அவர்கள் கையில் ஏந்தியிருந்தனர். அதனைத் தொடர்ந்து, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அவை நடவடிக்கைகளை பகல் 12.30 மணி வரை ஒத்தி வைத்தார்.

பின்னர், அவை மீண்டும் கூடியபோதும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். அமளிக்கிடையே கேள்வி நேரத்தை மக்களவைத் தலைவர் முழுமையாக நடத்தி முடித்தார். மழைக்கால கூட்டத் தொடர் தொடங்கியதிலிருந்து அவையில் கேள்வி நேரம் புதன்கிழமை மட்டுமே முழுமையாக நடந்து முடிந்தது.

கேள்வி நேரம் முடிந்ததும் ஓம் பிர்லா அவையிலிருந்து புறப்பட்டுச் சென்றார். பின்னர், உறுப்பினர் ராஜேந்திர அகர்வால் அவையை வழிநடத்தினார்.

அப்போது, காங்கிரஸ் உறுப்பினர்கள் குர்ஜீத் அவுஜ்லா, டி.என்.பிரதாபன், ஹிபி ஈடென் உள்பட மற்றும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவை நிகழ்ச்சிநிரல் காகிதங்களையும், அட்டைகளையும் கிழித்து வீசி அமளியில் ஈடுபட்டனர். அதன் காரணமாக அவை நடவடிக்கைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டன. அவர்கள் வீசிய காகிதங்கள் சில அவைத் தலைவர் அமரும் மேடைக்கு அருகே அமைந்திருக்கும் பத்திரிகையாளர் மாடத்தில் போய் விழுந்தன. கடும் அமளி காரணமாக அவை நடவடிக்கைகளை மதியம் 2 மணி வரை அகர்வால் ஒத்திவைத்தார்.

அவை மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு கூடியது. அப்போதும், எதிர்க்கட்சியினரின் அமளி தொடர்ந்ததால், அவை நடவடிக்கைகள் மூன்றாவது முறையாக 2.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் அமளி தொடர்ந்ததால் அவை ஒத்திவைக்கப்படுவதும் தொடர்ந்தது.

இறுதியாக மாலை 4 மணிக்கு அவை கூடியது. அப்போதும் அமளி நீடித்ததால் மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

**பாஜக கண்டனம்:** மக்களவையில் எதிர்க்கட்சிகள் புதன்கிழமை கடும் அமளியில் ஈடுபட்டதற்கு பாஜக கண்டனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர் கூறுகையில், 'போராட்டம் நடத்துவதற்கு என சில வழிமுறைகள் உள்ளன.

ஆனால், எதிர்க்கட்சிகள் இன்றைக்கு நாடாளுமன்றத்தின் மாண்பை சீர்குலைத்துவிட்டன. உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தை வெட்கப்பட வைக்கும் வகையிலான அவர்களின் செயல்பாடு கண்டனத்துக்குரியது. அவர்கள் முன்வைக்கும் பிரச்னைகளை அவையில் விவாதிக்கத் தயங்குவது ஏன் என்ற விளக்கத்தை எதிர்க்கட்சியினர் தெரிவிக்க வேண்டும்' என்றார் அவர்.

## இந்தியாவில் கரோனா பாதிப்பு

புதன்கிழமை காலை 8 மணி நிலவரம்

24 மணி நேரத்தில் புதிய பாதிப்பு
**43,654**

மொத்த பாதிப்பு எண்ணிக்கை
**3,14,84,605**

மொத்த உயிரிழப்பு
**4,22,022**

கடந்த 24 மணி நேரத்தில் பதிவு செய்யப்பட்ட உயிரிழப்பு
**640**

அதிக உயிரிழப்புகள்

| | |
|---|---|
| மகாராஷ்டிரம் | 254 |
| கேரளம் | 156 |
| ஒடிஸா | 60 |

தேசிய அளவில் இறப்பு விகிதம்
**1.34%**

இதுவரை குணமடைந்தோர்
**3,06,63,147**

சிகிச்சையில் இருப்போர்
**3,99,436**



ஜூலை 27-ஆம் தேதி வரை கரோனா பரிசோதனைகள்
**46,09,00,978**

## பெகாஸஸ் விவகாரம்

## பாஜக உறுப்பினர்கள் எதிர்ப்பால் அதிகாரிகளிடம் விசாரணை ஒத்திவைப்பு

**புது தில்லி, ஜூலை 28:** பெகாஸஸ் உளவு விவகாரத்தில் பாஜக உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் மத்திய அரசு அதிகாரிகளிடம் விசாரணை நடத்த கூட்டப்பட்ட நாடாளுமன்ற நிலைக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட முக்கிய நபர்களின் தொலைபேசிகள் உளவு பார்க்கப்பட்டது குறித்து மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் உள்துறை அமைச்சக அதிகாரிகளிடம் கேள்வி கேட்கப்படும் என்று தகவல் தொழில்நுட்பத்துக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவின் தலைவரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான சசி தரூர் செவ்வாய்க்கிழமை கூறியிருந்தார்.

இந்நிலையில், குடிமக்களின் தரவுகள் பாதுகாப்பு மசோதா குறித்து விவாதிக்க சசி தரூர் தலைமையிலான நாடாளுமன்ற நிலைக் குழு புதன்கிழமை கூடியது. அதில் பாஜக உறுப்பினர்கள் பங்கேற்ற பின்பும், வருகைப் பதிவேட்டில் கையெழுத்திடவில்லை. இதனால் போதிய உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் அந்தக் கூட்டம் தொடர்ந்து நடைபெறாமல் ஒத்திவைக்கப்பட்டது.

'பெகாஸஸ் உளவு விவகாரத்தை விவாதிக்க நாடாளுமன்றத்தை சுமுகமாக செயல்பட காங்கிரஸ் கட்சி அனுமதி அளிக்காததால், நிலைக் குழுக் கூட்டத்திலும் இந்த விவகாரத்தை விவாதிக்க எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாக' பாஜக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மொத்தம் 32 உறுப்பினர்களைக் கொண்ட தகவல் தொழில்நுட்பத்துக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவில் பாஜக உறுப்பினர்கள் அதிகமாக உள்ளனர். குடிமக்களின் தரவுகள் பாதுகாப்பு மசோதா குறித்து விவாதிக்க இந்தக் கூட்டம் புதன்கிழமை கூட்டப்பட்டிருந்த போதிலும், மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் உள்துறை அமைச்சக அதிகாரிகள் ஆஜராக சம்மன் அளிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து குழு உறுப்பினரும் காங்கிரஸ் எம்பியுமான கார்த்தி சிதம்பரம் சுட்டுரையில், 'பாஜக உறுப்பினர்கள் வருகை தந்தும் கையெழுத்திடாததால், மத்திய அரசு அதிகாரிகளால் குழு முன் ஆஜராக முடியவில்லை. இதன்மூலம் பெகாஸஸ் விவகாரத்தை அரசு விவாதிக்க விரும்பவில்லை என்பது தெளிவாகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

## மத்திய அரசு மீது டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஜூலை 28:** 'பெகாஸஸ் குறித்து மத்திய அரசு விவாதத்துக்குத் தயாராக இல்லை. மழைக்கால கூட்டத்தொடரை வீணடிப்பதே மத்திய அரசின் எண்ணமாக இருக்கிறது' என திமுக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கூறினார்.



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக தொடர்ச்சியாக இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், எதற்காக அவைகள் ஒத்திவைக்கப்படுகின்றன என்பது குறித்து காங்கிரஸ் கட்சித் தலைமையில் எதிர்க்கட்சி தலைவர்கள் செய்தியாளர்களிடம் புதன்கிழமை விளக்கினர்.

இதில் தமிழகம் தொடர்புடைய கட்சிகளின் சார்பில் திமுக மக்களவைக் குழு தலைவர் டி.ஆர். பாலுவும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவனும் பேசினர். அவர்கள் கூறியதாவது:

**டி.ஆர்.பாலு:** பெகாஸஸ் விவகாரம் தொடர்பாக விவாதிக்க பலமுறை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நோட்டீஸ் கொடுத்தனர். ஆனால், அதை மத்திய அரசு ஏற்கவில்லை. நோட்டீஸையே ஏற்காத அரசு, விவாதத்துக்கு தயார் என உதட்டளவில் வெளியே கூறிக்கொண்டு இருக்கிறது. மத்திய அரசின் எண்ணம் மழைக்கால கூட்டத்தொடரை இடையிலே முடித்து வீணடித்துவிடவேண்டும் என்கிற முயற்சியில் உள்ளது. அதனால்தான் அவையை ஒத்திவைத்துக் கொண்டே இருக்கிறார்கள் என்றார்.

**தொல்.திருமாவளவன்:** அவையை ஒத்திவைப்பதை மட்டுமே மத்திய அரசு குறிக்கோளாக வைத்துள்ளது. அவையில் பெகாஸஸ் விவகாரம் குறித்து விவாதம் நடத்தி, உச்சநீதிமன்றத்தின் மேற்பார்வையில் நீதி விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும். மேலும், ஒட்டுமொத்த தகுதிகளையும் இழந்து நிற்கும் மோடி அரசு உடனடியாக பதவி விலக வேண்டும் என்றார்.

# ஜம்மு-காஷ்மீருக்கு உரிய நேரத்தில் மாநில அந்தஸ்து

### மாநிலங்களவையில் அமைச்சர் தகவல்

**புது தில்லி, ஜூலை 28:** ஜம்மு-காஷ்மீருக்கு உரிய நேரத்தில் மாநில அந்தஸ்து அளிக்கப்படும் என்று மாநிலங்களவையில் உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் எழுத்துமூலம் அளித்த பதிலில் தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு கடந்த 2019-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரத்து செய்தது. அந்த மாநிலத்தையும் ஜம்மு-காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக மத்திய அரசு பிரித்தது. இதற்கு, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும், ஜம்மு-காஷ்மீரில் உள்ள பிராந்திய கட்சிகளும் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், மாநிலங்களவையில் புதன்கிழமை இதுதொடர்பான கேள்விக்கு எழுத்து மூலம் அமைச்சர் நித்யானந்த் ராய் அளித்த பதிலில்,'ஜம்மு-காஷ்மீரில் அமைதி திரும்பி இயல்பான சூழ்நிலை உருவாக வேண்டும். அதன்பிறகு உரிய நேரத்தில் மாநில அந்தஸ்து மீண்டும் அளிக்கப்படும். தேசிய நலன் மற்றும் ஜம்மு-காஷ்மீரின் நலன் கருதிதான் அந்த மாநிலத்தை இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கும் முடிவை மத்திய அரசு மேற்கொண்டது. அதன்பிறகு அங்கு விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டுவிட்டன. செல்லிடப்பேசி சேவை உள்பட பல்வேறு தகவல்தொடர்பு சேவைகள் ஏற்கெனவே மீண்டும் தொடங்கப்பட்டுவிட்டன.

அங்குள்ள சூழ்நிலைகளை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதுடன், குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வுகளையும் மேற்கொள்கிறது' என்று கூறியுள்ளார்.

காஷ்மீர் பண்டிட்டுகள் தொடர்பான மற்றொரு கேள்விக்கு எழுத்து மூலம் பதிலளித்த நித்யானந்த் ராய், 'காஷ்மீர் பண்டிட்டுகள் இப்போது பாதுகாப்பாக உணர்கிறார்கள். அந்த சமூகத்தைச் சேர்ந்த 3,841 இளைஞர்கள் அண்மையில் மீண்டும் காஷ்மீர் திரும்பியுள்ளனர். பிரதமர் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. மேலும், 26,684 பண்டிட் இளைஞர்கள் தங்கள் சொந்த ஊரான காஷ்மீர் திரும்ப விருப்பம் தெரிவித்து, அங்குள்ள 1997 பணிவாய்ப்புகளுக்காக விண்ணப்பித்துள்ளனர். காஷ்மீரில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் தாய் மண்ணுக்குத் திரும்ப அரசு பல்வேறு வசதிகளை ஏற்படுத்தித் தருகிறது' என்று கூறியுள்ளார்.

# வைப்புத்தொகைக்கு ரூ.5 லட்சம் காப்பீடு: சட்டத் திருத்தத்துக்கு ஒப்புதல்

**புது தில்லி, ஜூலை 28:** வங்கிகளில் பொதுமக்களின் வைப்புத்தொகைக்கு ரூ.5 லட்சம் வரை காப்பீடு அளிக்கும் வகையில் வைப்புத் தொகை காப்பீடு மற்றும் கடனுறுதிக் கழக (டிஐசிஜிசி) சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் புதன்கிழமை அளித்தது.

கடந்த ஆண்டு பஞ்சாப்-மகாராஷ்டிர கூட்டுறவு வங்கி நிதி நெருக்கடியில் தவித்தபோது, அதில் வைப்புத்தொகை வைத்திருந்தவர்கள் தங்கள் பணத்தை எடுக்க முடியாமல் திணறினார்கள். வைப்புத்தொகை காப்பீடு மற்றும் கடனுறுதிக் கழக சட்டத்தின்படி, அவர்கள் அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வரை மட்டுமே காப்பீடு பெற முடியும் என்ற நிலை இருந்தது.

அதைத் தொடர்ந்து, வைப்புத் தொகைகளுக்கான காப்பீட்டுத் தொகை ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும் என்று மத்திய பட்ஜெட்டில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்திருந்தார். அந்தத் தொகையை, விண்ணப்பித்த 90 நாள்களில் ரிசர்வ் வங்கியின் கீழ் செயல்படும் வைப்புத்தொகை காப்பீடு மற்றும் கடனுறுதிக் கழகம் வழங்கும்.

https://t.me/Tamil_epaper2

இந்நிலையில்,தில்லியில்பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. அதில், வங்கிகளில் வைப்புத்தொகைக்கான காப்பீட்டுத் தொகையை ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தும் வகையில், 1961-ஆம் ஆண்டின் வைப்புத்தொகை காப்பீடு மற்றும் கடனுறுதிக் கழக சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறுகையில், 'இந்த சட்டத்திருத்தம் தொடர்பான மசோதா, நடப்பு கூட்டத் தொடரிலேயே அறிமுகம் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது' என்றார்.

இந்த மசோதா சட்டமானால், நிதி நெருக்கடியில் தவிக்கும் வங்கிகளில் வைப்புத்தொகை வைத்துள்ள ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் பயனடைவார்கள் அடைவார்கள் என்று அவர் கூறினார்.



மத்திய அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை தெரிவித்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

**எல்எல்பி சட்டத்தில் திருத்தம்:** பல்வேறு நிறுவனங்கள் தொழில் செய்வதை எளிமையாக்கும் வகையில், நிறுவனங்களுக்கான பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கூட்டாண்மைச் சட்டத்தில் (எல்எல்பி) உள்ள அபராதம் விதிக்கப்படக் கூடிய பிரிவுகளை நீக்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, அந்தச் சட்டத்தில் உள்ள அபராதம் விதிக்கப்படக் கூடிய பிரிவுகள் 22-ஆகக் குறைக்கப்பட்டுள்ளன. இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுவதால், நாடு முழுவதும் 2.30 லட்சம் நிறுவனங்கள் பயன்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இந்தச் சட்டத்தில் முதல் முறையாக இந்த மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் அளித்தது.

இதுகுறித்து மத்திய நிதி மற்றும் நிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது:

இந்தியாவில் தொழில் செய்வதை எளிதாக்கும் வகையில் நிறுவனங்கள் சட்டம் 2013-இல் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதுபோல புதிய ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை சட்டம் (எல்எல்பி) முக்கியமானதாகும்.

இந்த எல்எல்பி சட்டத்தில் இப்போது 24 தண்டனை குற்ற நடைமுறைகள் இடம்பெற்றுள்ளன. அதில் 21 விதிகள் கூட்டுக் குற்றங்கள் தொடர்பானது. 3 பிரிவுகள் கூட்டுக் குற்றங்கள் அல்லாதவை.

இப்போது பரிந்துரைக்கப்பட்டிருக்கும் திருத்தங்களின்படி, எல்எல்பி சட்டத்தில் இடம்பெற்றிருக்கும் தண்டனை நடைமுறைகள் 22-ஆக குறைக்கப்படும் என்பதோடு, கூட்டுக் குற்றப் பிரிவுகள் 7-ஆக குறைந்துவிடும். கூட்டுக் குற்றம் அல்லாதவை 3 பிரிவுகள் என்ற நிலையில் இருக்கும். 12 குற்றங்கள் நிறுவனங்களே தீர்வு காணும் வகையிலான (ஐஏஎம்) பிரிவுகளாக குறைக்கப்பட உள்ளன.

இதன்மூலம், எல்எல்பி சட்டத்தில் 12 குற்றங்களுக்கான தண்டனை குறைக்கப்படுவதோடு, 3 பிரிவுகள் முழுமையாக நீக்கப்பட உள்ளன. இது, பெரு நிறுவனங்களுடனான வரையறுக்கப்பட்ட கூட்டு நடைமுறைக்கு முன்னுரிமை அளிக்கும் புதிய ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு சிறந்த வாய்ப்பாக அமையும் என்றார்.

# பிரான்ஸிடம் இருந்து இதுவரை 26 ரஃபேல் விமானங்கள் பெறப்பட்டன

### மக்களவையில் தகவல்

**புது தில்லி, ஜூலை 28:** பிரான்ஸிடம் இருந்து இதுவரை 26 ரஃபேல் போர் விமானங்கள் பெறப்பட்டுள்ளன என்று மக்களவையில் பாதுகாப்புத் துறை இணையமைச்சர் அஜய் பட் புதன்கிழமை எழுத்துமூலம் அளித்த பதிலில் தெரிவித்தார்.

பிரான்ஸின் டஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடமிருந்து 36 ரஃபேல் போர் விமானங்களை ரூ.59,000 கோடி செலவில் வாங்குவதற்கு மத்திய அரசு கடந்த 2016-ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதில் முதல் ரஃபேல் போர் விமானத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த 2019-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிரான்ஸுக்கு பயணம் மேற்கொண்டபோது பெற்றுக் கொண்டார்.

அவற்றில் முதல் தொகுதியாக 5 போர் விமானங்கள் கடந்த ஆண்டு ஜூலை மாதம் இந்தியா வந்தடைந்தன. அவை 'கோல்டன் ஏரோஸ்' (தங்க அம்புகள்) என அழைக்கப்படும் இந்திய விமானப் படையின் 17-ஆவது படைப் பிரிவில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அதிகாரபூர்வமாக இணைக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து, பல்வேறு கட்டங்களாக ரஃபேல் விமானங்களை இந்தியாவுக்கு பிரான்ஸ் அனுப்பி வைத்து வருகிறது.

இந்நிலையில், இதுதொடர்பான கேள்விக்கு மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் அமைச்சர் அஜய் பட் கூறியதாவது:

மொத்தம் 36 விமானங்கள் வாங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இதுவரை 26 விமானங்கள் இந்தியாவுக்கு வந்து சேர்ந்துள்ளன. இதற்கு முன்பு ரஷியாவிடம் இருந்து சுகோய் ரக போர் விமானங்கள் 23 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வாங்கியதே மிகப் பெரிய விமானக் கொள்முதலாக இருந்தது.

இதன்பிறகு ரஃபேல் விமானங்கள்தான் நமது மிகப்பெரிய விமானக் கொள்முதலாகும் என்று தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுக்கு சென்றால் 3 ஆண்டுகளுக்கு பயணத் தடை

### சவூதி அரேபியா அறிவிப்பு

**துபை, ஜூலை 28:** கரோனா அபாயப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்லும் தங்களது குடிமக்களுக்கு 3 ஆண்டுகள் பயணத் தடை விதிக்கப்படும் என்று சவூதி அரேபியா அறிவித்துள்ளது.

இதுகுறித்து அரசுக்குச் சொந்தமான சவூதி பிரஸ் ஏஜென்சி (எஸ்பிஏ) செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

கரோனா அபாயப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள நாடுகளுக்குப் பயணம் செல்வது, நோய்த் தடுப்பு கட்டுப்பாட்டு விதிமுறைகளையும் சவூதி அரசின் வழிகாட்டுதல்களையும் மீறும் குற்றமாகும். எனவே, அண்மையில் கரோனா பரவல் அதிகரித்ததால் அபாயப் பகுதிகள் பட்டியலில் சேர்க்கப்பட்ட நாடுகளுக்கு சவூதி குடிமக்கள் யாரும் செல்லக் கூடாது என்று உள்துறை அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்தப் பட்டியலில் இந்தியா, துருக்கி, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், ஆப்கானிஸ்தான், லிபியா, சிரியா, லெபனான், யேமன், ஆர்மீனியா, எத்தியோப்பியா, சோமாலியா, காங்கோ, வெனிசூலா, பெலாரஸ், வியத்நாம் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

அரசின் வழிகாட்டுதல்களை மீறி, தடை செய்யப்பட்ட நாடுகளுக்கு யாரேனும் சென்றால், அவர்களுக்கு மிகப் பெரிய தொகை அபராதம் விதிக்கப்படும். அத்துடன், 3 ஆண்டுகளுக்கு அவர்கள் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது.

கரோனா அபாயப் பட்டியலில் இல்லாத நாடுகளுக்கு தங்களது நாட்டு மக்கள் சென்றாலும், அங்கு நோய்த்தொற்று அதிகம் காணப்படும் பகுதிகளை அவர்கள் தவிர்க்க வேண்டும் என்று அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது என்று எஸ்பிஏ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதன்கிழமை நிலவரப்படி, சவூதி அரேபியாவில் 5,22,108 பேருக்கு கரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவர்களில் 8,200 பேர் அந்த நோய்க்கு பலியாகியுள்ளனர்; 11,380 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# அஸ்ஸாம்-மிஸோரம் எல்லையில் சிஏபிஎஃப் படையை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த முடிவு

**புதுதில்லி, ஜூலை 28:** அஸ்ஸாம்-மிஸோரம் எல்லையின் கலவரம் ஏற்பட்ட பகுதியில் மத்திய ஆயுதக் காவல் படையினரை (சிஏபிஎஃப்) பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த இரு மாநிலங்களும் ஒப்புக் கொண்டுள்ளன.

அஸ்ஸாமின் கச்சார், கரீம்கஞ்ச், ஹைலாகண்டி மாவட்டங்கள் மிஸோரமின் ஐசால், கொலாசிப், மமித் மாவட்டங்களுடன் 164 கி.மீ. எல்லையை பகிர்ந்துள்ளன.

இந்நிலையில் கச்சார் மாவட்ட எல்லையில் திங்கள்கிழமை ஏற்பட்ட கலவரத்தில் அஸ்ஸாம் போலீஸார் 5 பேர், பொதுமக்களில் ஒருவர் என மொத்தம் 6 பேர் உயிரிழந்தனர். 50-க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இந்தக் கலவரம் காரணமாக அங்கு பதற்றம் ஏற்பட்டது. அதனை முடிவுக்குக் கொண்டு வரும் விதமாக இரு மாநிலங்களின் தலைமைச் செயலர்கள், டிஜிபிக்களின் கூட்டத்துக்கு மத்திய உள்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்தது. அந்தக் கூட்டத்தில் கலவரம் ஏற்பட்ட எல்லைப் பகுதியில் மத்திய ஆயுதக் காவல் படையினரை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த தலைமைச் செயலர்களும், டிஜிபிக்களும் ஒப்புக் கொண்டனர் என்று மத்திய உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் புதன்கிழமை தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து மிஸோரம் தலைமைச் செயலர் லால்நுன்மாவியா சுவாங்கோ செய்தியாளர்களிடம் கூறுகையில், "இரு மாநிலங்களுக்கு இடையிலான எல்லையில் தற்போது அமைதி நிலவுகிறது. கலவரம் ஏற்பட்ட பகுதியில் குவிக்கப்பட்ட காவல்துறையினர் திரும்பப் பெறப்பட்டு வருகின்றனர்" என்று தெரிவித்தார்.

**பிரிட்டிஷ் ஆட்சியில் பிரச்னையின் தோற்றுவாய்:** பிரிட்டனின் காலனிய நாடாக இந்தியா இருந்தபோது கச்சார் சமவெளியில் இருந்து லுஷாய் மலைத்தொடரை வேறுபடுத்தி கடந்த 1875-ஆம் ஆண்டு பிரிட்டிஷார் அறிவிக்கை வெளியிட்டனர். கடந்த 1933-ஆம் ஆண்டு லுஷாய் மலைத்தொடர், மணிப்பூர் இடையிலான எல்லையை வரையறுத்து அவர்கள் மற்றொரு அறிவிக்கையை வெளியிட்டனர்.

இந்நிலையில் அஸ்ஸாமுக்குட்பட்ட பகுதியாக இருந்த மிஸோரம் கடந்த 1972-ஆம் ஆண்டில் தனி யூனியன் பிரதேசமானது. பின்னர் 1987-ஆம் ஆண்டில் மிஸோரம் மாநில அந்தஸ்து பெற்றது. இதையடுத்து இரு மாநிலங்களுக்கு இடையே எல்லைப் பிரச்னை ஏற்பட்டது.

1875-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி இரு மாநிலங்களுக்கு இடையிலான எல்லை வரையறுக்கப்பட வேண்டும் என மிஸோரமும், 1933-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி எல்லையை வரையறுக்க வேண்டும் என அஸ்ஸாமும் வலியுறுத்தி வருகின்றன.

# உலகப் பாரம்பரிய இடமாக குஜராத்தின் தோலாவிராவை அறிவித்தது யுனெஸ்கோ



**புது தில்லி, ஜூலை 28:** இந்தியாவில் உள்ள ஹரப்பா நகரான தோலாவிராவை உலகப் பாரம்பரிய இடமாக யுனெஸ்கோ அறிவித்ததற்கு பிரதமர் நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இது கண்டிப்பாக காண வேண்டிய இடம், குறிப்பாக வரலாறு, கலாசாரம் மற்றும் தொல்லியலில் ஆர்வமுள்ளவர்கள் காண வேண்டிய இடம் என அவர் கூறியுள்ளார்.

இந்த தொடர்பான யுனெஸ்கோவின் அறிவிப்பை இணைத்து பிரதமர் சுட்டுரையில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: 'இந்தச் செய்தியால் முற்றிலும் மகிழ்ச்சியடைந்தேன். தோலாவிரா முக்கியமான நகர்ப்புற மையமாக இருந்தது. நமது பழங்காலத்துடன் மிக முக்கிய தொடர்புகளைக் கொண்ட இடங்களில் ஒன்றாக உள்ளது.

மாணவப் பருவத்தில், நான் முதன்முதலாக தோலாவிரா சென்றேன். அந்த இடம் என் மனதைக் கவர்ந்தது. குஜராத் முதல்வராக இருந்த போது, தோலாவிராவை பாரம்பரிய இடமாகப் பாதுகாப்பது மற்றும் புனரமைப்பது தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் வாய்ப்பை பெற்றேன்' என்று கூறியுள்ளார்.

# ஹிமாசல், ஜம்மு-காஷ்மீரில் கனமழை: 16 பேர் பலி

**சிம்லா/ ஜம்மு, ஜூலை 28:** ஹிமாசல பிரதேசம், ஜம்மு- காஷ்மீரில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி மொத்தம் 16 பேர் பலியாகினர். பலர் காணாமல் போனதாக அதிகாரி ஒருவர் புதன்கிழமை தெரிவித்தார்.

ஹிமாசல பிரதேச பேரிடர் மேலாண்மை இயக்குநர் சுதேஷ் குமார் மொகதா கூறியதாவது: உதய்பூரில், டோசிங் நுல்லா பகுதியில் ஏற்பட்ட பலத்த மழை வெள்ளத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். இதே போல, சம்பா மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் சிக்கி 2 இரண்டு பேர் உயிரிழந்தனர். குலு மாவட்டத்தில், நீரியல் திட்ட அதிகாரி, தில்லி சுற்றுலாப் பயணி உள்பட 4 பேரைக் காணவில்லை.

உதய்பூர், லஹால்-ஸ்பிட்டி பகுதியில் செவ்வாய்க்கிழமை பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் 12 தொழிலாளர்கள் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்களில் 7 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. 2 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். 3 பேரைக் காணவில்லை.

உயிரிழந்தவர்களில் 4 பேர் ஹிமாசலத்தையும், ஒருவர் ஜம்மு-காஷ்மீரையும் சேர்ந்தவர்கள். இருவரின் உடல்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்றார்.

அப்பகுதியில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவில் சிக்கிய தொழிலாளர்களை மீட்க தேசிய பேரிடர் மீட்புப் படையின் (என்டிஆர்எஃப்) உதவி கோரப்பட்டுள்ளதாக லஹால்-ஸ்பிட்டி துணை ஆணையர் நீரஜ்குமார் தெரிவித்தார்.



ஹிமாசல பிரதேச மாநிலம், சிம்லாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி சேதமடைந்த கார்.

சம்பா மாவட்டத்தில் வெள்ள நீரில் ஒருவர் அடித்துச் செல்லப்பட்டார். மேலும் அங்குள்ள மலையிலிருந்து தவறி விழுந்து சுனில்குமார் என்பவர் உயிரிழந்தார். லஹால்-ஸ்பிட்டி பகுதியில், ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. நிலச்சரிவு காரணமாக சுமார் 60 வாகனங்கள் நடுவழியில் சிக்கித் தவிக்கின்றன.

மாநிலத்தில் நீடிக்கும் மழையை யடுத்து சிம்லா வானிலை ஆய்வு மையம், மாநிலம் முழுவதும் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பாகா ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்குஏற்பட்டதால் டார்ச்சாகிராமத்தில் கரையோரப் பகுதியில் வசிக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டு, முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

**ஜம்மு- காஷ்மீரில் கனமழை:** ஜம்மு-காஷ்மீரின், கிஸ்துவார் மாவட்டத்தில் புதன்கிழமை அதிகாலை இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்ததில் 7 பேர் உயிரிழந்தனர்; 17 பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில், மழை நிலவரம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஜம்மு-காஷ்மீரின் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, காவல் துறைத் தலைவர் தில்பக் சிங் ஆகியோரைத் தொடர்புகொண்டு கேட்டறிந்தார். கனமழைக்கு பலியானவர்களில் 7 பேர் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், 17 பேர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும், காணாமல்போன 14 பேரை தீவிரமாகத் தேடி வருவதாகவும் காவல் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் வானிலை ஆய்வு மைய செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ஜம்மு-காஷ்மீரில் வரும் ஜூலை 30 வரையிலும் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சில இடங்களில் கனமழை முதல் அதிகனமழையாகபெய்யவாய்ப்புள்ளது. இதன்காரணமாக தாழ்வான பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டு மண் சரிவு, நிலச்சரிவுக்கு வாய்ப்புள்ளது. இடைவிடாத தொடர் மழை காரணமாக அனைத்து நதிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் என எதிர்பார்க்கப்படுவதால் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். மலைப் பாங்கான, நிலச்சரிவு மற்றும் மண் சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளுக்கு மக்கள் செல்வதை தவிர்க்க வேண்டும் என்றார்.

# சீன எல்லையில் ரஃபேல் போர் விமானங்கள்!

**புது தில்லி, ஜூலை 28:** சீனாவுடனான கிழக்கு எல்லையில் ரஃபேல் போர் விமானங்களை இந்தியா நிறுத்தியுள்ளது.

இந்தியா-சீனா இடையிலான எல்லை பிரச்னை பலசுற்று பேச்சுவார்த்தைக்குப் பிறகும் நீடித்து வருகிறது. இந்நிலையில், 8 ரஃபேல் போர் விமானங்களை சீனாவுடனான கிழக்கு எல்லைக்கு இந்திய விமானப் படை அனுப்பியுள்ளது. இந்த விமானங்களை விமானப் படையில் இணைக்கும் நிகழ்ச்சி மேற்கு வங்கத்தில் உள்ள ஹாசிமாரா விமானப் படைத் தளத்தில் புதன்கிழமை நடைபெற்றது. சிக்கிம்-பூடான்- திபெத் எல்லை சந்திப்பு அருகே இப்பகுதி உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சியில் விமானப் படை தலைமை தளபதி ராகேஷ் குமார் சிங் பதெளரியா தலைமை வகித்தார்.

இந்தியா-சீனா இடையே அடுத்தகட்ட உயர் ராணுவ அதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தை வரும் சனிக்கிழமை நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் ரஃபேல் விமானங்கள் சீன எல்லைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

# புதிய தேசிய கல்விக் கொள்கை ஓராண்டு நிறைவு: பிரதமர் இன்று உரை

**புது தில்லி, ஜூலை 28:** தேசிய கல்விக் கொள்கை 2020-இன் கீழ் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு ஓராண்டு நிறைவு பெறுவதைக் குறிக்கும் வகையில் நாடு முழுவதும் உள்ள கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோருடன் பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி வாயிலாக வியாழக்கிழமை (ஜூலை 29) உரையாற்றுகிறார். அப்போது கல்வி துறையில் பல்வேறு முன்முயற்சிகளையும் அவர் அறிமுகப்படுத்த இருக்கிறார்.



உயர் கல்வியில் மாணவர் சேர்வதற்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்குவது, முதலாமாண்டு பொறியியல் திட்டங்கள் பிராந்திய மொழிகளில் வழங்கப்படுவது, உயர் கல்வியை சர்வதேசமயமாக்குவதற்கான வழிகாட்டுதல்கள் போன்றவற்றுக்கு வழிவகை செய்யும் 'அகாடமிக் கிரெடிட்' வங்கியை பிரதமர் தொடங்கிவைக்க இருக்கிறார்.

# 'கரோனா தடுப்பூசி மீதான தயக்கத்தைப் போக்க உதவவும்'

**புதுதில்லி, ஜூலை 28:** கரோனா தடுப்பூசி மீதான தயக்கத்தைப் போக்க அரசுடன் இணைந்து பணிபுரியுமாறு சமூக மற்றும் மத அமைப்புகளின் தலைவர்களிடம் பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்தார்.

இதுதொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சமூக மற்றும் மத அமைப்புகளின் தலைவர்களுடன் பிரதமர் மோடி காணொலி வழியாக புதன்கிழமை கலந்துரையாடினார். அப்போது அவர் பேசுகையில், 'கரோனா தொற்று காலத்தில் ஜாதி, சமயம் கடந்து பொதுமக்களுக்கு சமூக மற்றும் மத அமைப்புகள் உதவியது 'ஒரே பாரதம்' ஒருங்கிணைந்த முயற்சிக்கு சிறந்த உதாரணமாக உள்ளது.

கரோனாதொற்றுக்குஎதிரானபோராட்டத்தில்' அனைவருக்கும்இலவசதடுப்பூசி' பிரசாரம்கேடயம்போன்றது. தடுப்பூசிதொடர்பாகவிழிப்புணர்வு ஏற்படுத்தியும், அதுதொடர்பாக நிலவும் குழப்பங்கள், வதந்திகளைபோக்கஉதவியும்சமூகமற்றும்மதஅமைப்புகள்கரோனாபரவலை தடுக்கும் அரசின் முயற்சிகளில் இணைந்து செயல்பட வேண்டும்.

இந்தியாவின் 75-ஆம் ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டத்தில் சமூக மற்றும் மத அமைப்புகள் பங்கேற்க வேண்டும். 'இந்தியாவை ஒன்றிணைப்போம் இயக்கம்' மூலம் ஒட்டுமொத்த தேசத்தையும் ஒன்றுபடுத்தி 'ஒரே பாரதம்-மிகச்சிறந்த பாரதத்தின்' உண்மையான சக்தியை வெளிப்படுத்த அனைவரும் பணிபுரிய வேண்டும் என்று கூறியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# பெண்களின் பாதுகாப்புக்காக 24 மணி நேர உதவி எண் சேவை

## மத்திய அமைச்சர் தொடக்கி வைத்தார்

**புது தில்லி, ஜூலை 28:** நாடு முழுவதும் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தவும், பெண்களின் ஒட்டுமொத்த நலனை வலுப்படுத்தும் மத்திய அரசின் முயற்சிகளுக்கு ஏதுவாகவும் தேசிய மகளிர் ஆணையத்தின் 24 மணி நேர உதவி எண்ணை (7827170170) மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சர் ஸ்மிருதி இரானி செவ்வாய்க்கிழமை தொடக்கி வைத்தார்.

வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களை காவல் துறை, மருத்துவமனைகள், மாவட்ட சட்ட சேவை ஆணையகம், உளவியல் சேவைகள் போன்ற தகுந்த அதிகாரிகளுடன் இணைப்பதே இந்த இணைய வழி உதவி எண்ணின் நோக்கமாகும். காணொலி வாயிலாக இந்தச் சேவையை தொடக்கிவைத்த அமைச்சர் ஸ்மிருதி இரானி, தேசிய மகளிர் ஆணையத்தின் புதிய முயற்சிக்கு பாராட்டு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் ரேகா ஷர்மா, ஆணையத்தின் தற்போதைய புகார் அமைப்பு முறையை இந்தப் புதிய உதவி எண் வலுப்படுத்த உறுதுணையாக இருக்கும் என்று கூறினார்.

இந்த உதவி எண்ணை 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதிலான பெண்கள் தொடர்பு கொள்ளலாம். மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் எண்ம (டிஜிட்டல்) இந்தியா நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து இந்த மின்னணு உதவி எண் சேவை உருவாக்கப்பட்டுள்ளது.

# எம்எல்ஏக்கள் மீதான வழக்கை திரும்பப் பெற கேரள அரசு மனு: உச்சநீதிமன்றம் தள்ளுபடி



**புதுதில்லி, ஜூலை 28:** கடந்த 2015-ஆம் ஆண்டு கேரள சட்டப்பேரவையில் ஏற்பட்ட அமளி தொடர்பாக இடதுசாரி ஜனநாயக முன்னணி எம்எல்ஏக்கள் மீது பதிவு செய்யப்பட்ட குற்றவியல் வழக்கை திரும்பப் பெற அனுமதி கோரி அந்த மாநில அரசு தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

கடந்த 2015-ஆம் ஆண்டு கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சியில் இருந்தது. அந்த ஆண்டு மார்ச் 13-ஆம் தேதி மாநிலத்தின் அப்போதைய நிதியமைச்சர் கே.எம்.மாணி சட்டப்பேரவையில் பட்ஜெட் தாக்கல் செய்யவிருந்தார். அவ்வேளையில் அவர் மீது மதுபானக் கூடங்களுக்கு உரிமம் வழங்க லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன. இதனால் அவரை பட்ஜெட் தாக்கல் செய்யவிடாமல் தடுக்கும் நோக்கில் பேரவைத் தலைவரின் இருக்கையை தூக்கி எறிந்து அங்கிருந்த ஒலிபெருக்கிகள், கணினிகள், விசைப்பலகைகள் உள்ளிட்டவற்றை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணியினர் சேதப்படுத்தி அமளியில் ஈடுபட்டனர். இதுதொடர்பாக பேரவைச் செயலர் அளித்த புகாரின் அடிப்படையில் இடதுசாரி ஜனநாயக முன்னணி எம்எல்ஏக்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட குற்றவியல் வழக்குகளைத் திரும்பப் பெற அனுமதி கோரி தற்போது மாநிலத்தில் ஆட்சியில் இருக்கும் இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசு கேரள உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. எனினும் அந்த மனுவை கேரள உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

https://t.me/Tamil_epaper2

இதையடுத்து இவ்விவகாரம் தொடர்பாக கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த மனு நீதிபதிகள் டி.ஒய்.சந்திரசூட், எம்.ஆர்.ஷா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கூறியதாவது:

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சட்ட முறைப்படி உள்ள பேச்சுரிமை அல்லது போராடுவதற்கான உரிமையை பொதுச் சொத்துக்கு சேதம் ஏற்படுத்தும் செய்கைகளுடன் சமமாக கருத முடியாது.

எம்எல்ஏக்களுக்கு எதிரான வழக்கை திரும்பப் பெற அனுமதித்தால் அது அவர்கள் குற்றவியல் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற முடிவுக்கு வர வழிவகுக்கும். அத்துடன் அது சட்ட விரோத காரணங்களுக்காக நீதி பரிபாலனத்தில் குறுக்கிடுவதாகவும் ஆகிவிடும். எனவே, எம்எல்ஏக்கள் மீதான வழக்கை திரும்பப் பெற அனுமதிக்க முடியாது என்று தெரிவித்து கேரள அரசின் மனுவை தள்ளுபடி செய்தனர்.

சட்டப்பேரவையில் அமளியில் ஈடுபட்டதாக வழக்குப் பதிவு செய்யப்பட்ட எம்எல்ஏக்களில் தற்போது மாநில கல்வி அமைச்சராக பதவி வகிக்கும் வி.சிவன்குட்டியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆபாச பட வழக்கு: ராஜ் குந்த்ராவுக்கு ஜாமீன் மறுப்பு



**மும்பை, ஜூலை 28:** ஆபாச படத் தயாரிப்பு வழக்கில் கைதான ராஜ் குந்த்ராவின் ஜாமீன் மனுவை மும்பை நீதிமன்றம் புதன்கிழமை நிராகரித்துவிட்டது.

ஆபாச படங்களைத் தயாரித்து, அவற்றை செல்லிடப்பேசி செயலியில் வெளியிட்டதாக நடிகை ஷில்பா ஷெட்டியின் கணவர் ராஜ் குந்த்ராவை மும்பை காவல் துறையினர் கடந்த 19-ஆம் தேதி கைது செய்தனர். இந்திய தண்டனையியல் சட்டம், தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவற்றின் பல்வேறு பிரிவுகளின் கீழ் ராஜ் குந்த்ரா மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவரை 14 நாள் நீதிமன்றக் காவலில் வைக்க மும்பை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது. அவர் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனுவை, நீதிமன்றம் புதன்கிழமை நிராகரித்து விட்டது.

முன்னதாக, தன் மீதான குற்ற வழக்குகளை ரத்து செய்யக் கோரி, மும்பை உயர்நீதிமன்றத்தில் ராஜ் குந்த்ரா மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணையின் போது, ஆபாச படங்களைத் தயாரித்து செல்லிடப்பேசி செயலி மூலமாக வெளியிட்டதில் இருந்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் வரையிலான 6 மாதங்களில் ராஜ் குந்த்ரா ரூ.1.17 கோடி வருவாய் ஈட்டியதாக காவல் துறை தரப்பு தெரிவித்தது.

இதையடுத்து, ராஜ் குந்த்ரா மீதான வழக்கை ரத்து செய்வதற்கு மும்பை உயர்நீதின்றம் செவ்வாய்க்கிழமை மறுப்பு தெரிவித்துவிட்டது.

**மேலும் ஒரு வழக்கு:** ராஜ் குந்த்ரா மீது மும்பை குற்றவியல் பிரிவு காவல் துறை மேலும் ஒரு வழக்குப் பதிவு செய்துள்ளது. அதில், நடிகை கெஹானா வசிஷ்ட், அவருடைய கணவர் ரோமா கான், இயக்குநர் தன்வீர் ஹாஷ்மி, ராஜ்குந்த்ராவுக்கு அடுத்த நிலையில் நிறுவனத்தின் பொறுப்பாளராக இருந்த உமேஷ் கான் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக இதுவரை 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இணையத் தொடரில் நடிக்க வைப்பதாகக் கூறி பெண்களை ஆபாச படங்களுக்கு ராஜ் குந்த்ரா பயன்படுத்தி வந்தார் என்று காவல் துறை தரப்பு கூறுகிறது.

# உ.பி.யில் இரண்டடுக்கு பேருந்து மீது லாரி மோதல்: 18 பேர் பலி

**பாராபங்கி, ஜூலை 28:** உத்தரபிரதேச மாநிலம், லக்னௌ- அயோத்தி நெடுஞ்சாலையில் பழுதாகி நின்றுகொண்டிருந்த இரண்டடுக்குப் பேருந்தின் பின்புறம் லாரி மோதிய விபத்தில் 18 பயணிகள் பலியாகினர். செவ்வாய்க்கிழமை பின்னிரவில் நிகழ்ந்த இந்த சாலை விபத்தில் மேலும் 28 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

பஞ்சாப், ஹரியாணா மாநிலங்களில் நெல் விதைப்புப் பணிக்காக, பிகார் மாநிலத்தில் இருந்து சென்ற விவசாய கூலித் தொழிலாளர்கள் 130 பேர், வேலை முடிந்து தனியார் இரண்டடுக்கு பேருந்தில் சொந்த ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர். செவ்வாய்க்கிழமை இரவு, பாராபங்கி மாவட்டம், லக்னௌ- அயோத்தி நெடுஞ்சாலையில் பேருந்து சென்ற போது அதன் அச்சு முறிந்தது. எனவே, நெடுஞ்சாலையின் ஓரம் பேருந்து நிறுத்தப்பட்டு பழுது பார்க்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்போது, வேகமாக வந்த சரக்கு லாரி ஒன்று, பேருந்தின் பின்புறம் மோதியது. அதன் காரணமாக, பேருந்து சில அடி தூரம் இழுத்துச் செல்லப்பட்டது. இந்த விபத்தில், பேருந்தில் இருந்த பயணிகளும், பேருந்துக்கு வெளியே நின்றிருந்த பயணிகளும் பலத்த காயம் அடைந்தனர். தகவலறிந்து வந்த போலீஸார் உள்ளூர் மக்களின் உதவியுடன் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். அப்போது பலத்த மழை பெய்து கொண்டிருந்ததால் மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டது.



விபத்தில் சேதமடைந்த பேருந்து.

இந்த விபத்தில் 11 பயணிகள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 7 பேர் மருத்துவமனையில் உயிரிழந்தனர். காயமடைந்த பயணிகள் அனைவரும் அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். பலியானோரில் 15 பேர் அடையாளம் கண்டறியப்பட்டுள்ளதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யமுனா பிரசாத் தெரிவித்தார்.

**பிரதமர் இரங்கல்:** பிரதமர் நரேந்திர மோடி உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை தொடர்புகொண்டு இந்த விபத்து குறித்து கேட்டறிந்ததாகவும், விபத்தில் பலியானோருக்கு பிரதமர் இரங்கல் தெரிவித்ததாகவும், கூடுதல் தலைமைச் செயலர் அவானிஷ் அவஸ்தி தெரிவித்தார்.

சாலை விபத்தில் பலியானோரின் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சமும், காயமடைந்தோருக்கு தலா ரூ. 50 ஆயிரமும் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்குவதாக பிரதமர் அறிவித்துள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி, மாநில காங்கிரஸ் தலைவர் அஜய் குமார் லல்லு, ஆம் ஆத்மி கட்சி எம்.பி. சஞ்சய் சிங் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இந்த சாலை விபத்தில் உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# தனியார் மருத்துவமனைகளுக்கு கரோனா தடுப்பூசி ஒதுக்கீட்டை குறைக்க அரசு ஆலோசனை

**புது தில்லி, ஜூலை 28:** தனியார் மருத்துவமனைகளுக்கு தற்போதுள்ள கரோனா தடுப்பூசி ஒதுக்கீட்டை (25 சதவீதம்) குறைப்பது குறித்து மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளில் 75 சதவீதத்தை மத்திய அரசு கொள்முதல் செய்து மாநிலங்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறது.

25 சதவீத தடுப்பூசிகள் தனியார் மருத்துவமனைகளுக்கு கட்டண அடிப்படையில் வழங்கப்படுகின்றன. ஆனால், தனியார் மருத்துவமனைகளில் கரோனா தடுப்பூசி செலுத்தும் பணி குறைந்து வருகிறது. பணம் செலுத்தி அங்கு கரோனா தடுப்பூசிகள் செலுத்திக் கொள்ள பொதுமக்கள் தயங்குவதும் காரணம்.

இந்த நிலையில், தனியார் மருத்துவமனைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் 25 சதவீத தடுப்பூசிகளை 10 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என சில மாநில அரசுகள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்தன. இதுகுறித்து மத்திய அரசு ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறு தனியார் மருத்துவமனைகளுக்கு தடுப்பூசிகள் விகித அளவு குறைக்கப்பட்டால் மாநிலங்களுக்கு தடுப்பூசிகள் கிடைப்பது அதிகரிக்கும்.

# ட்விட்டர் தலைமை குறைதீர் அதிகாரியாக ஒப்பந்த ஊழியர் நியமனம்

## தில்லி உயர்நீதிமன்றம் அதிருப்தி

**புது தில்லி, ஜூலை 28:** தலைமை குறைதீர் அதிகாரியாக தற்காலிக ஒப்பந்த ஊழியரை ட்விட்டர் (சுட்டுரை) நிறுவனம் நியமித்திருப்பதற்கு தில்லி உயர்நீதிமன்றம் புதன்கிழமை அதிருப்தி தெரிவித்தது.

மேலும், 'சட்டத்துக்கு ட்விட்டர் நிறுவனம் முழு மனதுடன் கட்டுப்பட வேண்டும்' என்று கூறிய நீதிமன்றம், ஒரு வார காலத்துக்குள் புதிய பதில் மனுவை தாக்கல் செய்யுமாறும் உத்தரவிட்டது.

மத்திய அரசு அண்மையில் புதிய தகவல்தொழில்நுட்ப சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவந்தது. அதன்படி, சமூக ஊடக நிறுவனங்கள் இந்தியாவில் தலைமை குறைதீர் அதிகாரி, ஒருங்கிணைப்பு அதிகாரி மற்றும் குறைதீர் அதிகாரி ஆகிய மூன்று நிர்வாகிகளை நியமிக்க வேண்டும். அவர்கள் மூவரும் இந்தியாவில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். இவர்களின் பெயர்களை சமூக ஊடக நிறுவனங்கள் தங்களின் வலைதளத்தில் வெளியிடுவதோடு, இந்தியாவில் உள்ள அதன் அலுவலகங்களின் தொடர்பு முகவரி விவரத்தையும் வலைதளத்தில் வெளியிட வேண்டும்.

மத்திய அரசின் இந்தப் புதிய விதிகளை ட்விட்டர் நிறுவனம் ஏற்க மறுத்தது. அனைத் தொடர்ந்து, புதிய விதிகளை கடைப்பிடிக்க ட்விட்டர் நிறுவனத்துக்கு மத்திய அரசு இறுதிக் கெடு விதித்தது. ஆனால், அதன்பிறகும் அந்த நிறுவனம் நடவடிக்கை எடுக்காததைத் தொடர்ந்து, இந்தியாவில் ட்விட்டர் நிறுவனம் சட்டப் பாதுகாப்பை இழந்ததாக மத்திய அரசு அறிவித்தது.

இதற்கிடையே, மத்திய அரசின் புதிய விதிகளுக்கு உடன்பட மறுக்கும் ட்விட்டர் நிறுவனத்துக்கு எதிராக அமித் ஆச்சார்யா என்ற வழக்குரைஞர் தில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்தார்.

அந்த வழக்கில் ட்விட்டர் நிறுவனம் கடந்த 8-ஆம் தேதி பிரமாணப் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்தது. அதில், 'இந்தியாவுக்கான இடைக்கால தலைமை குறைதீர் அதிகாரியை நியமிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன' என்று தெரிவித்திருந்தது.

அதன்பிறகு, இந்தியாவுக்கான குறைதீர் அதிகாரியாக வினய் பிரகாஷ் என்பவரை ட்விட்டர் நிறுவனம் நியமித்தது. மேலும், அதுதொடர்பாக தில்லி உயர்நீதிமன்றத்தில் பதில் மனு ஒன்றையும் அந்த நிறுவனம் தாக்கல் செய்தது. அதில், 'மூன்றாம் நபர் ஒப்பந்ததாரர் மூலமாக இந்தியாவை சேர்ந்த வினய் பிரகாஷ் என்பவர் இந்தியாவுக்கான தலைமை குறைதீர் அதிகாரி மற்றும் மண்டல குறைதீர் அதிகாரி ஆகிய இரண்டு பதவிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த இரு பதவியிடங்களுக்கும் நேரடி ஊழியர் நியமனத்துக்கான தேர்வுக்கு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம், அந்தப் பணியிடங்களுக்கு அடுத்த 8 வாரங்களில் தகுதிவாய்ந்த இந்தியாவைச் சேர்ந்த நபர்கள் நியமிக்கப்படுவர்' என்று ட்விட்டர் நிறுவனம் தெரிவித்திருந்தது.

இந்த மனு தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி ரேகா பாலி முன்பு புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுவை பரிசீலித்த நீதிபதி பிறப்பித்த உத்தரவில் கூறியதாவது:

மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய விதிகளில், இந்தியாவுக்கான தலைமை குறைதீர் அதிகாரியாக நிறுவனத்தின் முக்கிய நிர்வாகி அல்லது மூத்த ஊழியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தப் பதவிக்கு மூன்றும் நபர் ஒப்பந்ததாரர் மூலமாக ஒரு தற்காலிக ஒப்பந்த ஊழியரை நியமித்திருப்பதாக ட்விட்டர் நிறுவனம் பதில் மனு தாக்கல் செய்திருக்கிறது. நியமிக்கப்பட்டிருக்கும் நபர், ட்விட்டர் நிறுவனத்தின் ஊழியரும் அல்லர்.

சட்டங்கள் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். இந்தப் பதில் மனுவில் சிறிதளவும் திருப்தியில்லை. எனவே, இந்தப் பதில் மனுவை ஏற்கமுடியாது. ஒரு வார காலத்துக்குள் புதிய பதில் மனுவை தாக்கல் செய்ய வேண்டும். அந்தப் பதில் மனுவில், தலைமை குறைதீர் அதிகாரி, இந்திய குறைதீர் அதிகாரி ஆகியோர் நியமன விவரங்கள் மட்டுமன்றி, புதிய விதியின்படி ஒருங்கிணைப்பு அதிகாரியை இதுவரை நியமிக்காதது ஏன்ற என்ற விவரத்தையும், எப்போது அந்தப் பணியிடம் நிரப்பப்படும் என்ற விவரத்தையும் ட்விட்டர் நிறுவனம் தெரிவிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

அப்போது ட்விட்டர் நிறுவனம் சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் சஜன் பூவையா, 'ஒருங்கிணைப்பு அதிகாரியை நியமிக்க 2 வார கால அவகாசம் வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தார்.

இதைக் கேட்ட நீதிபதி, 'ட்விட்டர் நிறுவனம் என்ன செய்ய விரும்புகிறது என்பது தெரியவில்லை. சட்டத்தைப் பின்பற்ற முடிவு செய்தால், அதனை முழு மனதுடன் ஏற்கவேண்டும்' என்றார்.

முன்னதாக, வழக்கு விசாரணையில் மத்திய அரசு தரப்பில் ஆஜரான அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர் சேட்டர் சர்மா, 'விதிகளுக்கு உள்பட்டு நடக்க ட்விட்டர் நிறுவனம் தொடர்ந்து மறுத்து வருகிறது. இதை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது. இந்த விவகாரம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால்தான், மத்திய அரசு நடவடிக்கை எடுக்காமல் அமைதி காத்து வருகிறது' என்றார்.

இந்த வழக்கு மீண்டும் ஆகஸ்ட் 6-ஆம் தேதி விசாரணைக்கு வர உள்ளது.

## குத்துச்சண்டை

# காலிறுதியில் பூஜா ராணி



குத்துச்சண்டையில் மகளிருக்கான 75 கிலோ பிரிவில் இந்தியாவின் பூஜா ராணி காலிறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றார். இது அவருக்கு முதல் ஒலிம்பிக் போட்டியாகும்.

முந்தைய சுற்றில் அல்ஜீரியாவின் இச்ரக் சாயிப்பை 5–0 என முற்றிலுமாக வீழ்த்தினார் பூஜா. இரு முறை ஆசிய சாம்பியனான பூஜா ராணி, தனது காலிறுதியில் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்றவரும், இரு முறை ஆசிய சாம்பியனும், முன்னாள் உலக சாம்பியனுமான சீனாவின் லீ கியாங்கை வரும் ஞாயிற்றுக்கிழமை எதிர்கொள்கிறார்.

கடந்த ஆண்டு ஆசிய ஒலிம்பிக் தகுதிப் போட்டியின் காலிறுதியில் லீ கியாங்கிடம் பூஜா ராணி தோல்வி கண்டுள்ளார். அதற்கு பூஜா பதிலடி கொடுப்பாரா என பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது.

## ஹாக்கி

# மகளிருக்கு 3–ஆவது தோல்வி



மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா 1–4 என்ற கோல் கணக்கில் நடப்பு சாம்பியனான இங்கிலாந்திடம் வீழ்ந்தது. ஒலிம்பிக் ஹாக்கியில் மகளிரணிக்கு இது 3–ஆவது தொடர் தோல்வியாகும். இதன் மூலம் காலிறுதிக்கு தகுதி பெறும் இந்தியாவுக்கான வாய்ப்பு குறைந்துள்ளது.

இந்த ஆட்டத்தில் இந்திய தரப்பில் ஷர்மிலா தேவி 23–ஆவது நிமிஷத்தில் கோலடித்தார். முதல் இரு ஆட்டங்களில் கோல் வாய்ப்புகளை வீணடித்ததைப் போலவே இந்த ஆட்டத்திலும் வாய்ப்புகளை வீணாக்கியது. இங்கிலாந்து சார்பில் ஹன்னா மார்டின் 2 மற்றும் 19–ஆவது நிமிஷங்களிலும், லில்லி ஆவ்ஸ்லி 41–ஆவது நிமிஷத்திலும், கிரேஸ் பால்ஸ்டன் 57–ஆவது நிமிஷத்திலும் கோலடித்தனர்.

உலகின் 11–ஆம் நிலையில் இருக்கும் இந்திய அணிக்கு இந்த ஆட்டத்தில் 8 பெனால்டி கார்னர் வாய்ப்புகள் கிடைத்தும் அதில் ஒன்றை மட்டுமே வீராங்கனைகளால் கோலாக மாற்ற முடிந்தது. மறுபுறம், உலகின் 5–ஆம் நிலை அணியாக இருக்கும் இங்கிலாந்து தனக்கு கிடைத்த எல்லா வாய்ப்புகளையுமே திறம்பட பயன்படுத்தி கோலடித்தது. இந்த ஆட்டத்தில் வென்று புள்ளிகளை பெற்றிருந்தால் இந்திய மகளிர் அணி வெளியேறும் அச்சத்தை தவிர்த்திருக்கலாம். ஆனால், தற்போது தோல்வி அடைந்துள்ளதால், அடுத்து நடைபெறவுள்ள 2 ஆட்டங்களில் வென்றால் மட்டுமே இந்தியா தனக்கான காலிறுதி வாய்ப்பை பெற இயலும்.



## பாட்மிண்டன்

# முன்னேறுகிறார் சிந்து

**டோக்கியோ, ஜூலை 28:** டோக்கியோ ஒலிம்பிக்கில் பாட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு புதன்கிழமை முன்னேறினார்.

நடப்பு உலக சாம்பியனான சிந்து தனது குரூப் சுற்றின் 2–ஆவது ஆட்டத்தில் ஹாங்காங்கின் என்.ஒய்.சியுங்கை எதிர்கொண்டார். 35 நிமிஷங்களிலேயே ஆட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்த சிந்து, 21–9, 21–16 என்ற செட்களில் எளிதாக வென்றார். இத்துடன் சியுங்கை 6–ஆவது முறையாக சந்தித்த சிந்து, அதில் 6–ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளார்.

வெற்றிக்குப் பிறகு பேசிய சிந்து, '2–ஆவது கேமிலேயே எனது வழக்கமான ஆட்டத்தை எட்டிவிட்டேன். இந்த ஆட்டம் மிக வேகமாக முடிந்தது. தேவையின்றி இரு தவறுகள் செய்தேன். பின்னர் எனது நுட்பங்களை மாற்றி ஆட்டத்தை கட்டுக்குள் கொண்டுவந்தேன். பெரிய ஆட்டத்துக்கு முன் இது போன்று நம்மை சோதித்துக்கொள்ளும் ஆட்டம் தேவையானது தான்' என்றார்.

உலகின் 7–ஆம் நிலை வீராங்கனையாக இருக்கும் சிந்து, தனது அடுத்த சுற்றில் உலகின் 12–ஆம் நிலையில் உள்ள டென்மார்க்கின் மியா பிலிச்ஃபெல்டட்டை எதிர்கொள்கிறார். இதுவரை அவரை 5 முறை சந்தித்துள்ள சிந்து, 4 முறை வென்றுள்ளார். 'மியாவுக்கு எதிரான ஆட்டம் எளிதாக இருக்கப்போவதில்லை. அவர் ஆக்ரோஷமான வீராங்கனை என்பதால், நானும் ஆக்ரோஷமாக ஆட வேண்டியிருக்கும். அந்த ஆட்டத்தில் ஒவ்வொரு புள்ளியும் முக்கியம்' என்றார் சிந்து.



சாய் பிரணீத்

**வெளியேறினார் சாய் பிரணீத்:** ஆடவர் ஒற்றையர் பிரிவில் களம் கண்டிருந்த இந்திய வீரர் சாய் பிரணீத் குரூப் சுற்றில் 2–ஆவது ஆட்டத்திலும் தோல்வி கண்டு போட்டியிலிருந்து வெளியேறினார்.

அதில் நெதர்லாந்தின் மார்க் கால்ஜௌவை எதிர்கொண்ட பிரணீத், 14–21, 14–21 என்ற கணக்கில் வீழ்ந்தார். இது பிரணீத்துக்கு முதல் ஒலிம்பிக் போட்டியாகும். தோல்விக்குப் பிறகு பேசிய பிரணீத், 'எனது ஆட்டத்தில் உறுதியான நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. வெல்லும் முனைப்புடன் களத்துக்கு வந்தும், என்னால் சரியான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் போனது' என்றார்.

## பதக்க பட்டியல்

| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஜப்பான் | 13 | 4 | 5 | 22 |
| 2 | சீனா | 12 | 6 | 9 | 27 |
| 3 | அமெரிக்கா | 11 | 11 | 9 | 31 |
| 4 | ரஷியா | 7 | 10 | 6 | 23 |
| 5 | ஆஸ்திரேலியா | 6 | 1 | 9 | 16 |
| 6 | இங்கிலாந்து | 5 | 6 | 5 | 16 |
| 7 | தென் கொரியா | 4 | 2 | 5 | 11 |
| 8 | ஜெர்மனி | 3 | 2 | 5 | 10 |
| 9 | பிரான்ஸ் | 3 | 2 | 3 | 8 |
| 10 | நெதர்லாந்து | 2 | 6 | 3 | 11 |
| 43 | இந்தியா | 0 | 1 | 0 | 1 |

## இந்தியா இன்று...

**வில்வித்தை**
ஆடவர் தனிநபர் வெளியேற்றும் சுற்று 1/32; அதானு தாஸ் – யு செங் (சீன தைபே); காலை 7.30 மணி

**பாட்மிண்டன்**
மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று; பி.வி.சிந்து – மியா பிலிச்ஃபெல்டட் (டென்மார்க்); காலை 6.15 மணி

**குத்துச்சண்டை**
ஆடவர் 91+ கிலோ காலிறுதிக்கு முந்தைய சுற்று; சதீஷ் குமார் – ரிகார்டோ பிரவுன் (ஜமைக்கா); காலை 8.45 மணி
மகளிர் 56 கிலோ காலிறுதிக்கு முந்தைய சுற்று; மேரிகோம் – இங்கிரிட் லோரினா வாலென்சியா (கொலம்பியா); பிற்பகல் 3.35 மணி

**குதிரையேற்றம்**
ஃபர்ஸ்ட் ஹார்ஸ் இன்ஸ்பெக்ஷன்; ஃபௌவாத் மிர்ஸா; காலை 6 மணி

**கோல்ஃப்**
ஆடவர் தனிநபர் ஸ்ட்ரோக் பிளே முதல் சுற்று; அனிர்பன் லாஹிரி, உதயன் மானே; அதிகாலை 4 மணி

**ஹாக்கி**
குரூப் சுற்று; இந்தியா – ஆர்ஜென்டீனா; காலை 6 மணி

**ரோயிங்**
ஆடவர் லைட்வெயிட் டபுள் ஸ்கல்ஸ் (தரவரிசை சுற்று) அர்ஜுன் லால் ஜாட், அரவிந்த் சிங்; காலை 5.20 மணி

**செயிலிங்**
ஆடவர் ஸ்கிஃப் 49இஆர் ரேஸ் 5, 6; கே.சி. கணபதி, வருண் தக்கர்; காலை 8.35 மணி
மகளிர் லேசர் ரேடியல் ரேஸ் 7, 8; நேத்ரா குமணன்; காலை 8.45
ஆடவர் லேசர் ரேஸ் 7, 8; விஷ்ணு சரவணன்; காலை 8.35 மணி

**துப்பாக்கி சுடுதல்**
மகளிர் 25 மீட்டர் பிஸ்டல் தகுதிச்சுற்று; ராஹி சர்னோபத், மானு பாக்கர்; காலை 5.30 மணி

**நீச்சல்**
ஆடவர் 100 மீட்டர் பட்டர்ஃப்ளை ஹீட்ஸ்; சஜன் பிரகாஷ்; மாலை 4.16 மணி

## வில்வித்தை

# காலிறுதிக்கு முந்தைய சுற்றில் தீபிகா குமாரி



தீபிகா



பிரவீண்



தருண்தீப்

வில்வித்தை போட்டியில் மகளிர் தனிநபர் பிரிவில் இந்தியாவின் தீபிகா குமாரி முதல் இரு வெளியேற்றும் சுற்றுகளில் வென்று முன்னேற்றத்தில் இருக்கிறார்.

உலகின் முதல்நிலை வீராங்கனையாக இருக்கும் தீபிகா, முதல் சுற்றில் பூடான் வீராங்கனை கர்மாவை 6–0 என அசத்தலாக வீழ்த்தினார். அடுத்த சுற்றில் அமெரிக்காவின் இளம் போட்டியாளரான ஜெனிஃபர் முசினோ ஃபெர்னான்டஸ், தீபிகாவுக்கு சற்றே சவால் அளித்தார். எனினும் சறுக்கலில் இருந்து சுதாரித்துக் கொண்ட தீபிகா, இறுதியில் 6–4 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். அடுத்ததாக தீபிகா 3–ஆவது வெளியேற்றும் சுற்றில் களம் காண இருக்கிறார்.

**ராய், ஜாதவ் வெளியேறினர்:** ஆடவர் தனிநபர் பிரிவில் இந்தியாவின் தருண்தீப் ராய், பிரவீண் ஜாதவ் ஆகிய இருவருமே 2–ஆவது சுற்றுக்கு முன்னேறி, அதில் தோல்வி கண்டு போட்டியிலிருந்து வெளியேறினர்.

https://t.me/Tamil_epaper2

முதல் சுற்றில் உக்ரைனின் அலெக்ஸி ஹன்பின்னை 6–4 என்ற கணக்கில் வென்ற தருண்தீப் ராய், 2–ஆவது சுற்றில் இஸ்ரேலின் இடே ஷானியிடம் 6–5 என்ற கணக்கில் தோல்வியைத் தழுவினார்.

அதேபோல் பிரவீண் ஜாதவ் முதல் சுற்றில் ரஷியாவின் கால்சன் பஸார்ஸபோவை 6–0 என்ற கணக்கில் வீழ்த்தி, அடுத்த சுற்றில் அமெரிக்காவின் பிராடி எலிசனிடம் 6–0 என்ற கணக்கில் தோற்றார்.

தற்போதைய நிலையில் வில்வித்தையில் இந்தியாவின் தரப்பில் தீபிகா குமாரியும், அவரது கணவர் அதானு தாஸ் மட்டும் களத்தில் இருக்கின்றனர். அதானு தாஸின் ஆட்டம் வியாழக்கிழமை தொடங்குகிறது.

## செயிலிங்

# கடைசி இடத்தில் இந்திய இணை



செயிலிங் எனப்படும் படகோட்டும் போட்டியில் ஆடவர் ஸ்கிஃப் 49இஆர் பிரிவில் 4 ரேஸ்களின் முடிவில் இந்தியாவின் கே.சி.கணபதி, வருண் தக்கர் இணை 18–ஆவது இடம் பிடித்து கடைசி அணியாக உள்ளது.

முன்னதாக செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதல் ரேஸில் 18–ஆவதாக வந்த இந்த இணை, புதன்கிழமை நடைபெற்ற 3 ரேஸ்களில் முறையே 18, 17, 19–ஆவது இடங்களைப் பிடித்தன. மொத்தமாக 4 ரேஸ்கள் முடிவின் அடிப்படையில் தற்போது 18–ஆவது இடத்தில் கணபதி, தக்கர் இணை உள்ளது. இப்பிரிவில் இன்னும் 8 ரேஸ்களும், அதன் பிறகு பதக்கத்துக்கான ரேஸும் நடைபெறவுள்ளன.

இந்தப் பிரிவுகளில் ஒவ்வொரு பந்தயத்திலும் ஒவ்வொரு அணியும் எத்தனையாவது இடம் பிடிக்கிறதோ, அதற்கு அத்தனை புள்ளிகள் வழங்கப்படும். இறுதிச்சுற்று நிறைவடைந்த பிறகு அணிகளின் புள்ளிகள் இரட்டிப்பாக்கப்படும். அதில் குறைந்த புள்ளிகளுடன் இருக்கும் அணிகளே வெற்றியாளராக அறிவிக்கப்படும்.



## ஜிம்னாஸ்டிக்ஸ்

# சைமன் பைல்ஸ் விலகல்

ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டியில் அமெரிக்காவின் நட்சத்திர வீராங்கனையான சைமன் பைல்ஸ் 'ஆல்–அரவுன்ட்' பிரிவிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இந்தப் பிரிவில் அவர் நடப்பு ஒலிம்பிக் சாம்பியனாவார். தனது உளவியல் நலனில் கவனம் செலுத்துவதற்காக இந்த முடிவை எடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார். முன்னதாக செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அணிகள் பிரிவு இறுதிச்சுற்றிலும் ஒரேயொரு முயற்சியுடன் பைல்ஸ் விலகியிருந்தார். தற்போது ஆல்–அரவுன்ட் பிரிவில் சைமன் பைல்ஸின் இடத்தில் ஜேட் கேரி சேர்க்கப்பட்டுள்ளார்.

## நீச்சல்

# வரலாறு படைத்தது இங்கிலாந்து



நீச்சல் போட்டியில் ஆடவருக்கான 4*200 மீட்டர் ஃப்ரீஸ்டைல் ரிலேவில் இங்கிலாந்து தங்கம் வென்றது. கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலான காலகட்டத்தில் ஒலிம்பிக் நீச்சலில் இங்கிலாந்து தங்கம் வென்றது இது முதல் முறையாகும்.

அந்நாட்டின் டாம் டீன், டன்கன் ஸ்காட், ஜேம்ஸ் கை, மேத்தியூ ரிச்சர்ட்ஸ் ஆகியோர் கூட்டணி 6 நிமிஷம் 58.58 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றது. ரஷியா 7 நிமிஷம் 1.81 விநாடிகளில் இலக்கை எட்டி வெள்ளியும், ஆஸ்திரேலியா 7 நிமிஷம் 1.84 விநாடிகளில் வந்து வெண்கலமும் வென்றன. வழக்கமாக இந்தப் பிரிவில் பதக்கம் வெல்லும் அமெரிக்கா 4–ஆம் இடமே பிடித்தது.

இதற்கு முன் 1912 ஸ்டாக்ஹோம் ஒலிம்பிக்ஸில் மகளிருக்கான 4*200 மீட்டர் ஃப்ரீஸ்டைல் ரிலேவில் இங்கிலாந்து மகளிர் அணி தங்கம் வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

**லெடக்கிக்கு தங்கம்:** அமெரிக்காவின் நட்சத்திர வீராங்கனையான கேட்டி லெடக்கி, மகளிருக்கான 1500 மீட்டர் ஃப்ரீஸ்டைலில் தங்கம் வென்றார். சக நாட்டவர் எரிகா சல்லிவன் வெள்ளியும், ஜெர்மனியின் சாரா கோலர் வெண்கலமும் கைப்பற்றினர். ஒலிம்பிக்கில் இந்தப் பிரிவில் லெடக்கிக்கு இது முதல் தங்கமாகும். இத்துடன் ஒலிம்பிக்கில் அவர் 6 தங்கம், 2 வெள்ளி என 8 பதக்கங்கள் வென்றுள்ளார்.



## டென்னிஸ்

# காலிறுதியில் ஜோகோவிச்

டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ரஷியாவின் டேனில் மெத்வதேவ், ஜப்பானின் கெய் நிஷிகோரி, ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரேவ், ஸ்பெயினின் பாப்லோ கரினோ பஸ்டா, பிரான்ஸின் யுகோ ஹம்பர்ட், ரஷியாவின் காரென் கசானோவ், பிரான்ஸின் ஜெரிமி சார்டி ஆகியோர் காலிறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையரில் ஸ்விட்சர்லாந்தின் பெலின்டா பென்சிச், உக்ரைனின் எலினா ஸ்விடோலினா, கஜகஸ்தானின் எலனா ரைபாகினா, செக் குடியரசின் மார்கெட்டா வோன்ட்ரௌசோவா ஆகியோர் அரையிறுதிச்சுற்றுக்கு முன்னேறினர்.

## ரோயிங்

# வெளியேறியது இந்தியா



அர்ஜுன்–அரவிந்த்

ரோயிங் போட்டியில் ஆடவர் லைட்வெயிட் டபுள் ஸ்கல்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் லால் ஜாட், அரவிந்த் சிங் ஆகியோர் இணை இறுதிச்சுற்றுக்கு தகுதி பெறத் தவறியது.

முன்னதாக ரெபிசேஜ் சுற்று மூலம் அரையிறுதிக்கு முன்னேறிய இந்த கூட்டணி, அதில் 6 நிமிஷம் 24.41 விநாடிகளில் இலக்கை எட்டி கடைசி அணியாக வந்தது. இந்த 2–ஆவது அரையிறுதியில் மொத்தம் 6 அணிகள் பங்கேற்றன. இரு அரையிறுதிகளிலும் முதல் முதல் 3 இடங்களைப் பிடித்த அணிகளே இறுதிச்சுற்றுக்கு முன்னேறின. அர்ஜுன், அரவிந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியது, இந்தியாவின் ஒலிம்பிக் ரோயிங்கில் அதிகபட்சமாகும்.

# 2–ஆவது டி20: இலங்கை வெற்றி

**கொழும்பு, ஜூலை 28:** இந்தியாவுக்கு எதிரான 2–ஆவது டி20 ஆட்டத்தில் இலங்கை 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

இதையடுத்து 3 ஆட்டங்கள் கொண்ட தொடர் 1–1 என சமனிலையில் உள்ளது.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த இந்தியா 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 132 ரன்கள் அடித்தது. அடுத்து ஆடிய இலங்கை 19.4 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 133 ரன்கள் அடித்து வென்றது.

இந்த ஆட்டத்தின் மூலம் ஐபிஎல் வீரர்களான ருதுராஜ் கெய்க்வாட், தேவ்தத் படிக்கல், நிதீஷ் ராணா, சேத்தன் சக்காரியா ஆகியோர் இந்திய அணியில் இடம்பிடித்து சர்வதேச டி20 போட்டியில் அறிமுகம் ஆகினர். கிருணால் பாண்டியாவுக்கு கரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்து, அவருக்கு நெருக்கமான தொடர்பில் இருந்ததாக சில வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்டதால், புதிய வீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.



டி சில்வா – சமிகா

இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற இலங்கை ஃபீல்டிங் செய்யத் தீர்மானித்தது. இந்தியாவின் இன்னிங்ஸை ருதுராஜ் கெய்க்வாட் – கேப்டன் ஷிகர் தவன் தொடங்கினர். இதில் ருதுராஜ் 1 பவுண்டரியுடன் 21 ரன்கள் சேர்த்து வெளியேற, தவன் 5 பவுண்டரிகள் உள்பட 40 ரன்களுக்கு ஆட்டமிழந்தார்.

தேவ்தத் படிக்கல் 1 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 29 ரன்கள் சேர்க்க, சஞ்சு சாம்சன் 7, நிதீஷ் ராணா 9 ரன்கள் அடித்தனர். ஓவர்கள் முடிவில் புவனேஷ்வர் குமார் 13, நவ்தீப் சைனி 1 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இலங்கை தரப்பில் அகிலா தனஞ்செயா 2, வனிந்து ஹசரங்கா, துஷ்மந்தா சமீரா, டாசன் ஷனகா ஆகியோர் தலா 1 விக்கெட் சாய்த்தனர்.

அடுத்து ஆடிய இலங்கையில் அவிஷ்கா ஃபெர்னான்டோ 11, மினோத் பானுகா 36 ரன்கள் அடிக்க, சதீரா சமர விக்ரமா 8, கேப்டன் டாசன் ஷனகா 3 ரன்கள் சேர்த்தனர். வனிந்து ஹசரங்கா 15, ரமேஷ் மெண்டிஸ் 2 ரன்களில் ஆட்டமிழந்தனர். தனஞ்செய டி சில்வா 40, சமிகா கருணாரத்னே 12 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்து அணியை வெற்றிக்கு வழி நடத்தினர். இந்திய தரப்பில் குல்தீப் யாதவ் 2, புவனேஷ்வர், சேத்தன், வருண் சக்கரவர்த்தி, ராகுல் சாஹர் ஆகியோர் தலா 1 விக்கெட் சாய்த்தனர்.

### பாட்மிண்டன் நட்சத்திரம்

# நந்து நடேகர் காலமானார்

**புணே, ஜூலை 28:** இந்திய பாட்மிண்டன் நட்சத்திரம் நந்து நடேகர் (88) புதன்கிழமை காலமானார்.



கடந்த 3 மாதங்களாக அவர் உடல்நலக் குறைவுடன் இருந்தார். நடேகருக்கு மகன், இரு மகள்கள் உள்ளனர்.

மகாராஷ்டிர மாநிலம் சங்லியில் 1933–இல் பிறந்த நடேகர், தொடக்கத்தில் டென்னிஸ் வீரராகவே இருந்தார். 1952–க்குப் பிறகு, அவரது பாதை பாட்மிண்டன் பக்கம் திரும்பியது.

தேசிய, சர்வதேச அளவில் தனிநபர், இரட்டையர், கலப்பு இரட்டையர் பிரிவுகளில் நூற்றுக்கும் அதிகமான பட்டங்களை வென்றுள்ள நடேகர், களத்தில் விளையாடுவது பாலே நடனத்துக்கு இணையானதாக இருக்குமென வர்ணிக்கப்படுகிறது. 6 முறை தேசிய சாம்பியனான நடேகர், 20–ஆவது வயதில் சர்வதேச களத்தில் இந்தியாவுக்காக களம் காணத் தொடங்கினார்.

1956–இல் மலேசியாவில் நடைபெற்ற செலாங்கோர் போட்டியில் சாம்பியன் ஆனதன் மூலம், பாட்மிண்டனில் சர்வதேச போட்டியில் சாம்பியன் ஆன முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார். 1961–இல் அர்ஜுனா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1990–94 காலகட்டத்தில் மகாராஷ்டிர பாட்மிண்டன் சங்கத் தலைவராகவும் இருந்தார்.

**பிரதமர் இரங்கல்:** நடேகர் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்ட இரங்கல் பதிவில், 'இந்தியாவின் விளையாட்டு வரலாற்றில் நந்து நடேகருக்கு சிறப்பிடம் உண்டு. சிறந்த பாட்மிண்டன் வீரராகவும், ஆலோசகராகவும் இருந்துள்ளார். பல இளம் போட்டியாளர்களுக்கு முன்னுதாரணமாக இருந்திருக்கிறார். அவரின் மறைவு துயரமளிக்கிறது' என்று கூறியுள்ளார்.

# டிஎன்பிஎல்: சேப்பாக் வெற்றி



**சென்னை, ஜூலை 28:** டிஎன்பிஎல் கிரிக்கெட் போட்டியின் 12–ஆவது ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லிஸ் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் சேலம் ஸ்பார்டான்ஸை புதன்கிழமை வென்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த சேலம் 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 142 ரன்கள் அடிக்க, அடுத்து ஆடிய சேப்பாக் 18.5 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 145 ரன்கள் எடுத்து வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் லைகா கோவை கிங்ஸ் 19 ரன்கள் வித்தியாசத்தில் சீசேம் மதுரை பாந்தர்ஸை வென்றது. இதில் முதலில் பேட் செய்த கோவை 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 172 ரன்கள் அடித்தது. அடுத்து ஆடிய மதுரை 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 153 ரன்களே அடித்தது.

# அணுசக்தி பேச்சுவார்த்தையில் அமெரிக்கா முரட்டுப் பிடிவாதம்

## அயதுல்லா கமேனி குற்றச்சாட்டு



ஈரான் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இப்ராஹிம் ரய்சியுடன் (வலது) தற்போதைய அதிபர் ஹஸன் ரௌஹானி (கோப்புப் படம்).

**டெஹ்ரான், ஜூலை 28:** வல்லரசு நாடுகளுக்கும் தங்களுக்கும் இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்தைத் தக்கவைப்பதற்கான பேச்சுவார்த்தையில் அமெரிக்கா முரட்டுப் பிடிவாதம் பிடித்து வருவதாக ஈரான் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:

அணுசக்திப் பேச்சுவார்த்தையைத் தக்கவைப்பதற்காக ஆஸ்திரியாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, அமெரிக்கா தனது முரட்டுப் பிடிவாதத்தை வெளிப்படுத்தியது.

இதுவரை ஆட்சி செலுத்தி வந்த ஹஸன் ரௌஹானியின் தலைமையிலான அரசு, மேற்கத்திய நாடுகளுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை மேற்கொள்ளும்போது கையாண்ட மென்மையான அணுகுமுறையால் கிடைத்த அனுபவத்திலிருந்து, புதிதாக அமையவிருக்கும் அரசு பாடம் கற்க வேண்டும்.

மேற்கத்திய நாடுகள் நம் மீது ஒரு போதும் நம்பிக்கை வைக்காது என்பது தான் அந்தப் படிப்பினை. மேற்கத்திய நாடுகள் மீது நம்பிக்கை வைப்பதும் பலனளிக்காது என்பதும் தற்போதைய அரசின் அனுபவங்கள் சொல்லும் உண்மையாகும்.

மேற்கத்திய நாடுகள் நமக்கு உதவி செய்வதில்லை. அவர்கள் எந்தெந்த விவகாரங்களிலெல்லாம் நமக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அந்த விவகாரங்களிலெல்லாம் தடையில்லாமல் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

மீண்டும் அணுசக்தி ஒப்பந்தம் ஏற்படுமானால், அந்த ஒப்பந்தத்தில் பிற விவகாரங்கள் தொடர்பான விவாதங்கள் குறித்த வாக்கியங்களும் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று பேச்சுவார்த்தையின் போது அமெரிக்கப் பிரதிநிதிகள் வலியுறுத்துகின்றனர்.

ஈரானின் ஏவுகணைத் திட்டங்கள், மண்டல விவகாரங்கள் ஆகியவற்றில் தலையிடுவதற்கு அந்த வாக்கியங்களைப் பயன்படுத்த அமெரிக்கர்கள் திட்டமிடுகின்றனர்.

மற்ற விவகாரங்கள் குறித்துப் பேச நாங்கள் மறுத்தால், ஒப்பந்தத்தை ஈரான் மீறிவிட்டது; எனவே அந்த ஒப்பந்தம் முறிந்துவிட்டது என்று அவர்கள் சொல்வார்கள் என்றார் அயதுல்லா கமேனி.



ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜெர்மனிக்கும் இடையே கடந்த 2015-ஆம் ஆண்டில் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

அந்த ஒப்பந்தத்தில், தனது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரான் சம்மதித்தது.

அதற்குப் பதிலாக, ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை நீக்குவதாக வல்லரசு நாடுகள் ஒப்புக்கொண்டன. ஒபாமா ஆட்சிக் காலத்தின் போது கையெழுத்தான அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக, அடுத்து வந்த அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார். அத்துடன், ஒப்பந்தம் காரணமாக விலக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது மீண்டும் விதித்தார்.

அதற்கு பதிலடியாக, ஒப்பந்த நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக மீறி வருகிறது. இதனால் அந்த ஒப்பந்தம் முறிந்து போகும் அபாயம் நிலவி வருகிறது.

அந்த ஒப்பந்தத்தைத் தக்கவைப்பதற்கான பேச்சுவார்த்தை வல்லரசு நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் பல கட்டங்களாக நடைபெற்று வந்தது.

இந்த நிலையில், ஈரானில் கடந்த மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்ட தலைமை நீதிபதி இப்ராஹிம் ரய்சி வெற்றி பெற்றார். அடுத்த மாதம் அவர் பதவியேற்கவிருக்கும் நிலையில், வியன்னா பேச்சுவார்த்தையை ஈரான் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது.

அந்தப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க தங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், அமெரிக்கா தங்களுடனான கைதிகள் பரிமாற்றத்தை தாமதப்படுத்தி வருவதாக ஈரான் வெளியுறவுத் துறை இணையமைச்சர் சையது அப்பாஸ் அர்காசி அண்மையில் தெரிவித்தார்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த அமெரிக்கா, கைதிகளைப் பரிமாற்ற விவகாரம் பேச்சுவார்த்தை அளவிலேயே உள்ளது. அதுதொடர்பாக எந்த ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்தது.

இந்தச் சூழலில், ஈரான் தலைமை மத குரு அயதுல்லா அலி கமேனி அமெரிக்கா மீது இந்தக் குற்றச்சாட்டுகளைசுமத்தியுள்ளார்.



அயதுல்லா கமேனி

---

### தென் கொரியா

## தினசரி கரோனா பாதிப்பு மீண்டும் புதிய உச்சம்



**சியோல், ஜூலை 28:** தென் கொரியாவில் கரோனா உறுதி செய்யப்படுவோரின் தினசரி எண்ணிக்கை புதன்கிழமை மீண்டும் புதிய உச்சத்தைத் தொட்டது. இதுகுறித்து அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்ததாவது:

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 1,896 பேருக்கு கரோனா உறுதி செய்யப்பட்டது. இது, நாட்டில் இதுவரை இல்லாத அதிகபட்ச தினசரி பாதிப்பு எண்ணிக்கையாகும். இத்துடன், 1,93,427 பேர் கரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர, கடந்த 24 மணி நேரத்தில் 4 கரோனா நோயாளிகள் உயிரிழந்தனர். இத்துடன், அந்த நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை 2,083-ஆக உயர்ந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சீன வெளியுறவு அமைச்சருடன் தலிபான்கள் சந்திப்பு

**பெய்ஜிங், ஜூலை 28:** சீனாவில் தலிபான் பிரதிநிதிகள் அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீயுடன் புதன்கிழமை பேச்சுவார்த்தை நடத்தினர். இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

முல்லா அப்துல் கனி பரதார் தலைமையிலான தலிபான் தூதுக் குழு சீனாவில் திடீர் சுற்றுப் பயணம் மேற்கொண்டது.

வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீயைச் சந்தித்து அந்தக் குழு பேச்சுவார்த்தை நடத்தியது. பேச்சுவார்த்தைக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தலிபான் பிரதிநிதிகள், சீனா நம்பகத்தன்மை மிகுந்த நாடு என்று தெரிவித்தனர்.

மேலும், சீனாவுக்கு எதிரான செயல்களில் ஈடுபடும் யாருக்கும் தங்கள் மண்ணில் அடைக்கலம் அளிக்கப்படாது என்று அவர்கள் கூறினர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படையினர் முழுமையாக வெளியேறுவது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதற்குப் பிறகு சீனாவுடன் தலிபான்கள் நடத்தியுள்ள முதல் பேச்சுவார்த்தை இது.



சீனாவின் தியான்ஜின் நகரில் அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீயை புதன்கிழமை சந்தித்த தலிபான் தூதுக் குழு தலைவர் முல்லா அப்துல் கனி பரதார்.

இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஷாவ் லிஜியான் கூறுகையில், பெய்ஜிங்குக்கு அருகே உள்ள தியான்ஜின் நகரில் அமைச்சர் வாங் யீயை பரதார் குழுவினர் சந்தித்துப் பேசியதாகத் தெரிவித்தார்.

அந்தச் சந்திப்பின்போது தங்களுக்கும் ஜின்ஜியாங் பிரிவினைவாதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை தலிபான்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று வாங் யீ நம்பிக்கை தெரிவித்ததாக அவர் கூறினார்.

நியூயார்க் இரட்டை கோபுரத் தாக்குதலுக்கு தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட அல்-காய்தா தலைவர் பின் லேடனுக்கு அப்போது ஆப்கானிஸ்தானில் ஆட்சி செலுத்தி வந்த தலிபான்கள் அடைக்கலம் அளித்தனர். அதையடுத்து, அந்த நாட்டின் மீது அமெரிக்கா கடந்த 2002-ஆம் ஆண்டு படையெடுத்து தலிபான்களை ஆட்சியிலிருந்து அகற்றியது.

அதனைத் தொடர்ந்து, ஆப்கன் அரசுப் படைகளுக்குப் பயிற்சியளிக்கவும் தலிபான்களுக்கு எதிரான போரில் ராணுவத்துக்கு உதவவும் அமெரிக்கப் படையினர் அந்த நாட்டில் கடந்த 20 ஆண்டுகளாகத் தங்கியிருந்தனர்.

இந்த நிலையில், அமெரிக்காவுக்கும் தலிபான்களுக்கும் இடையே கடந்த 2019-ஆம் ஆண்டு கையெழுத்தான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தின்படி, தங்களது படையினரை அடுத்த மாதம் 31-ஆம் தேதிக்குள் முழுமையாக திரும்ப அழைக்க அமெரிக்கா இலக்கு நிர்ணயித்துள்ளது.

ஏற்கெனவே 95 சதவீத அமெரிக்க வீரர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிவிட்ட நிலையில், ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பல்வேறு பகுதிகளை தலிபான்கள் கைப்பற்றி முன்னேறி வருகின்றனர்.

இது, சீனாவை கவலையடையச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் மீண்டும் தலிபான்கள் ஆட்சியமைத்தால், சீனாவில் உய்கர் இன முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஜின்ஜியாங் மாகாணத்தைச் சேர்ந்த பிரிவினைவாத அமைப்பினருக்கு அவர்கள் அடைக்கலம் அளிக்கலாம் என்று சீன அதிகாரிகள் எச்சரித்தனர்.

எனினும், இதற்கு மறுப்பு தெரிவித்த தலிபான்கள், 'சீனாவை எங்களது நட்பு நாடாகக் கருதுகிறோம். எனவே, அந்த நாட்டின் உய்கர் இன பிரிவினைவாத அமைப்புகளுக்கு ஆதரவளிக்க மாட்டோம்' என்றனர்.

இந்தச் சூழலில், தலிபான் பிரதிநிதிகள் சீன வெளியுறவுத் துறை அமைச்சரைத் சந்தித்துப் பேசியுள்ளனர்.

### வங்கதேசம்

## 20 ஆயிரத்தைக் கடந்த கரோனா பலி



**டாக்கா, ஜூலை 28:** வங்கதேசத்தில் கரோனாவுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை புதன்கிழமை 20 ஆயிரத்தைக் கடந்தது. இதுகுறித்து அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்ததாவது:

கடந்த 24 மணி நேரத்தில் 237 பேர் கரோனா பாதிப்பால் உயிரிழந்தனர். இதையடுத்து, நாட்டில் அந்த நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை 20,016-ஆக உயர்ந்துள்ளது.

இதுதவிர, கடந்த 24 மணி நேரத்தில் 16,230 பேருக்கு கரோனா தொற்று இருப்பது பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது. இத்துடன், கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 12,10,982-ஆக உயர்ந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

https://t.me/Tamil_epaper2

---

| கரன்சி நிலவரம் (இந்திய ரூபாயில்) | அமெரிக்கா | ஐரோப்பா | பிரிட்டன் | மலேசியா | சிங்கப்பூர் |
|---|---|---|---|---|---|
| | டாலர் 74.38 | யூரோ 87.97 | பவுண்ட் 103.34 | ரிங்கிட் 17.59 | டாலர் 54.83 |

தங்கம் (24 கேரட்) 1 கிராம் ரூ.4,871
தங்கம் (22 கேரட்) 1 கிராம் ரூ. 4,507

வெள்ளி 1 கிலோ.... ரூ.71,200
வெள்ளி 1 கிராம்....... ரூ.71.20

சென்செக்ஸ் 52,443 ▼ 135
நிஃப்டி 15,709 ▼ 37

## மாருதி சுஸுகி லாபம் ரூ.475 கோடி

**புது தில்லி, ஜூலை 28:** நாட்டின் மிகப்பெரிய கார் உற்பத்தி நிறுவனமான மாருதி சுஸுகி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ரூ.475 கோடி நிகர லாபத்தை ஈட்டியுள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் பங்குச் சந்தையிடம் புதன்கிழமை அளித்த அறிக்கையில் கூறியுள்ளதாவது:

MARUTI SUZUKI

நடப்பு 2021-22-ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் நிறுவனம் தனது செயல்பாடுகள் மூலமாக ரூ.17,776 கோடி வருவாய் ஈட்டியது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் நிறுவனம் ஈட்டிய ரூ.4,111 கோடி வருவாயுடன் ஒப்பிடும்போது மிக அதிகமாகும்.

2020-21 ஏப்ரல்-ஜூன் காலாண்டில் நிறுவனம் ரூ.268 கோடி அளவிலான நிகர இழப்பை சந்தித்திருந்தது. இந்த நிலையில், நடப்பு நிதியாண்டில் ஜூன் 30-ஆம் தேதியுடன் நிறைவடைந்த காலாண்டில் ரூ.475 கோடி நிகர லாபத்துடன் நிறுவனம் ஆதாயப் பாதைக்கு திரும்பியுள்ளது.

முதல் காலாண்டில் நிறுவனம் ஒட்டுமொத்த அளவில் 3,53,614 வாகனங்களை விற்பனை செய்துள்ளது. உள்நாட்டு சந்தையில் விற்பனை 3,08,095-ஆகவும், ஏற்றுமதி 45,519-ஆகவும் இருந்ததாக மாருதி சுஸுகி பங்குச் சந்தையிடம் தெரிவித்துள்ளது.

மும்பை பங்குச் சந்தையில் புதன்கிழமை நடைபெற்ற வர்த்தகத்தில் மாருதி சுஸுகி பங்கின் விலை 1.26 சதவீதம் சரிந்து ரூ.7,150.20-ஆக நிலைத்தது.

## சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா லாபம் ரூ.206 கோடி

**புது தில்லி, ஜூலை 28:** பொதுத் துறையைச் சேர்ந்த சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ரூ.206 கோடி நிகர லாபத்தை பதிவு செய்துள்ளது.

இதுகுறித்து அந்த வங்கி பங்குச் சந்தையிடம் புதன்கிழமை அளித்த ஆவணங்களில் கூறியுள்ளதாவது:

सेन्ट्रल बैंक ऑफ इंडिया
Central Bank of India
1911 से आपके लिए "सेंट्रल" "CENTRAL" TO YOU SINCE 1911

நடப்பு 2021-22-ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையிலான முதல் காலாண்டில் வங்கியின் வருமானம் ரூ.6,245.54 கோடியாக சரிவடைந்துள்ளது. இதற்கு முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்தில் வங்கியின் வருவாய் ரூ.6,726.68 கோடியாக அதிகரித்து காணப்பட்டது.

நிகர வட்டி வருவாய் ரூ.2,146 கோடியிலிருந்து ரூ.2,135 கோடியாக குறைந்தது. நிகர லாபம் ரூ.135 கோடியிலிருந்து 53 சதவீதம் உயர்ந்து ரூ.206 கோடியைத் தொட்டது.

நடப்பாண்டு ஜூன் இறுதி வரையிலான நிலவரப்படி மொத்த வாராக் கடன் 18.10 சதவீதத்திலிருந்து 15.92 சதவீதமாக குறைந்துள்ளது. நிகர வாராக் கடனும் 6.76 சதவீதத்திலிருந்து 5.09 சதவீதமாக மேம்பட்டுள்ளதாக சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா தெரிவித்துள்ளது.

மும்பை பங்குச் சந்தையில் புதன்கிழமை வர்த்தகத்தில் சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா பங்கின் விலை 1.41 சதவீதம் குறைந்து ரூ.24.45-இல் நிலைத்தது.

### பங்குச் சந்தையில் தொடர் மந்த நிலை

# சென்செக்ஸ் 135 புள்ளிகள் சரிவு

**மும்பை, ஜூலை 28:** இந்தியப் பங்குச் சந்தைகளில் புதன்கிழமை நடைபெற்ற வர்த்தகம் தொடர்ந்து மூன்றாவது நாளாக சரிவைச் சந்தித்தது.

அமெரிக்க மத்திய வங்கியின் கொள்கை முடிவுகளை எதிர்பார்த்து சர்வதேச முதலீட்டாளர்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டனர். சீன சந்தைகளில் காணப்பட்ட சரிவு காரணமாக சர்வதேச சந்தைகளிலும் வர்த்தகம் மந்த நிலையில் இருந்தது. அதன் தாக்கம், இந்தியப் பங்குச் சந்தைகளையும் விட்டுவைக்கவில்லை.

மும்பை பங்குச் சந்தையில் (பிஎஸ்இ) மோட்டார் வாகனம், வங்கி, ரியல் எஸ்டேட், நுகர்வோர் சாதனங்கள் எரிசக்தி துறை குறியீட்டெண்கள் 1.01 சதவீதம் வரை சரிந்தன. அதேசமயம், தொலைத்தொடர்பு, உலோகம், தொழில்நுட்பம், அடிப்படை உலோகம் மற்றும் பொறியியல் பொருள்கள் துறைகளைச் சேர்ந்த குறியீட்டெண்கள் ஆதாயத்துடன் நிறைவடைந்தன.

பிஎஸ்இ மிட்கேப் குறைந்தும், ஸ்மால் கேப் குறியீட்டெண் 0.45 சதவீத சரிவுடனும் நிறைவடைந்தன.

சென்செக்ஸ் பட்டியலில் இடம்பெற்றுள்ள கோட்டக் வங்கி பங்கின் விலை அதிகபட்சமாக 2.64 சதவீதம் வரை வீழ்ச்சி கண்டது. இதையடுத்து, அதிக இழப்பை கண்ட நிறுவனங்களின் பட்டியலில் அந்த வங்கி முதலிடத்தில் இருந்தது.

**சென்செக்ஸ் ஜூலை 28 2021**

**52,443.71**



-135.05 ▼

| வீழ்ச்சியடைந்த பங்குகள் | % | ஏற்றம் பெற்ற பங்குகள் | % |
|---|---|---|---|
| கோட்டக் வங்கி | 2.64 | பார்தி ஏர்டெல் | 5.08 |
| டாக்டர் ரெட்டீஸ் | 2.36 | டாடா ஸ்டீல் | 2.60 |
| எம்&எம் | 2.27 | இன்டஸ் இண்ட் வங்கி | 1.71 |
| பவர் கிரிட் | 1.74 | பஜாஜ் ஃபின்சர்வ் | 1.19 |
| என்டிபிசி | 1.68 | ஐசிஐசிஐ வங்கி | 1.13 |

இதனைத்தொடர்ந்து, டாக்டர் ரெட்டீஸ், மஹிந்திரா அண்ட் மஹிந்திரா, பவர் கிரிட், என்டிபிசி, எச்டிஎஃப்சி வங்கி, நெஸ்லே இந்தியா பங்குகளும் இழப்பை சந்தித்த நிறுவனங்கள் பட்டியலில் அடுத்தடுத்த நிலையில் இருந்தன.

அதேசமயம், முதலீட்டாளர்களின் வரவேற்பின் காரணமாக பார்தி ஏர்டெல் பங்கின் விலை 5.08 சதவீதம் அதிகரித்து ஆதாயப் பட்டியலில் முன்னிலை வகித்தது. இதற்கு அந்நிறுவனம் பிரீபெய்டுக்கான கட்டணங்களை உயர்த்தியதே முக்கிய காரணம் என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

பார்தி ஏர்டெல் ஒரு வாரத்துக்கு முன்புதான் போஸ்ட்பெய்டுக்கான திட்டங்களை மாற்றியமைத்தது.

இந்நிறுவனத்தைத் தொடர்ந்து, டாடா ஸ்டீல், இன்டஸ்இண்ட் வங்கி, பஜாஜ் ஃபின்சர்வ், ஐசிஐசிஐ வங்கி, அல்ட்ராடெக் சிமெண்ட் பங்குகளும் 2.60 சதவீதம் வரை ஏற்றம் கண்டன.

மும்பை பங்குச் சந்தையில் புதன்கிழமை நடைபெற்ற வர்த்தகத்தில் சென்செக்ஸ் ஒரு கட்டத்தில் 700 புள்ளிகள் வரை வீழ்ச்சியடைந்து முதலீட்டாளர்களை அச்சுறுத்தலுக்கு ஆளாக்கியது. அதன் பின்னர், நிலைமை ஓரளவு சீரடைந்து சென்செக்ஸ் 135.05 புள்ளிகளை (0.26%) மட்டும் இழந்து 52,443.71 புள்ளிகளில் நிலைபெற்றது.

தேசிய பங்குச் சந்தையில் நடைபெற்ற வர்த்தகத்தில் நிஃப்டி 37.05 புள்ளிகள் (0.24%) சரிந்து 15,709.40 புள்ளிகளில் நிலைத்தது.

இதர ஆசிய சந்தைகளான ஷாங்காய், டோக்கியோ ஆகியவற்றில் வர்த்தகம் சரிவுடன் முடிவடைந்தன. அதேசமயம், ஹாங்காங், சியோல் சந்தைகளில் புதன்கிழமை நடைபெற்ற வர்த்தகம் ஆதாயத்துடன் நிறைவடைந்தன.

அதே போன்று, ஐரோப்பிய சந்தைகளிலும் வர்த்தகம் நேர்மறையாகவே தொடங்கியது.



## டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பில் முன்னேற்றம்

**மும்பை, ஜூலை 28:** அந்நியச் செலாவணி சந்தையில் புதன்கிழமை நடைபெற்ற வர்த்தகத்தில் அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு முன்னேற்றம் கண்டது. இதையடுத்து, இரண்டு நாள் தொடர் சரிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இதுகுறித்து வர்த்தகர்கள் கூறியதாவது: அமெரிக்க மத்திய வங்கி கொள்கை முடிவு மற்றும் நடப்பு வாரத்தில் மாதாந்திர காலாவதி தேதி நெருங்கி வருவது ஆகியவற்றை கருத்தில் கொண்டு செலாவணி சந்தையில் ரூபாய் வர்த்தகம் குறுகிய எல்லைக்குள் மட்டுமே காணப்பட்டது.

வங்கிகளுக்கு இடையிலான அந்நியச் செலாவணி சந்தையில் புதன்கிழமை வர்த்தகத்தின் தொடக்கத்தில் ரூபாய் மதிப்பு 74.44-ஆக காணப்பட்டது. வர்த்தகத்தின் இடையே ரூபாய் மதிப்பு அதிகபட்சமாக 74.31 வரையிலும், குறைந்தபட்சமாக 74.49 வரையிலும் சென்றது. பின்னர் வர்த்தகத்தின் இறுதியில் ரூபாய் மதிப்பு 9 காசு உயர்ந்து 74.38-இல் நிலைத்தது. செவ்வாய்க்கிழமை வரையிலான இரண்டு வர்த்தக தினங்களில் மட்டும் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 7 காசுகளை இழந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.



**அந்நிய முதலீடு:** மூலதனச் சந்தையில் செவ்வாய்க்கிழமை வர்த்தகத்தில் அந்நிய நிதி நிறுவன முதலீட்டாளர்கள் நிகர அளவில் ரூ.1,459.08 கோடி மதிப்பிலான பங்குகளை விற்பனை செய்துள்ளதாக பங்குச் சந்தை புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.

### கச்சா எண்ணெய் விலை 75.05 டாலர்



சர்வதேச முன்பேர சந்தையில் புதன்கிழமை வர்த்தகத்தில் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 0.77 சதவீதம் அதிகரித்து 75.05 டாலருக்கு விற்பனையானதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

## வாகனங்களின் விலையை உயர்த்துகிறது டாடா மோட்டார்ஸ்



**புது தில்லி, ஜூலை 28:** மூலப் பொருள்களின் விலை அதிகரிப்பால் பயணிகள் வாகனங்களுக்கான விலையை உயர்த்த டாடா மோட்டார்ஸ் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் பயணிகள் வாகன வர்த்தக பிரிவின் தலைவர் சைலேஷ் சந்த்ரா பிடிஐ செய்தி நிறுவனத்திடம் புதன்கிழமை தெரிவித்துள்ளதாவது:

கார் தயாரிப்பில் அத்தியாவசிய மூலப் பொருள்களாக விளங்கும் உருக்கு உள்ளிட்ட முக்கிய உலோகங்களின் விலை கடந்த ஓராண்டாக கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. மூலப் பொருள்களின் விலை அதிகரிப்பின் மூலமான நிதி தாக்கம் கடந்த ஓராண்டில் நிறுவனத்தின் வருவாயில் 8-8.5 சதவீதமாக உள்ளது. இதனால், அடுத்த வாரம் முதல் வாகனங்களின் விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் நிறுவனத்துக்கு ஏற்பட்டுள்ளது.

எந்தெந்த மாடல் வாகனங்களுக்கு எவ்வளவு விலையை உயர்த்துவது என்பது குறித்த பணிகளில் நிறுவனம் தற்போது ஈடுபட்டுள்ளது என்றார் அவர்.

இம்மாத தொடக்கத்தில் மாருதி சுஸுகி நிறுவனம் மூலப் பொருள்கள் செலவின அதிகரிப்பை ஈடு செய்ய வாகனங்களின் விலையை ரூ.15,000 வரை உயர்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

சனிக்கிழமைதோறும்
தினமணி சிறுவர்மணி
படியுங்கள்



தினமணி
வியாழக்கிழமை, 29 ஜூலை 2021

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

# கணினி மையக் கருவி உருவாக்கம்: இளம் விஞ்ஞானிக்கு முதல்வர் நேரில் பாராட்டு



தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை புதன்கிழமை சந்தித்து தான் புதிதாக உருவாக்கிய கையடக்க கணினி மையச் செயலாக்க கருவியை காண்பித்து வாழ்த்துப் பெற்ற திருவாரூர் மாவட்ட பழவனக்குடி கிராமத்தைச் சேர்ந்த மாணவர் எஸ்.எஸ்.மாதவ். உடன் அவரது பெற்றோர்.

**சென்னை, ஜூலை 28:** கணினி மையக் கருவியை உருவாக்கிய திருவாரூர் மாவட்ட இளம் விஞ்ஞானி மாதவை, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அழைத்துப் பாராட்டினார்.

திருவாரூர் மாவட்டம் பழவனக்குடி கிராமத்தைச் சேர்ந்தவர் எஸ்.எஸ்.மாதவ். ஒன்பதாம் வகுப்பு படிக்கும் அவர், கணினியில் மிகுந்த ஆர்வம் கொண்டு கையடக்க கணினி மையச் செயலாக்க கருவியை (சிபியு) உருவாக்கியுள்ளார்.

இந்தக் கருவியை இணையதளம் மூலமாக குறைந்த விலைக்கு விற்பனையும் செய்து வருகிறார்.

இதையறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், இளம் விஞ்ஞானி மாதவை நேரில் அழைத்து பாராட்டுத் தெரிவித்தார்.

தலைமைச் செயலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பின் போது, மாதவின் உயர்படிப்பு, ஆராய்ச்சிக்கு தமிழ்நாடு அரசு அனைத்து விதமான உதவிகளையும் செய்யும் என்று முதல்வர் உறுதியளித்ததாக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காஞ்சி சங்கர மடத்தின் வரலாற்று ஆய்வுநூல் வெளியீடு



சங்கர மடத்தின் வரலாற்று ஆய்வு நூலை ஸ்ரீ விஜயேந்திரர் வெளியிட, அதன் முதல் பிரதியை பெற்றுக் கொள்கிறார் சென்னை பொற்றாமரை அமைப்பின் தலைவர் இல.கணேசன்.உடன் நூல் பதிப்பாசிரியர் வி.மகேஷ்.

**காஞ்சிபுரம்,ஜூலை 28:** காஞ்சிபுரம் சங்கர மடத்தின் வரலாற்று ஆய்வு நூலை விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் புதன்கிழமை வெளியிட, அதன் முதல் பிரதியை சென்னை பொற்றாமரை அமைப்பின் தலைவர் இல.கணேசன் பெற்றுக்கொண்டார்.

காஞ்சிபுரத்தை அடுத்த ஓரிக்கை மகா பெரியவர் சதாப்தி மணி மண்டபத்தில் சங்கர மடத்தின் வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. காஞ்சி சங்கர மடத்தின் பீடாதிபதி விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அந்த ஆய்வு நூலை வெளியிட அதன் முதல் பிரதியை சென்னை பொற்றாமரை அமைப்பின் தலைவரும்பாஜக மூத்த தலைவருமான இல.கணேசன் பெற்றுக் கொண்டார்.

விழாவில் இல.கணேசனின் சகோதரர் கோபாலன், நூல் பதிப்பாசிரியர் வி.மகேஷ், சங்கரா கலை, அறிவியல் கல்லூரி முதல்வர் ராம.வெங்கடேசன், காஞ்சி காமாட்சி சங்கர மட வரவேற்புக் குழுவின் தலைவர் வி.ஜீவானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக நூல் ஆசிரியர் வித்துவான் வே.மகாதேவன் நன்றி கூறினார்.

**அறநிலையத்துறைக்கு பாராட்டு:** இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடுகள் வியப்பாகவே இருப்பதாக பாஜக மூத்த தலைவர் இல.கணேசன் தெரிவித்தார்.

அவர் அளித்த பேட்டி:

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடு வியப்பாகவும்,பாராட்டுக்குரியதாகவும் உள்ளன. ஏராளமான சொத்துகளை மீட்டுள்ளனர். இது சுலபமான செயலும் இல்லை.இதற்கு முன்பு இருந்த அரசு இதை செய்திருக்கலாமோ என்ற கேள்வியும் எழுகிறது.

அறநிலையத் துறையின் செயல்பாடுகளைமனதாரப்பாராட்டினாலும்மீட்கப்படும் ஆலயச் சொத்துகளை வேறு யாருக்கும் கொடுத்து விடுவார்களோ என்ற சந்தேகமும் எழுகிறது. ஆனால் ஆலயச் சொத்துகளை வேறு யாருக்கும் கொடுக்கவும் முடியாது.

பாஜகவில் புதிதாகச் சேர்ந்தவர்களுக்கு அவரவர்களது திறமைகளின்படியே பதவிகள் வழங்கப்படுகின்றன. கட்சியில் சேர்ந்த ஒரே ஆண்டில் அண்ணாமலைக்கு பதவி வழங்கப்பட்டிருக்கிறது. 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் பதவிகளிலிருந்து விலகிக் கொண்டு இளைஞர்களுக்கும் தகுதியவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சரவையில் இளைஞர்களுக்கும், அடிமட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பொறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மதுரையில் விரைவில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும்.அதே நேரத்தில் கட்டடம் கட்டுவதற்கான காரணத்தை நான் விவாதிக்க விரும்பவில்லை.

இந்தியாவை 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல்காந்தி ஒரு நாள் கூட தரமான வார்த்தைகளை உபயோகிப்பதில்லை.அதனால் அவரது பேச்சை நான் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை என்றார்.

பேட்டியின்போதுகாஞ்சிபுரம் மாவட்ட பாஜக பொதுச் செயலாளர் கூரம்விஸ்வநாதன், மாவட்டத் துணைத் தலைவர் ஓம்.சக்தி பெருமாள், நகரப் பொதுச்செயலாளர் வி.ஜீவானந்தம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## போர் வெற்றி ஜோதிக்கு மரியாதை.....



1971-ஆம் ஆண்டில் பாகிஸ்தானுடனான போரில் பெற்ற வெற்றியை கொண்டாடும் விதமாக தில்லியிலிருந்து கன்னியாகுமரி வழியாக சென்னை வந்துள்ள வெற்றி ஜோதிக்கு கிழக்கு பிராந்திய கடலோர காவல்படை சார்பில் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி சென்னையில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் கடலோரக் காவல்படை கிழக்கு பிராந்திய தளபதி ஆனந்த் பிரகாஷ் படோலா கலந்து கொண்டு வெற்றி ஜோதிக்கு மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் போரில் பங்கேற்ற 5 முன்னாள் வீரர்கள் பாராட்டப்பட்டனர்.

# குழந்தைத் திருமணங்கள் தடுப்பில் அதிக கவனம் தேவை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

**சென்னை, ஜூலை 28:** குழந்தைத் திருமணங்கள் அதிகளவு நடைபெறும் ஏழு மாவட்டங்களில் தடுப்பு நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

சமூகநலன்மற்றும்சமூகசீர்திருத்தத் துறை செயல்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் அவர் புதன்கிழமை ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின்பேசியது:-

சமூக நலத் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திருமண நிதியுதவி திட்டங்களில் தகுதி வாய்ந்த பயனாளிகள் எவரும் விடுபடாமல் உரிய காலத்தில் பயன்களை அளிக்க வேண்டும். குழந்தைத் திருமணம், பெண்சிசுக் கொலை போன்ற அவலங்களைக் களைய உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதற்கான சட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். குழந்தைத் திருமணங்கள் அதிகமாக நடைபெறும் விழுப்புரம், திண்டுக்கல், ஈரோடு, கரூர்,கிருஷ்ணகிரி,தருமபுரி,தேனி மாவட்டங்களில்அதனைத்தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அதிக கவனம்செலுத்த வேண்டும்.

ஊட்டச்சத்து பற்றாக்குறையால் வரும் உயரக்குறைவு போன்ற குறைபாடுகள் அதிகம் காணப்படும்மாவட்டங்களைக்கண்டறிந்து சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலமாக உருவாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். பாதுகாப்பு தேவைப்படும் அனைத்து குழந்தைகளையும் கண்டறிந்து பராமரிப்பு இல்லங்கள் மூலமாக சிறப்பான கல்வி அளிக்க வேண்டும்.

**வைப்புத் தொகைத் திட்டம்:** கரோனா நோய்த் தொற்று காரணமாகத் தாய், தந்தை அல்லது பெற்றோர்களை இழந்த குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்காக செயல்படுத்தப்படும் வைப்புத் தொகைத் திட்டத்தில் பயன்பெறச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு உதவியுடன் செயல்படும் 129 முதியோர் இல்லங்களை அடிக்கடி பார்வையிட்டு சிறப்பாக இயங்குவதை உறுதி செய்ய வேண்டும். பணிபுரியும் மகளிர் விடுதி இல்லாத மாவட்டங்களில் அவற்றை அமைத்திட வேண்டும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்தக் கூட்டத்தில், அமைச்சர் பி.கீதாஜீவன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

https://t.me/Tamil_epaper2

# அபராதத் தொகையை பெருந்தன்மையுடன் நடிகர் விஜய் செலுத்தியிருக்கலாமே?

## உயர்நீதிமன்றம் கேள்வி

**சென்னை,ஜூலை 28:** தமிழக முதல்வரின் கரோனா நிவாரண நிதிக்கு அபராதத் தொகையான ரூ.1 லட்சத்தை நடிகர் விஜய் செலுத்தியிருக்கலாமே என உயர்நீதிமன்றம் எழுப்பிய கேள்விக்கு, கடந்த ஆண்டே கரோனா நிவாரண நிதியாக ரூ.25 லட்சம் கொடுத்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டில் இருந்து கடந்த 2012-ஆம் ஆண்டு நடிகர் விஜய் ரோல்ஸ் ராய்ஸ் கோஸ்ட் என்ற சொகுசு காரை இறக்குமதி செய்தார். இந்த காரை தென் சென்னை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்ய விண்ணப்பித்தார். அப்போது தமிழக அரசு விதிக்கும் நுழைவு வரியைச் செலுத்த உத்தரவிடப்பட்டது. இந்த நுழைவு வரித் தொகை அதிகமாக உள்ளதால், வரியை ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த 2012-ஆம் ஆண்டு வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம், வழக்கை தள்ளுபடி செய்து, நடிகர் விஜய்க்கு ரூ.1 லட்சம் அபராதம் (வழக்குச் செலவு) விதித்து உத்தரவிட்டார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து விஜய் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். மேல்முறையீட்டை வழக்கை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு, ஒரு வாரத்துக்குள் நுழைவு வரியைக் கணக்கிட்டு நடிகர் விஜய்க்கு வணிக வரித்துறை நோட்டீஸ் அனுப்பவும், அந்த நோட்டீஸை பெற்றுக் கொண்ட நாளில் இருந்து ஒரு வாரத்துக்குள் நுழைவு வரியை செலுத்தவும் உத்தரவிட்டனர். மேலும், நடிகர் விஜய்க்கு ரூ.1 லட்சம் அபராதம் விதித்து தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்தனர். இந்நிலையில், அபராதத் தொகையைச் செலுத்தியது குறித்து தகவல் தெரிவிப்பதற்காக நடிகர் விஜயின் வழக்கு தனி நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது விஜய் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், அபராதம் விதித்து பிறப்பித்த உத்தரவுக்கு இரு நீதிபதிகள் அமர்வு இடைக்காலத் தடை விதித்துள்ளதாக கூறினார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, அபராதத் தொகையை முதல்வரின் கரோனா நிவாரண நிதிக்கு செலுத்தத்தான் உங்கள் கட்சிக்காரர் விஜய்க்கு உத்தரவிட்டேன். வசதி படைத்த அவர் பெருந்தன்மையுடன் அந்த தொகையை முதல்வரின் நிவாரண நிதிக்கு செலுத்தி இருக்கலாமே? என கேள்வி எழுப்பினார். தமிழக அரசுக்கு கரோனா நிவாரண நிதியாக கடந்த ஆண்டே ரூ.25 லட்சத்தை விஜய் கொடுத்துள்ளார். எனவே அபராதமாக விதிக்கப்பட்ட அந்த தொகையை செலுத்த அவர் விரும்பவில்லை என அவர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் தெரிவித்தார். இதனையடுத்து இந்த வழக்கை முடித்து வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

## உள்ளாட்சித் தேர்தல்

# விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு

**சென்னை, ஜூலை 28:** ஊரக உள்ளாட்சித் தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்குப் பதிவுக்கான சாவடிகளை உருவாக்குவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. 76 பக்கங்கள் கொண்ட வழிகாட்டு நெறிமுறையில் 35 பக்கங்கள் வாக்குச் சாவடி அமைப்பதற்கான அறிவுரைகள் கூறப்பட்டுள்ளது.

**கரோனா காலம்:** கரோனா நோய்த் தொற்று காலம் என்பதால் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் ஆயிரம் வாக்காளர்களுக்கு மிகாமல் இருக்கும்படி, வாக்காளர் பட்டியலையும், வாக்குச் சாவடிகளையும் உருவாக்க வேண்டும்.

சட்டப் பேரவைத் தேர்தலில் வாக்குச் சாவடியாக பயன்படுத்தப்பட்ட கட்டடங்களுக்கு முன்னுரிமை தந்து அந்தக் கட்டடங்களிலேயே வாக்குச் சாவடிகளை அமைத்திட வேண்டும். தனியார் கட்டடங்களில் வாக்குச் சாவடிகளை அமைத்திடுவதை தவிர்க்க வேண்டும்.

கட்டடத்தின் நுழைவு மற்றும் வெளியேறுவதற்கு தனித்தனி வழிகள் இருக்க வேண்டும்.

முதியோர்கள்,மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க வசதியாக வாக்குச் சாவடிகளில் சாய்வு தளம் போன்ற சிறப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் மாநிலத் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

**செப்டம்பர் 15-க்குள் தேர்தல்:** தமிழகத்தில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு. திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது. இந்த மாவட்டங்களில் செப்டம்பர் 15-ஆம் தேதிக்குள்ளாக தேர்தலை நடத்தி முடிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவைத் தொடர்ந்து, ஊரக உள்ளாட்சித் தேர்தலை நடத்தும் பணிகளை மாநிலத் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. இதற்கான பூர்வாங்கப் பணிகளைத் தொடங்கியுள்ளது. அதன் ஒருகட்டமாகவே வாக்குச் சாவடி அமைப்பது, வாக்காளர் பட்டியல் தயாரிப்பது போன்ற பணிகளுக்கு வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

மேலும், தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக தேர்தல் ஆணைய அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோருடன் மாநிலத் தேர்தல் ஆணையர் வெ.பழனிகுமார் புதன்கிழமை ஆலோசனை நடத்தினார்.

முன்னதாக, தேர்தல் தொடர்பாக தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பெரியகருப்பன் ஆகியோருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அண்மையில் ஆலோசனை நடத்தியிருந்தார்.

ஒன்பது மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருப்பதன் மூலம் விரைவில் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறைந்தபட்சம் 30 நாள்களுக்கு முன்பாக தேர்தல் குறித்த அறிவிக்கையை மாநிலத் தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும். அதன்படி, செப்டம்பர் 15-க்குள் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டுமென நீதிமன்ற உத்தரவின்படி பார்த்தால், தேர்தலுக்கான அறிவிக்கையை ஆகஸ்ட் 15-க்குள்ளாக வெளியிட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டப்பேரவை நூற்றாண்டு விழா

# தலைமைச் செயலக கட்டடத்தில் 'தமிழ் வாழ்க' பலகை

**சென்னை, ஜூலை 28:** சட்டப்பேரவை நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவப்படம் திறப்பு விழாவை ஒட்டி, தலைமைச் செயலக பிரதான கட்டடத்தின் மேற்புறத்தில் 'தமிழ் வாழ்க' பலகை வைக்கப்பட்டுள்ளது.

சென்னை, தலைமைச் செயலகத்தில் வரும் ஆக.2-ஆம் தேதி சட்டப்பேரவை நூற்றாண்டு விழா கொண்டாடப்படவுள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

நிகழ்வில், குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமைச் செயலக வளாகத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவப் படத்தைத் திறந்து வைக்க உள்ளார். இந்நிலையில் தலைமைச் செயலகத்தின் 2 மற்றும் 3-ஆம் எண் நுழைவு வாயில் கட்டடத்தின் மேல்புறத்தில் 'தமிழ் வாழ்க' என்னும் வாசகம் அடங்கிய 2 பெயர் பலகைகள் புதிதாக வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்பு சென்னை மாநகராட்சி தலைமையகத்தின் மேல்பரப்பில் 'தமிழ் வாழ்க' என்னும் இரண்டு பெயர் பலகைகள் வைக்கப்பட்ட நிலையில் தற்போது சென்னை, தலைமைச் செயலக கட்டடத்திலும் புதிதாக 'தமிழ் வாழ்க' என்னும் இரண்டு பெயர் பலகைகள் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழக அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்க முடிவு

## விரைவில் அறிவிப்பு வெளியாகும்

**சென்னை, ஜூலை 28:** அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அகவிலைப்படி வழங்குவதற்கான முடிவை தமிழக அரசு எடுத்துள்ள நிலையில், அதிகாரபூர்வ அறிவிப்பு ஓரிரு நாள்களில் வெளியிடப்பட உள்ளது.

கரோனா நோய்த் தொற்று காரணமாக, அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு கடந்த ஆண்டு ஏப்ரலில் நிறுத்தி வைக்கப்பட்டது. இதற்கான உத்தரவில், 2021-ஆம் ஆண்டு ஜூலை வரையில் அகவிலைப்படி உயர்வு வழங்குவது நிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**இப்போது அறிவிப்பு:** கரோனா நோய்த் தொற்று காரணமாக, மத்திய அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு வழங்குவது நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில், அண்மையில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்குவதற்கான முடிவு எட்டப்பட்டது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி வழங்கும் போதெல்லாம், தமிழக அரசும் அகவிலைப்படி உயர்வினை அறிவிப்பது வழக்கம்.

மேலும், கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், அகவிலைப்படி உயர்வு வழங்கும் நடவடிக்கையை நிறுத்தி வைக்கும் காலமான ஜூலை மாதம் நிறைவடையவுள்ளது. இதையடுத்து, தமிழக அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு அறிவிப்பு ஓரிரு நாள்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு தற்காலிக இடம் தேர்வு செய்தால் நிகழாண்டில் மாணவர் சேர்க்கை நடைபெறும்

## மத்திய அரசு தகவல்

**மதுரை, ஜூலை 28:** மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான தற்காலிக இடத்தை தேர்வு செய்தால், நிகழாண்டிலேயே எம்.பி.பி.எஸ். மாணவர் சேர்க்கை நடைபெறும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என்று கடந்த 2015 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து மதுரை அருகே தோப்பூரில் சுமார் 201.75 ஏக்கர் நிலத்தில் ரூ.1,264 கோடி மதிப்பீட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 2019 ஜனவரியில் பிரதமர் நரேந்திர மோடி மதுரைக்கு வந்து எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டிச் சென்றார்.

தமிழகத்தோடு சேர்ந்து அறிவிக்கப்பட்ட எய்ம்ஸ் மருத்துவமனைகள் பிறமாநிலங்களில் கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. ஆனால் மதுரையில் மட்டும் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படாமல் உள்ளது.

இதனிடையே, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிரந்தர கட்டடம் கட்டும் வரை தற்காலிக இடத்தில் தொடங்கவும், எம்.பி.பி.எஸ். மாணவர் சேர்க்கை மற்றும் வெளிநோயாளிகள் பிரிவைத் தொடங்கவும் உத்தரவிடக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு வரும் ஜூலை 30-ஆம் தேதி விசாரணைக்கு வரும் நிலையில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை சார்பில் எம்.பி.பி.எஸ். மாணவர் சேர்க்கை தொடர்பாக மத்திய சுகாதாரத்துறைச் செயலர் ராஜேஷ் பூஷன், தமிழக தலைமைச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான தற்காலிக இடத்தை தேர்வு செய்தால் நிகழாண்டிலேயே மாணவர் சேர்க்கை நடைபெறும். செலவினம், அலுவலர் தேர்வு, உள்கட்டமைப்பு ஆகியவற்றை மத்திய சுகாதாரத்துறை ஏற்றுக்கொள்ளும். நிகழாண்டில் மாணவர் சேர்க்கைக்கு தேவையான வசதி, வகுப்பறை, அலுவலகத்துக்கான இடத்தை தேர்வு செய்ய வேண்டும். தற்காலிக இடத்தை தமிழக அரசு தேர்வு செய்தால்,மதுரை எய்ம்ஸில் எம்.பி.பி.எஸ். மாணவர் சேர்க்கை நடைபெறும். இதில் 50 முதல் 100 மாணவர்கள் வரை சேர்க்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

DINAMANI, Vellore Telephone: 2258403 Fax: 2258402 RNI Reg. No. TNTAM/2005/20648. Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Limited., at No. 92/1-2, Sri Balaji Complex, First Floor, Arcot Road, Sathuvachary, Vellore 5, and printed by him at Express Press, "Express Gardens", 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058.
ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan. Vellore, Vol. 17, No.239.
COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.
epaper.dinamani.com